கல்கி

KALKI 10.11.91 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு



ஊதுபத்திகள்:

பெருகிவரும் நறுமணங்கள்...

BPL




உங்கள் வாழ்க்கையின் இணைப்
பிபிஎல் அஜீத்

பிபிஎல் கலர் டிவியின் வரிசையுடன்
பிபிஎல் அஜீத் ப்ளாக் & ஒயிட் 51 cms மற்றும்
36 cms மாடல்களில் எலக்ட்ரானிக் ட்யூனர்களுடன்
உங்களுக்கு கிடைக்கிறது.

உங்கள் கண்களை கவரும் பிபிஎல் அஜீத்
ப்ளாக் & ஒயிட் டிவி புகழ்பெற்ற
பிபிஎல் தரத்திற்கு மேலும் ஒரு சான்று.

இன்றே உங்கள் அருகிலுள்ள டீலரை
அணுகி பிபிஎல் அஜீத் ப்ளாக் & ஒயிட்
டிவியை வாங்கி உங்கள் வாழ்க்கையின்
இணையாக ஆக்குங்கள்

ப்ளாக் & ஒயிட் டிவி



மனதிற்கினிய ஒலி
பிபிஎல்-அஜீத்தின்
ஒளி

KAMERAD-NEWS-BPL-105-91-TAM-R



ஈரம்



ரூ 250/- முதல் பரிசு பெறும் மரபுக் கவிதை

கல்லடியில் உள்ள ஈரம் - சிறுகக்
கசிந்தோடிச் சுனைநீ ராகும்
புல்லுக்குள் உள்ள ஈரம் - பசு
புசித்த பின்னர் பாலாய் மாறும்
எள்ளுக்குள் உள்ள ஈரம் - விளக்கு
எரிப்பதற்கு எண்ணெய் ஆகும்
சொல்லுக்குள் உள்ள ஈரம் - உள்ளம்
தருகின்ற அன்பு ஆகும்

சேற்றுக்குள் உள்ள ஈரம் - செடிகள்
செழிக்கும்நல் உணவு ஆகும்
காற்றுக்குள் உள்ள ஈரம் - மழை
காண்பதற்கு வழியாய் ஆகும்
ஆற்றுக்குள் உள்ள ஈரம் - பஞ்சம்
அப்போது குடிநீ ராகும்.
வார்த்தைக்குள் உள்ள ஈரம் - உள்ளம்
வழங்கிடும் அன்பு ஆகும்.

அரும்புக்குள் உள்ள ஈரம் - தேனீ
அருந்துகின்ற உணவு ஆகும்
நரம்புக்குள் உள்ள ஈரம் - உயிர்
நிலைத்திருக்கும் ரத்தம் ஆகும்
கரும்புக்குள் உள்ள ஈரம் - வெல்லம்
கண்டெடுக்கும் சாறு ஆகும்
கருத்துக்குள் உள்ள ஈரம் - உள்ளம்
காட்டுகின்ற காதலாகும்!

- முத்து. எத்திராசன்



☛ ஊதுபத்தி தயாரிப்பு...

ஊதுபத்திகள்: பெருகிவரும் நறுமணங்கள்...

ஊதுபத்தித் தொழிலில் மட்டும் இன்று இந்தியாவில் 250 கோடி ரூபாய் புழங்குகிறது. கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறது, இந்தத் தொழில்.

இந்துக்கள், முஸ்லீம்கள் என்று யாராயிருந்தாலும் ஊதுபத்தி ஏற்றி வைத்தே பூஜை, மற்றும் மத வழிபாடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள்.

''கந்தந்துவாராம் துராம் தர்ஷாம்' என்கிறது ரிக் வேதம். 'நல்ல மணம் மூலமாகக் கெட்டதைப் போக்கும் அம்பிகையே' என்ற பொருள்பட வருகிறது இந்த ஸ்லோகம்!'' என்று சொன்ன டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் இன்னமும் பல தகவல்களைச் சொன்னார்.

''காற்றில் மணமாக இருப்பவன் இறைவன்' என்று சித்தர்கள் பாடி விட்டுச் சென்றிருக்கிறார்கள். தெய்வீகம் என்றாலே மணம். பஞ்ச பூதங்களில் ஒன்றான காற்று, பகவானுக்கு மணத்தைக் கொண்டு செல்கிறது. பூஜை செய்யும் போது உடல் சுத்தம் மட்டும் நீங்கினால் போதாது; மனச் சுத்தமும் வேண்டும். அதற்கு சுற்றுச் சூழல் ரம்மியமாக இருக்க வேண்டும். அந்த நிலையை ஏற்படுத்த உதவுகிறது நறுமணம். அந்தக் காலத்தில் அகில், சந்தனம் போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள். பின்னர் சாம்பிராணி வந்தது. ஆனால் தற்போது பலருடைய இல்லங்களிலும் காஸ் அடுப்பே இருக்கும் சூழ்நிலையில் - நெருப்புத் தணல் இல்லாத நிலையில் - சாம்பிராணி உபயோகம் குறைந்து போய் விட்டது. அதற்குப் பதில் ஊதுபத்தியையே பலரும் பயன்படுத்துகிறார்கள்.''

முஸ்லிம்கள், வாசனை சமாசாரங்களை அதிக அளவு பயன்படுத்துபவர்கள். 'பாத்தியா' ஓதும் போது, கண்டிப்பாக ஊதுபத்தி புகைந்து கொண்டிருக்கும்.

''நான் நறுமணத்தை விரும்புகிறேன்' என்று 'ஹதிஸி'ல் சொல்லியிருக்கிறார், முகமது நபி (ஸல்). சூழ்நிலையைச் சுத்தமாக - மணமுள்ளதாக வைத்துக் கொண்டிருந்தால்தான் ஒரு மனதுடன் இறைவனை வழிபட முடியும்'' என்கிறார் அரபி மொழிப் பேராசிரியரான ரகமதுல்லா.

ஊதுபத்தித் தொழில் இன்று பெரிய குடிசைத் தொழில். சென்னையில் மட்டும் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊதுபத்தித் தயாரிப்பாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலோர் 'ஏதோ செய்கிறோம்' என்று சொல்கிறார்களே தவிர, உற்சாக வார்த்தைகள் வர மறுக்கின்றன.

ஊதுபத்திக்குத் தேவையான மூங்கில் குச்சிகள், வாசனைத் திரவியங்கள், போன்றவற்றை விற்கும் இளைஞர் அன்சாரி, ''இந்தத் தொழிலைப் பற்றி எழுதாதீங்க ஸார். நல்லவனும் வந்து பாழாயிடப் போறான்'' என்று வருந்திச் சொல்கிறார். ஆனால், சைதாப்பேட்டையில் தொழிற்சாலை வைத்திருக்கும் ஞானாயுதம், இடையில் கொஞ்ச காலம் நிறுத்தி வைத்திருந்த தமது ஊதுபத்தித் தயாரிப்பை மீண்டும் ஆரம்பிக்க இருக்கிறார். இவரின் ஸ்பெஷாலிடி 'தசாங்கப் பௌடர்' தயாரிப்பு.



☛ ராமச்சந்திர ராவ்



☛ ஞானாயுதம்


வெட்டிவேர், விளாமிச்சை வேர், கஸ்தூரி மஞ்சள், பூலாங் கிழங்கு, சடாமஞ்சி, சாம்பிராணித் தூள், சந்தனத் தூள் போன்றவற்றுடன் டஸ்ட் பௌடர் என்ற மரத் தூளைக் கலந்து தசாங்கப் பௌடரைத் தயாரிக்கிறார்கள். இந்த பௌடரைக் கூம்பு வடிவத்தில் வைத்துப் பற்ற வைத்தோமானால், அறையில் வாசனை தூக்கிக் கொண்டு போகும்! ''இப்போது தசாங்கம் கொளுத்தி வைக்கும் பழக்கமும் அதிகமாகிக் கொண்டு வருகிறது'' என்கிறார் ஞானாயுதம்.

ஊதுபத்திகள் பெரும்பாலும் எட்டு அல்லது பத்து அங்குலம் அளவில்தான் தயாரிக்கப்படுகின்றன. முதலில் தேவை மெலிசான மூங்கில் குச்சிகள். கரித்தூள், ஜுகட் பௌடர் என்னும் மரப் பட்டைத் தூள் (ஒட்டிக் கொள்ளும் தன்மையுடையது), டஸ்ட் பௌடர் ஆகிய கலவையைத் தயாரித்து மூங்கில் குச்சிகளை அதில் உருட்டுகிறார்கள். கலவை, குச்சியில் ஒட்டிக் கொண்டதும் எடுத்துக் காய வைக்கிறார்கள். பின்னர் வாசனைத் திரவங்களில் முக்கி எடுத்து மீண்டும் காய வைக்கிறார்கள். ஊதுபத்தி தயார்.

''அது சரி, சந்தன பத்தி என்கிறார்களே! உண்மையில் சந்தனத்தைப் பயன்படுத்துகிறார்களா?''

''உண்மையான சந்தனத்தைப் பயன்படுத்தினால் உங்களுக்கே வாசனை தெரியாது. அதன் விலையும் கட்டுபடியாகாது. அதனால், சந்தன எண்ணெயில் ரசாயனத் திரவம் கலந்துதான் தயாரிப்போம். மல்லிகை, ரோஜா, தாழம்பூ என்று பலவித மலர்களின் வாசனைகளைக் கொடுக்கும் திரவங்கள் தயாராகவே விற்கின்றன'' என்கிறார் ஞானாயுதம். பெரும்பாலான வாசனைக் கலவைகள் உத்தரப்பிரதேச மாநிலத்தில்தான் தயாராகி வருகின்றனவாம்.

☛ பாலகிருஷ்ண சாஸ்திரிகள்



இந்தியாவில் ஊதுபத்தி தயாரிப்புக்குப் பெயர் போன இடங்கள் பெங்களூர், மைசூர். கிட்டத்தட்ட இருநூறுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. உலக அளவில் எடுத்துக் கொண்டால் பிரான்ஸ் தேசம் இந்தியாவுக்கு அடுத்தபடியாக ஊதுபத்தி தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தொழிலில் உள்ள எல்லோருக்குமே கிலி அளிக்கக் கூடிய விஷயம் என்னவென்றால், ஜப்பானிய மக்களும் இப்போது ஊதுபத்திகளை உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்பதும், அதன் காரணமாக ஜப்பானிலும் ஊதுபத்தி உற்பத்தி துவங்கப்பட்டு விட்டது என்பதும்தான்.

ஆயினும் அலபடி ராமச்சந்திரராவ் இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சவில்லை. 'பகவானுக்கும் பக்தனுக்கும் பாலமாய் அமைவது' என்று தமது ஊதுபத்திகளுக்குக் கவர்ச்சிகரமாய் டெலிவிஷனில் விளம்பரம் தருகிறார். அமெரிக்கா, சிங்கப்பூர், பிரான்சு, வளைகுடா நாடுகள் என்று பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி ஈட்டுகிறார்.

ஆந்திராவிலுள்ள ஏலூரில் குடிசைத் தொழிலாக ஊதுபத்தித் தயாரிப்பை ஆரம்பித்தவர், இன்று சுமார் இரண்டாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார்.

''உங்களின் வெற்றிக்கு என்ன காரணம்?'' என்றால், ''தொழிலில் நான் காட்டும் நாணயம்; உழைப்பு என்கிற இரண்டே இரண்டு விஷயங்கள்தான்'' என்கிறார்.

பெரும்பாலும் சாதாரண மக்களால் குடிசைத் தொழிலாகவே நடத்தப்பட்டு வரும் சூழ்நிலையிலும் ஊதுபத்திகளுக்குப் பன்னிரண்டரை சதம் வரி விதித்து, இத் துறையில் ஈடுபட்டுள்ள பலருடைய வருத்தத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறது, தமிழக அரசு.

- ப்ரியன்

படங்கள் : ராஜன்
மேலட்டை வண்ணப் படம் : யோகா

IT HAPPENED WITH PIL



Fresh, juicy apples from Amar Kaul's orchards in Kashmir reach their destinations without wooden packing cases.

Amar Kaul, owner of many orchards in Kashmir, was deeply concerned at the indiscriminate felling of trees for packing cases. And he decided to do something positive about it. He refused to use wooden cases and switched over to modern crates made from ®Hostalen High Density Polyethylene (HDPE). Besides, he also knew that ®Hostalen HDPE crates prove cheaper in the long run.

From packing of horticultural produce in crates to other forms of packaging. From household and other consumer products to agriculture, industry and transportation. From telecommunication to electronics ... and beyond, thermoplastics, like ®Hostalen HDPE, made by PIL are helping bring many technological benefits to a wide spectrum of industry. Covering almost every aspect of human life.

Over 25 years have gone by, and PIL continues to make things happen – on the industrial, agricultural and social fronts.

Pioneering leadership: PIL's role in the Indian petrochemical industry began in 1963, in collaboration with Hoechst AG of Germany, the largest chemical company in the world. In 1968 PIL commenced manufacture of ®Hostalen HDPE. Since then, PIL has entered into collaboration with Monsanto Company of the USA and has access to other world renowned companies for the technological know-how to manufacture high-tech products to improve the quality of life.

R&D – Byword at PIL: But it is not PIL's way to be content with the ways of others. Our R&D Centre is constantly innovating to find simple solutions to complex problems. Like the import-substitution of expensive materials, the manufacture of products with in-house know-how, and the utilisation of wastes. These are just a few of PIL's R&D activities, resulting in major savings in foreign exchange and better utilisation of available resources.

The PIL range: Thermoplastics, Rubber Chemicals, Plastic Processed Products – the PIL product range today, contributes in so many diverse ways to the betterment of human life. Helping translate the Company philosophy 'technology for a better life' into concrete reality.



PIL-Technology for a better life!

PIL

POLYOLEFINS INDUSTRIES LIMITED Mafatlal Centre, Nariman Point, Bombay 400 021



அன்புள்ள அம்மா,

சௌக்கியம்தானே..? ('ஆனந்த் போட்டுத் தந்த காப்பியைக் குடித்த பிறகும் சௌக்கியம்தானே...?' என்று பொருள் கொள்க!)

அடுத்த வருஷம் பிரேமாவை ஒரு நல்ல ஸ்கூலில் சேர்க்க வேண்டும். அத்தானும் சரி, நானும் சரி, அது 'கோ-எட்' ஸ்கூலாக இருந்தால் நல்லது என்று நினைக்கிறோம். இந்த ஊரில் அப்படிச் சொன்னால் 'ஷாக்' அடித்த மாதிரி பார்க்கிறார்கள்...!

இப்படிப் பயந்து பயந்து, பெண் குழந்தைகளையும் ஆண் குழந்தைகளையும் வலுக்கட்டாயமாய்ப் பிரிச்சு அவங்க மனகல வித்தியாசத்தை வளர்க்கணுமா...?

வாலிபப் பருவத்தில திடீரென்று கோ-எட் கல்லூரியில் நுழையும் போது பெரும்பாலான இளைஞர்கள், பெண்கள் தடுமாறிப் போகிறார்கள்... யமுனா, தங்கள் காலேஜ் ஹாஸ்டலில் நடந்த சம்பவத்தைச் சொன்னாள். புதிதாகச் சேர்ந்த மாணவிகள், மாணவர்கள் முன் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள ஒரு நிகழ்ச்சியாம். சிறப்பாக அலங்காரம் பண்ணிக் கொள்வதோடு மிகவும் சுவாதீனமாகவும் பழக வேண்டும் - இதில் தலைசிறந்த பெண்ணுக்குப் பரிசாம்! இந்த நிகழ்ச்சியில் மாணவிகள் மிதமிஞ்ச, மாணவர்கள் கட்டுப்பாடு இழக்க, மிகவும் ரசாபாசமாகப் போய் விட்டதாம். சில பையன்களைக் காலேஜ் நிர்வாகம் 'சஸ்பெண்ட்' பண்ணியிருக்கிறதாம்.

சகோதர பாவத்துடனோ, நட்புணர்வுடனோ இளம் பெண்களும் பையன்களும் பழகவே முடியாதா...? இதற்கான அஸ்திவாரத்தை எந்தக் கட்டத்தில் போடுவதுன்னு பெற்றோரும் ஆசிரியர்களும் கவனிக்கணும். அந்தப் பருவத்துல ஆரோக்கியமான சிந்தனைகளை வளர்த்துக்க அவங்களுக்கு உதவணும். ஆனால் இந்த விஷயங்களைப் 'பளிச்'சென்று மனம் விட்டு யாரும் பேசறதில்லை... 'ஆம்பளைப் பசங்க கூட விளையாடாதே...' 'சும்மா பொண்ணுங்ககிட்டே என்ன பேச்சு...!' என்று negative அணுகுமுறையில மட்டுமே அவங்களைக் கண்டிக்கறோம்.

அரக்கோணம் போன போது பார்த்த பயங்கர விபத்தை அத்தான் விவரித்த போது எனக்குக் கண் கலங்கி விட்டது. ரயிலில் லேடீஸ் கம்பார்ட்மெண்ட்டை அடுத்த பொது கம்பார்ட்மெண்டில் இவர் ஏறியிருக்கார். அதில் ஏகப்பட்ட காலேஜ் பையன்களாம். கதவுக் கம்பியைப் பிடித்துக் கொண்டு, ஓடுகிற ரயிலிலிருந்து உடம்பை வெளியே நீட்டி, வளைத்துப் பக்கத்துப் பெட்டியில் இருந்த காலேஜ் பெண்களைப் பார்ப்பதும் சிரிப்பதும் கலாட்டா செய்வதுமாகப் பயணம்... சொல்லச் சொல்லக் கேட்காமல் இவர்கள் இப்படிச் செய்ய, எதிர்ப்பட்ட கம்பத்தில் மோதிக் கொண்டு ஒரு பையன் அந்த இடத்திலேயே இறந்து போய் விட்டான்!

அரைகுறைக் கல்வியும், நம் சினிமாக்களின் அபத்தமான கனவுப் பிரசாரமும்தான் இத்தகைய சோகங்களுக்குக் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது. எப்போது விடிவு வரும் என்று கவலையாக இருக்கிறது.



அன்புடன்,

- அலமு

வாசகர் யோசனை : பாரதி

அணுசக்தி :

துப்பறியும் துறை முதல் நீர்மூழ்கிக் கப்பல் வரை



டாக்டர் சிதம்பரம்




அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்

அணுசக்தி என்றாலே அழிவுசக்தி என்று மனிதன் நினைக்குமளவுக்கு அவனைப் பயத்தில் ஆழ்த்தியது ஜப்பானி லுள்ள ஹிரோஷிமா, நாகசாகி நக ரங்களின் மீது அமெரிக்கா போட்ட அணுகுண்டுகள். ஆனால் ஆக்க பூர்வமாக அதனை சிறப்பாகப் பயன்படுத்தலாம் என்பதை உலக நாடுகள் பலவற்றுடன் சேர்ந்து இந்தியாவும் நிரூபித்து வருகிறது.

எப்படி என்பதை பம்பாயில் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் டாக்டர். சிதம்பரம் விளக்குகிறார் :

''எங்கள் ஆராய்ச்சியால் முக்கியமாக விவசாயம், மருத்துவம், தொழில் துறை ஆகியன பலனடைகின்றன. அணுமின் நிலையங்களிலிருந்து நாம் பெறும் மின் சக்தி கற்பனைக்கே எட்டாதது. அணுவின் கதிரியக்கச் சிதைவின் போது ஒரு கிராம் ரேடியம் மு ழு க் க ச் சிதைவதால் வெளிப்படும் சக்தி, ஒரு லட்சம் கிராம் பெட்ரோலை எரித்துப் பெறும் சக்திக்குச் சமமானது...'' என்கிறார் இந்த தஞ்சைத் தமிழர்.

டாக்டர் சிதம்பரம் ராஜஸ்தான் பாலை வனத்தில் - போக்ரானில் - 1974 இல் அணு குண்டை வெடித்துச் சோதனையிட்டதில் பெரும் பங்கு வகித்தவர். அன்று இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தினாலும் இந்தியாவுக்கு அணுகுண்டு தயாரிக்கும் நோக்கம் இல்லை என்றும் ஆக்கபூர்வ ஆராய்ச்சிக்காகவே இந்தச் சோதனை நடந்ததாகவும் அரசு உறுதி கூறியது. அணு ஆராய்ச்சியில் நம் பெருமையை உயர்த்திய தற்காக இந்திய அரசு இவருக்கு 'பத்மஸ்ரீ' பட்டம் அளித்து கௌரவித்தது.



☛ மருத்துவத் துறையில்...

''மற்ற எல்லா விஞ்ஞானத் துறைகளிலும் வளர்ந்து வரும் நாடாகக் கருதப்படும் இந்தியா, அணு ஆராய்ச்சியில் மட்டும் உலக அரங்கில் வளர்ந்து விட்ட நாடாகக் கருதப்படுகிறது. இதன் காரணம் நம் விஞ்ஞானிகளின் அறிவுத் திறன்; இந்திய அணு விஞ்ஞானிகளுக்கு முன்னோடியாக விளங்கிய டாக்டர் ஹோமி ஜே. பாபா அவர்களின் தீர்க்க தரிசனம். ''நம் நாட்டில் ஓர் அணு ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கான முயற்சிகளை 1944 மார்ச்லேயே அவர் துவக்கினார். ஏப்ரல் 1948இல் சுதந்திர இந்தியாவில் 'அணு சக்திச் சட்டம்' நிறைவேறியது. அணுசக்திக் கமிஷன் ஆகஸ்ட் '48 இல் நிறுவப்பட்டது. 1954க்குப் பிறகு இதை ஒரு தனி இலாகாவாக மாற்றி, தலைமைச் செயலகத்தை பம்பாயில் நிறுவி, பாபாவையே காரியதரிசியாகவும் ஆக்கியது நம் அரசு. இன்று டெல்லியைத் தவிர்த்து வெளியே தலைமையகம் பெற்று நடக்கும் இலாகாக்கள் இரண்டே! ஒன்று பம்பாயிலுள்ள அணுசக்திக் கமிஷன். மற்றது பெங்களூரிலுள்ள விண்வெளித்துறை'' என்றார் டாக்டர் சிதம்பரம். இதிலிருந்தே இவற்றின் முக்கியத்துவத்தை உணரலாம்.

அணுசக்தி இலாகாவுக்குச் சில விசேஷ நிதிச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது வாங்கும் பொருள்கள், அரசாங்க அங்கீகாரம் பெற்ற கம்பெனிகளிடமிருந்து ரேட் காண்ட்ராக்ட் முறையில்தான் வாங்க வேண்டும் என்பதில்லை. ஆராய்ச்சிக்குத் தேவையான நல்ல தரமுள்ள பொருள்களைப் பார்த்து வாங்கலாம். பட்ஜெட்டிலும் விசேஷ சலுகைகள் கொடுக்கப்படுகிறது. இங்கு பதவி உயர்வு, வேலை நிரந்தரம் முதலியவற்றுக்கு ஜாதி அடிப்படையிலோ, அன்றி யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அங்கீகாரம் பெற்றோதான் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. திறமையும், தகுதியும் இருந்தால் போதும்.

அணுத் துறையின் குறிக்கோள்கள் ஐந்து :

1. அணுத் துறையில் பயன்படும் கனிமப் பொருட்களை நாடெங்கும் தேடி, பின்னர் பிரித்தெடுத்து உபயோகிப்பது.

2. எந்த எந்த வழிகளில் அணுவை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த முடியுமோ, அவற்றிற்காக விரிவான திட்டங்களை அமைப்பது.

3. அணுசக்தி கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் முறைகளைச் செயல்படுத்துவது.

4. இதற்கான அணு உலைகளையும், இவ்வுலைகளில் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருள்களை உருவாக்கும் தொழிற்சாலைகளையும் நிர்மாணிப்பது.

☛ பாபா அணு ஆராய்ச்சி மையம்



அடுத்த இதழில்...

●● குழந்தை வளர்ப்பு
அப்பாவுக்கும் பொறுப்பு
- சிறப்புக் கட்டுரை



5. திறமைமிக்க இந்திய விஞ்ஞானிகளுக்கு அணு ஆராய்ச்சித் துறையில் பயிற்சி அளித்து, அவர்கள் ஆற்றலை வெளிப்படச் செய்வது.

இதன் அடிப்படை யில் நாடு முழுவதும் பரவலாக அணு உலைகள் நிறுவப் பட்டுள்ளன.

"பல கோடி ரூபாய் செலவழித்துச் செய்யப்படும் அணு ஆராய்ச்சியின் பயன்தான் என்ன?"

டாக்டர் சிதம்பரம் விளக்குகிறார் : "இப்போது நம் தேவைக்கான மின் சக்தியை நிலக்கரியிலிருந்தும் அணைத் திட்டங்களிலிருந்தும் பெறுகிறோம். ஆனால் இவை சில ஆண்டுகள் மட்டுமே பலன் அளிக்கக்கூடியவை. நமது நிலக்கரியின் அளவும் குறைந்து கொண்டே வருகிறது. அணைகள் மழையை நம்பியவை. இதனால்தான் மேலைநாடுகளில் மின் சாரம் பெரிதும் அணுசக்தியிலிருந்து பெறப் படுகிறது. பிரான்சின் தேவைக்கான மின் சக்தியில் எழுபது சதம் அணுசக்தியிலிருந்துதான் கிடைக்கிறது. ஜப்பான் அணுகுண்டால் பாதிக்கப்பட்ட நாடு; இருந்தும் அதன் தேவையில் அறுபது சதத்திற்கு மேல் அணுசக்தியிலிருந்தே பெறப்படுகிறது; தென் கொரியாவிலும் அப்படியே. ஆனால் இந்தியாவில் இன்று அணுசக்தியிலிருந்து நாம் பெறுவது நம் தேவையில் வெறும் இரண்டரை சதம்தான். இதை வரும் பத்து ஆண்டுகளில் பத்து சதமாக்கத் திட்டமிட்டிருக்கிறோம்."

"அணு ஆலைகள் நிறுவுவதால் சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கப்பட்டு மக்கள் கதிரியக்கத்திற்குள்ளாகி, பலவித நோய்களுக்கு ஆளாகிறார்கள் என்று கூறப் படுகிறதே?"

"எங்கள் அணு ஆலை மையங்களில் தொழிலாளர்களே நூற்றுக்கணக்கில் வேலை செய்கிறார்களே! அவர்களது பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கா விட்டால் அவர்கள் இங்கே வேலை செய்ய முன்வருவார்களா? அவ்வப்போது வெளியிடப்படும் கதிரியக்கத்தை அளந்து கொண்டேயிருக்கிறோம். எந்தவித தீங்கையும் விளைவிக்காத அளவுக்குள் இருக்கிறதா என்று சதா கண்காணித்தபடி இருக்கிறோம். இதை உறுதி செய்து கொண்ட பின்னரே எங்கள் தொழிலாளரை வேலை செய்யப் பணிக்கிறோம்."

"ஆனால் ரஷ்யாவில் செர்னோபில் அமெரிக்காவில் த்ரி மைல் ஐலண்டு போன்ற அணுஆலைகளில் விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றனவே? அதற்கான சாத்தியக் கூறுகள் இந்தியாவில் இல்லையா?"

"நாங்கள் நான்கு விதங்களில் இவ் விஷயத்தில் விசேஷ அக்கறை காட்டுகிறோம். அணு ஆலை அமைப்பு, அதன் பராமரிப்பு, அதில் வேலை செய்வோருக்கு முழு பயிற்சி, அன்றாடம் ஆபீஸர்கள் மூலம் கண்காணிப்பு - இவைதான் அந்த சிறப்புச் செயல்பாடுகள். மேலும் பிற நாடுகளில் நடந்த விபத்துக்களிலிருந்து பாடம் கற்கி றோம். வெகு வெகு ஜாக்கிரதையாக இருக் கிறோம்."

"விவசாயத்திற்கு அணுசக்தி எப்படி உதவுகிறது?"

"ஆரோக்கியமான நல்ல செடியைத் தேர்ந்தெடுத்து, அதன் செல்கள் மூலமாக அதன் வார்ப்பைப் பெற முடியும். இது டெஸ்ட் ட்யூபில் குழந்தையை உண்டாக்குவது போன்ற ஒருமுறை. இதனால் சந்தனம், மல்பெர்ரி, மிளகு, தக்காளி, பல விதப் பழ வகைகள், இவற்றின் செடிகள், செல் அல்லது டிஷ்யூவிலிருந்து தயாரிக்கப் படுகின்றன. இந்த முறைக்குக் கதிரியக்கக் கனிமங்கள் பெரிதும் உதவுகின்றன. இந்த முறையில் டைஃபாய்டு, ரத்த அழுத்தம் போன்றவற்றைக் குணப்படுத்தக்கூடிய நல்ல மூலிகைகளையும் விரைவாகப் பயிர் செய்கிறார்கள். இந்தக் கதிரியக்கக் கனிமங்களைத் தயாரிக்க அணு ஆராய்ச்சி மையம் உதவுகிறது. இதே கதிருட்டலின் மூலம் விதைகளில் நமக்கு வேண்டிய மாற்றங்களையும் செய்ய முடியும். வேண்டாத மாற்றங்களைத் தவிர்க்கவும் முடியும். நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை கதிரியக்கத்திற்கு உள்ளாக்கி விளைச்சலைப் பன்மடங்கு ஆக்குகிறார்கள். பயிர் வளரும் காலத்தைக் குறைக்கவும் இதே முறையைப் பயன்படுத்துகிறார்கள்" என்ற டாக்டர் சிதம்பரம், "இதே போல்தான் மருத்துவத் துறை

யிலும்...'' என்று அதையும் விளக்க ஆரம்பித்தார்.

''தொடர்ச்சியாகக் கதிர்களை வெளிவிட்டுக் கொண்டிருக்கும் உலோகங்களை 'ஐசோட்டோப்புகள்' என்பார்கள். இவற்றை நோயைக் கண்டுபிடிக்கவும், குணப்படுத்தவும் பயன்படுத்துகின்றனர். பாபா அணு ஆராய்ச்சி மையம் இத்தகைய பல ஐசோடோப்புகளை உற்பத்தி செய்து நூற்றுக்கணக்கான அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு சப்ளை செய்கிறது. அண்டை நாட்டினர் கூட இங்கிருந்து இத்தகைய ஐசோடோப்புகளைப் பெறுகிறார்கள்.''

''தொழில் துறையில் அணுசக்தியின் உபயோகம் எப்படி?''

''முக்கியமாக மின் உற்பத்தி. தொழில் வளப் பெருக்கத்துக்கு இதுதானே அடிப்படை! தவிர, அணுசக்தியை உபயோகித்துக் கப்பல்களையும், நீர்மூழ்கிக் கப்பலையும் செலுத்த முடியும். ஆகாய விமானத்தை அணுசக்தியால் செலுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன. விண்வெளிப் பயணத்திற்கு, ராக்கெட்டுகளைச் செலுத்த முயன்று வருகிறார்கள்.''

''குற்றவியலில் கூட அணு ஆய்வு பயன்படுகிறதாமே?'' என நாம் கேட்க, அமெரிக்காவில் ரசாயனத்தில் டாக்டரேட் பெற்ற மற்றொரு தமிழர் கங்காதரனை அழைத்து நமக்கு விளக்கச் செய்கிறார் டாக்டர் சிதம்பரம்.

''உதாரணமாக, துப்பாக்கியைக் கையாண்ட ஒருவர், அதனால் சுட்டாரா அல்லது கையில் எடுக்க மட்டும்தான் செய்தாரா என்பதை அவரது உள்ளங்கையையும், கட்டைவிரல் - ஆள் காட்டி விரல் இவற்றிற்கு இடையேயான இடத்தையும் கதிரியக்கத்திற்கு உள்ளாக்குவதன் மூலம் நிர்ணயிக்கலாம். ஆர்சனிக் விஷத்தால் ஒருவர் மாண்டார் என்றால் அவரது தலை முடியைக் கதிரியக்கத்திற்கு உள்ளாக்கி அதிலுள்ள ஆர்சனிக் அளவைக் கொண்டு அவர் சரியாக எப்போது இறந்திருக்கக்கூடும் என்று கூறலாம்'' என்றார் கங்காதரன். இப்படி பல உபயோகங்களைப் பட்டியலிட்டார்.

இந்தத் துறை ஆரம்பிக்கப்பட்டபோது 1948-ல் வெறும் ஐம்பதுக்கும் குறைவானவர்களே வேலை பார்த்தார்கள். இன்று சுமார் 33,000 பேர் வேலை பார்க்கிறார்கள். அதில் விஞ்ஞானிகளின் எண்ணிக்கை மட்டும் 3,500 என்றால் நமது அணுசக்தித் துறையின் வளர்ச்சியை எளிதில் புரிந்து கொள்ளலாமே!

- ராஜீவி நரசிம்மன்

தியானம் பண்ணும் அமெரிக்கர்கள் ராயல்டி கொடுப்பார்களா?

'பதிப்புரிமை, மூலவுரிமை (Intellectual Property Rights) பற்றிய சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்' என்று கார்லா ஹில்ஸ் சொன்னதற்குப் பதிலடியாக, ''தியானம், யோகாசனங்கள், தாந்திரீக நிலைகள் போன்ற இந்தியக் கண்டுபிடிப்புகளை லட்சக்கணக்கான அமெரிக்கர்கள் பயன்படுத்தி ஆன்மீய அமைதி பெறுகிறார்களே, அவர்கள் இந்தியாவுக்கு என்ன ராயல்டி கொடுக்கிறார்கள்?'' என்று கேட்கிறார் பூனாவிலுள்ள ரஜனீஷ் ஆஸ்ரமத்தைச் சேர்ந்த டாக்டர் அம்ரிதோ. நியாயம்தானே. பாலயோகி மஹேஷ்யோகி முதல் எண்ணற்றோர் அமெரிக்காவில் தியான மையங்களை நிறுவிப் பயிற்சி அளித்து வருகின்றனர். இவையும் மற்றும் இந்தியத் தத்துவச் சிந்தனைகளும் கார்லா ஹில்ஸ் சொன்ன Intellectual Property Rights-- ன் கீழ் வராதோ? இவர்கள் எல்லோரும் ஒவ்வொரு முறை தியானத்தில் உட்காரும் போதும் ஆளுக்கு ஒரு டாலர் இந்தியாவுக்குக் கொடுத்தால் மில்லியன்கள் தேறுமே என்பது அம்ரிதோவின் வாதம்.

அக்னிவேஷின் ஆத்திரம்!

''அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் ராஷ்டிரபதியைப் பதவி நீக்கம் செய்ய எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார் சுவாமி அக்னிவேஷ். ஆந்திராவில் தாழ்த்தப்பட்டோர் கொலை செய்யப்பட்டதை எதிர்த்துக் கண்டனம் செய்யும் மகஜரைக் கொடுக்க வந்த சுமார் நூறு தாழ்த்தப்பட்ட வகுப்பு எம்.பிக்களைச் சந்திக்க மறுத்ததால் இந்தக் கோரிக்கையாம்.



மன்மோகன்சிங் : அதிர்ச்சி தந்த அறிவிப்பு...

ராஷ்டிரபதி சந்திக்க மறுத்தது நிஜம் தானா?

முன்கூட்டியே கடிதம் எழுதி அனுமதி கேட்டார்கள். யாராவது பத்துப் பேர் கொண்ட குழு வந்து சந்திக்கலாம் என்று அனுமதி கிடைத்தது. இது நியாயமானதும் பாதுகாப்பு விதிகளுக்கு உட்பட்டதுமான முடிவுதான். ''பாதுகாப்பா? எங்களில் யாரும் அபாயகரமானவர்கள் இல்லை'' என்று விதண்டாவாதம் பேசி, நூற்றுச் சொச்சம் பேரும் ஊர்வலமாய் ராஷ்டிரபதி பவனுக்குப் போனார்கள். எதிர்பார்த்தபடியே சந்திக்க மறுத்தார் ஆர்.வி. மகஜர் கொடுப்பதை விட நூறு பேருமாய் நுழைவது முக்கியம் என்பதைப் போலத் திரும்பி வந்தனர் ராம்விலாஸ் பஸ்வானின் தலைமையிலான எம்.பிக்கள்.

மிக மிகக் கடுமையான காலகட்டத்தில் மிக நிதானத்துடனும் விவேகத்துடன் கடமை ஆற்றி வரும் குடியரசுத் தலைவர் மீது மண்ணை வாரி இறைப்பது அவசியம்தானா என்று யோசிக்க வேண்டும் பஸ்வான்.

''இழுத்து மூடுவோம்!''

எதையாவது அதிர்ச்சிகரமாய்ச் சொல்லிச் சகமந்திரிகளைக் கையைப் பிசைந்து கொள்ள வைப்பது வழக்கமாகி விட்டது மன்மோகன் சிங்குக்கு. சர்வதேச நிதி நிறுவனக் கூட்டத்தில் கலந்து கொண்ட இவர் ''புனர்வாழ்வு தர முடியாத அளவுக்கு

ஆரோக்கியத்தை இழந்து விட்ட பொதுத் துறை நிறுவனங்களை இழுத்து மூடுவது தான் ஒரே வழியென்றால் அதைச் செய்வோம்'' என்று கூறி விட்டார். 'இங்கே மந்திரி சபையின் முன் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறாமல் சுமார் பத்து லட்சம் தொழிலாளரைப் பாதிக்கப் போகும் முடிவை பாங்காக்கில் அறிவித்தது பெருந் தவறு' என்றனர் மூன்று காபினெட் மந்திரிகள். தொழிற்சங்கங்களும் இந்த அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன.

''இதனால் வேலையிழந்தவர் துயருறாதபடிக்குப் போதிய 'சமூகப் பாதுகாப்பு வலை' உருவாக்கப்படும். இதற்கு உலகத் தொழில் புனரமைப்பு நிறுவனம் நிதி வழங்கும்'' என்கிறார் சிங். பார்க்கலாம்.



ஆர். வி. : இக்கட்டான காலகட்டத்தில்...

குலுங்கியது பூமி; சரிந்தன வீடுகள்

இந்தியத் துணைக்கண்டமே வடகிழக்காய் வருடத்திற்கு ஐந்தாறு சென்டி மீட்டர்கள் நகர்கிறது என்பதைக் கேட்க அதிர்ச்சியாயில்லை? இந்த வினோத இயக்கத்தினால் எழுந்ததுதான் மிக இளமையான இமயமலை; இன்னமும் வளர்ந்து கொண்டே இருக்கிறதாம்.

கோணிச் சாக்கில் போட்ட பிண்ணாக்கைப் போல நிலப்பாளங்கள் துருத்திக் கொண்டிருக்காமல் அவ்வப்போது ஒரு குலுங்கு குலுங்கிக் கொள்வதால் ஏற்படுவதுதான் அண்மையில் 2000 பேரை விழுங்கிய பூகம்பம். உத்தர காசியில் எல்லா வீடுகளும் தரைமட்டம்.

எதிரொலி தில்லியிலும் கேட்டது. இரவு 2.50க்குப் படுத்திருந்த கட்டில் தடதடக்க வழக்கம் போலப் பக்கத்துத் தண்டவாளத்தில் ரயில் ஓடுகிறதாக்கும் என்று நினைத்தவர்களுக்கு அலமாரியில் இருந்த அனைத்துப் பொருள்களும் வாசித்த ஜலதரங்கத்தைக் கேட்ட போதுதான் விஷயம் புரிந்தது. அந்தப் பின்னிரவில் எல்லோரும் வீட்டுக்கு வெளியே வந்தார்கள்.

நாற்பத்தைந்து விநாடிகள் என்பது எத்தனை நீளமான கால அளவு என்பது அன்றைக்குப் புரிந்தது! இதை விடப் பெரிதாய் - ரைக்டர் அளவு கோலில் 8.5 காண்பிப்பதாய் - விரைவிலேயே இன்னொன்று வர இருக்கிறதாமே!

- இமயவரம்பன்



❐ அமெரிக்காவில், ஷெரீப் உத்தியோகத்திற்கு ஒருவன் போட்டியிட்டான். வோட்டுப் போட்டவர்கள் 5000 பேர். ஆனால் அவனுக்கு ஐம்பது வோட்டுக்கள்தான் கிடைத்தன.


அடுத்த நாள், அவன் கையில் ஒரு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தெருவில் சென்று கொண்டிருந்தான். அந்த ஊர்வாசிகள், அவனைப் பார்த்து, ''உனக்கு துப்பாக்கி எடுத்துக் கொண்டு போக உரிமையில்லை. நீ ஷெரீப் ஆகவில்லை'' என்றார்கள்.

அதற்கு அவன், ''ஐயாயிரம் பேரில் ஐம்பது நண்பர்களே உள்ள நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள துப்பாக்கியில்லாமல் என்ன செய்வது?'' என்று கேட்டான்.

தகவல் : நாடோடி

❐ டெஸ்ட், பந்தயங்களில் ஒரு இன்னிங்ஸை துவக்கி கடைசி வரையில் அவுட் ஆகாமல் இருப்பவரை 'காரிட் த பாட்' என்பார்கள். கடினமான இந்த வேலையைச் செய்த ஒரே இந்தியர் கவாஸ்கர். இரண்டு முறை செய்தவர் மேற்கு இந்திய வீரர் டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ்!

- மஞ்சுதேவன்



ஜெயலலிதா நியாய விலைக் கடை
ஓட்டுக்களையும் ரேஷன் செய்து கொடு!
ஆளுங்கட்சியே ...
ஜெயலலிதா
'நியாய விலைக் கடைகள் முன் அறப்போராட்டம்'
— கருணாநிதி
கருணாநிதி
அநியாயவிலைப் பண்டங்களைக் கொள்ளையடிக்காதே!
வி.பி.சிங்
சரியும் செல்வாக்கு
அப்ப சறுக்கினா என்ன? இப்ப சக்கரம் மேலே ஏறிக்கிட்டுத்தானே இருக்கு!
அயோத்தி சத்யாக்ரகம்
தமிழக மக்கள்
ஜெயலலிதா
அய்யய்யோ... இந்நாரதக்கும், ஈழத் தமிழருக்கும் உள்ள கலாச்சாரத் தொடர்பை அடிச்சி நொறுக்கிறாங்.. கள்ள ...
பிரிவினைவாதம், பயங்கரவாதம்

இறைவா! தலைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்று!

நாட்டைச் சுற்றி நாலாபுறமும் சூழ்ந்துள்ள பெரிய அபாயங்களை நமது தலைவர்கள் சரியாக உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அப்படி உணர்ந்திருந்தால் இப்படி தங்களுக்குள்ளே சின்னச் சின்னச் சண்டைகளை வளர்த்துக் கொண்டு மக்களின் கவனத்தையும் சிதற அடித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்! அல்லது அபாயங்களை உணர்ந்தேதான் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்றால், இவர்களுக்குத் தேச நலனில் அக்கறை இல்லை என்பதும் அதைக் காவு கொடுத்தாவது கட்சி நலனையும் சுயநலனையும் வளர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்பதும் உறுதிப்படும்.

மேற்கே பஞ்சாப்; வடக்கே காஷ்மீர்; கிழக்கே அஸ்ஸாம், மிசோராம் ஆகிய பகுதிகளில் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் மேலோங்குகிறது. இவர்களுக்கு உதவிகள் அளித்துத் தூண்டி விட்டுக் கொண்டிருப்பது, சீனா, பாகிஸ்தான், பங்களாதேசம், பர்மா முதலியன. இந்த இடங்களிலெல்லாம் பிரிவினை வாதிகளையும் பயங்கரவாதிகளையும் நாம் வெற்றி கொண்டு, மக்களை மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் கவர்ந்து, ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்க்க வேண்டியிருக்கிறது.

தெற்கே தமிழக முதல்வரின் தீவிர நடவடிக்கை காரணமாக விடுதலைப்புலிகள் அடங்கி இருப்பது போல் தோன்றினாலும் இது ஒரு தாற்காலிக நிலவரமே. மறுபடி பிரிவினை வாதம் வலுப்பெறும்; விடுதலைப் புலிகளின் அட்டகாசமும் தலையெடுக்கும் என்று நம்புவதற்கு இடமுண்டு. காரணம், ஈழத்தில் இலங்கை ராணுவத்தால் புலிகள் நெருக்கப்படுவதுதான். புலிகளின் இன்றைய பின்னடைவுக்குக் கூடக் காரணம், தமிழகத்தில் காலூன்றிக் கொள்ள அவர்களுக்கு வசதி குறைந்திருப்பதுதான். இலங்கையிலிருந்து அவர்கள் வெளியேற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படுமேயானால் தமிழகத்துக்குத்தான் வந்தாக வேண்டும். புலியாக வருவார்களோ, பூனையாக வருவார்களோ, தெரியாது. வந்தபின் எப்படி மாறுவார்கள் என்றும் சொல்ல முடியாது.

இவையெல்லாவற்றையும் விட நாடு முழுவதையும் பிடித்துள்ள மிகப் பெரிய அபாயம், பொருளாதாரச் சீர்குலைவு. இந்த எதிரிகளையெல்லாம் சந்தித்து, போரிட்டு, வெற்றி கொள்ள இன்று தேவைப்படுவது மக்களிடையே ஒருமித்த சிந்தனையும் 'வெல்வோம்' என்ற மனஉறுதியும் ஆகும். ஒரு போர்க்கால நிலைமையில் மக்கள் எப்படி ஒன்றுபட்டு நடந்து கொள்வார்களோ, அப்படி நடந்து கொள்ள இன்று அவசியம் இருக்கிறது. நேரடி ஆக்கிரமிப்பை விட, ஊடுருவலும் பொருளாதாரச் சீர்குலைவும் அதிக ஆபத்தானவை.

மக்களிடம் சீரிய இலக்கோடு கூடிய ஒருமித்த சிந்தனையையும் செயல்பாட்டையும் வளர்க்க வேண்டியவர்கள் தலைவர்களே. ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள்? வேதாகம பாடசாலை தேவை என்றும் தேவை இல்லை என்றும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்! பஸ் கட்டண உயர்வுக்காக மறியல் செய்து, மக்களையும் தூண்டி விட்டு, நேரத்தையும் செல்வத்தையும் வீணடிக்கிறார்கள். ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயல்பட்டால் பஸ் கட்டண உயர்வை விடப் பல மடங்கு அதிகமான செல்வத்தை மக்களுக்குத் தொழில் - பொருளாதார அபிவிருத்தி மூலம் வழங்க முடியும் என்பதை மறந்து விடுகிறார்கள். வேறு சில தலைவர்கள், கிரிக்கெட் பிட்சைத் தோண்டிப் பாழடித்து ஏதோ பெரிய சாதனை போல் மார் தட்டுகிறார்கள். இந்தியா - பாகிஸ்தான் உறவு மேலும் சீர்கெட வழிவகுக்கிறார்கள். இன்னும் பலர், மசூதியா - கோயிலா என்று குடுமிப்பிடி சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்! இவர்களின் இடையில் புகுந்து கைதாகி, பிராபல்யம் என்ற முடிச்சவிழ்க்கும் வித்தை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் வேறு சிலர்!

தலைவர்கள் நாட்டைக் காப்பது போக, நாட்டைத் தலைவர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் நாம்!



கல்கி

1991
நவம்பர் 10
மலர் : 50
இதழ் : 15
பிரஜோத்பத்தி
ஐப்பசி 24

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

மூக்குக் கண்ணாடிகளுக்கு குட்பை!

ரஷ்யாவில் இப்போது நடந்து கொண்டிருக்கும் புரட்சியைப் போலவே ரஷ்ய டாக்டர்களின் உதவியோடு ஹைதராபாதில் ஒரு மருத்துவப் புரட்சி ஆரம்பமாகியிருக்கிறது. முழு இருட்டிலும், அரை இருட்டிலும் துழாவிக் கொண்டிருந்த கண் நோயாளிகளுக்கு இதன் மூலம் ஒரு புதிய வெளிச்ச ரேகை கிடைக்கும்.

மாஸ்கோவில் உள்ள டாக்டர் ஃப்யூட்ரோவ் (FYODUROV) இருபது ஆண்டுகளுக்கு முன்பே கண்ணுக்குள் செயற்கை லென்ஸ்கள் பதிக்கும் புதிய முறையைக் கண்டுபிடித்தார். இன்று அது பிரபலமாகி, இந்தியாவிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. சாளேஸ்வரம் என்ற காடராக்ட் வந்தவர்களுக்கு அதனை நீக்குவதுடன் உரிய லென்ஸையும் கண்ணுக்குள் பதித்து விடுகிறார்கள். இத்தகைய லென்ஸ்களுக்கு ஸிலிகான் உபயோகிக்கலாம் என்ற கண்டுபிடிப்பும் அவருடையதுதான். மனிதனின் இயற்கையான கண் லென்ஸ், ஒளியைச் செல்ல விடுகின்ற தன்மையில் நாளடைவில் குறைவுபடலாம். ஸிலிகானில் இந்தத் தேய்வு இல்லை.

இந்த ஆபரேஷன் முறையில்தான் புரட்சியே செய்திருக்கிறார்கள். அதாவது, இந்த ஆபரேஷனை 'கன்வேயர் பெல்ட்' முறை மூலம் நடத்தி, இரண்டு நாட்களில் செய்வதை இரண்டு மணி நேரத்தில் முடிக்கிறார்கள்.

தொழிற்சாலைகளில் உறுப்புகளை 'ஒரு மனிதர் ஒரு பாகம்' என்ற அசெம்பிளி முறையில் இணைக்கிறார்கள் அல்லவா? இந்த முறையில் ஆபரேஷன்! ஆபரேஷன் பல ஸ்டேஜ்களாக வகுக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு டாக்டர். கண் நிபுணர் என்பதை விட, கண் அங்கம் ஒவ்வொன்றிற்கும் ஒரு நிபுணர். பிரதமசர்ஜன் அனைத்தையும் மேற்பார்வையிடுகிறார். இந்த அசெம்பிளி முறை ஆபரேஷன் மூலம் ஒரு நாளைக்கு 475 அறுவைச் சிகிச்சைகள் செய்வது சாத்தியமாகிறதாம். இந்த ஆபரேஷன் முறைதான் இப்போது ஹைதராபாதிலுள்ள அப்போலோ மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஏழு வருடங்கள் மாஸ்கோவில் டாக்டர் ஃப்யூட்ரோவ் தலைமையில் பணியாற்றிய டாக்டர் சுரேஷ் மேனன் இந்தியா திரும்பி இந்தப் புதிய மையத்தின் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.


அப்போலா - ஃப்யூட்ரோவ் நிலையத்தின் லட்சியமே மூக்குக் கண்ணாடிக்கு எதிராகப் போர்க் கொடி பிடிப்பதுதான்! பார்வை, குறைவாக இருப்பதால் சிலர் தடிமனான 'சோடா பாட்டில்' மூக்குக் கண்ணாடி போடும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கண்ணாடியை எடுத்து விட்டால் குழப்பம்தான். இதற்கு மயோப்பியா - கிட்டப் பார்வை - என்பது மருத்துவப் பெயர். ரேடியல் கெரடோடோமி என்ற ஆபரேஷன் மூலம் இந்தக் கண்களுக்குப் புதிய ஒளி.

◆ அப்போலோ மருத்துவமனை தலைவர் பிரதாப் ரெட்டி




◆ டாக்டர் சுரேஷ்மேனன்





மூக்குக் கண்ணாடிக்கு ஒரு கும்பிடு!

சிறு குழந்தைகளுக்குப் பரம்பரை காரணமாகப் பிறவியிலேயே கிட்டப் பார்வை ஏற்பட்டு, வயது ஆக ஆக லென்ஸ் பவர், மைனஸ் 8, 10 என்று ஏறிக் கொண்டே செல்லும் பரிதாபம் உண்டு. வளரும் கிட்டப் பார்வைக்கு பால பருவத்தில் விடிவே இல்லை, எனக்



◆ டாக்டர் ஃப்யூட்ரோவ

கருதினார்கள். வயதான பிறகுதான் அச் சிறுவர் சிறுமியருக்கு ஆபரேஷன் செய்ய முடியும் என்பது முந்திய நடைமுறை. ரஷ்ய முறையில் எட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஸ்கிளீரோ பிளாஸ்டி (SCLERO PLASTY) என்ற சிகிச்சையின் மூலம் வளரும் கிட்டப் பார்வையைத் தடுத்து நிறுத்தலாம். சில காலம் கழித்து ரேடியல் கெரெடோடோமி என்ற இரண்டாவது ஆபரேஷன் (8-12 நிமிடங்களில்) செய்து கண்ணுக்கு முழுப் பார்வை பலம் அளித்து விடலாம்.

''இந்தச் சிகிச்சையின் மூலம் பாரம்பரியமாக வரும் கோளாறுகளைச் சரிசெய்ய முடியுமா?''

◆ கண் அறுவைச் சிகிச்சை

''நாங்கள் கண்களில் திருத்தம்தான் செய்கிறோம், இந்த ஆபரேஷன்கள் மூலம். எனவே சிகிச்சை செய்து கொண்டவரின் சந்ததிக்கு வருவதைத் தடுக்க முடியாது'' என்கிறார் இதற்கென ரஷ்யாவிலிருந்து ஹைதராபாத் வந்திருக்கும் நிபுணர் இகர் பிஸ்உ க்ளவ்.

- சுபஸ்ரீ

''தலைவர் ரொம்ப சந்தோஷமா இருக்காரே... ஏன்?''

''அவரைத் தீர்த்துக்கட்டுவோம்னு மிரட்டல் கடிதம் வந்திருக்காம்...!''

''அதுக்கு வருத்தம்தானே படணும்...?''

''இல்லே.. தன்னையும் ஒரு தலைவரா மதிச்சு.. எழுதியிருக்காங்களேங்கிற சந்தோஷம்தான்...!''

- ராஜி ராதா



ஆம்னி பஸ்களில் ஜெ. உருவம்!

◆ இருமல் என்ற நிலையில் அரசு ஆஸ்பத்திரிக்குச் சென்றால் ஆஸ்துமாவை வாங்கிக் கொண்டு வரும் நிலைதான் இன்று பல அரசு ஆஸ்பத்திரிகளில் உள்ளது. இது நீங்க, நீங்கள் கூறிய யோசனைகளை ஒவ்வொரு அரசு ஆஸ்பத்திரியிலும் செயல்படுத்தலாம்.
பி. பி. குளம், ம. செந்தில்நாதன்.

◆ தலையங்க யோசனைப்படி போனஸ் கிரெடிட் கார்டோ, போனஸ் கேஷ் சர்டிபிகேட்டோ கொடுக்க ஆரம்பித்தால்... டாக்டர்கள் தயாரித்து அனுப்பும் போலி நோயாளிகள் புகுந்து, நல்ல மருந்துகளையும் கவர்ந்து சென்று விடுவார்கள்! ஆக இரண்டு விதத்திலும் நஷ்டம்தான்! ஆஸ்பத்திரிகளை நோயிலிருந்து காப்பாற்ற உள்ளூர்ப் பிரமுகர்களைக் கௌரவக் கண்காணிப்பாளராக்குவதே செலவில்லாத சிறந்த வழி!
மதுரை - 9, இரா. கல்யாணசுந்தரம்.

◆ ''தீபாவளி வருகிறது; எண்ணெய்க்கெங்கே போகிறது?'' கட்டுரை ஏற்கெனவே இருக்கும் கவலையை விசிறி விட்டது. என்னதான் எண்ணெயைக் குறைத்து உபயோகித்தாலும், வடை, பூரி போன்ற எண்ணெய்ப் பலகாரங்கள் எதுவுமே செய்யாவிட்டாலும், குழம்பு, பொரியல் போன்றவற்றையாவது தாளிக்க வேண்டாமா? அதற்கே முடியாத விலையுயர்வு இது.
சென்னை - 45, ஏ. ஜஹம்பர் காதர்.

◆ ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தியோடு கொடூரமாகக் கொல்லப்பட்டவர்களில் அவருடைய பாதுகாப்பு அதிகாரியான குப்தாவும் ஒருவர்! அன்று, இந்திய அரசு, குப்தாவின் குடும்பத்தாருக்குத் தேவையான உதவிகள் அளிக்கப்படும் என்று உறுதியளித்தது. ஆனால், குப்தாவின் துணைவியார் உதவி கேட்டு அரசாங்கப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறாராம். உதவி கிடைக்காமல் தவிப்பது மட்டுமின்றி, அந்த அம்மையார் தற்சமயம் வசித்து வரும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வீட்டை உடனே காலி செய்து விட்டு வெளியேற வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்துள்ளதாம்! எல்லோரும் ராஜீவ் பெயரைச் சொல்லித் தங்களை மேம்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்களே தவிர மனிதாபிமானமே இல்லை!
ஆலடியூர், வெள்ளகால் இரா. கந்தையா.

◆ புதுவை சந்திரஹரியின் 'ஏழைமையை விரட்டுவோம்' சிறுகதை ஓர் அற்புதப் படைப்பு. சமூக அவலங்களைச் சித்திரிக்கும் இத்தகைய படைப்புக்களை அவ்வப்போது வெளியிட்டு, அதன் மூலம் இலக்கியத் தரத்தை உயர்த்துவதில் கல்கி எப்போதும் முன்னோடியாகவே திகழ்கிறது.
சாமல்பட்டி, சமுதாயப் பிரியன்.

◆ 'தமிழ் நாட்டில் மதுவிலக்குப் பிரசாரம் செய்ய இளைஞர்கள் பயன்படுத்தப்படுவார்கள்; இதன் மூலம் ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்' என்று கூறியிருக்கிறார் முதல்வர். இந்தத் திட்டம் நடைமுறை சாத்தியம் தானா என்ற ஐயம் தோன்றுகிறது. முன்பு தி. மு. க. ஆட்சியில் மக்கள் நலப் பணியாளர்கள் என்ற பெயரில் அந்தக் கட்சிக்காரர்கள் 35 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது! அதே போல இந்தத் திட்டம் தமது கட்சிக்காரர்களைத் திருப்திப்படுத்தவே முதல்வர் அறிவித்திருக்கிறார் என்ற சந்தேகம் தோன்றுகிறது. நியமன விஷயத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தை நாட வேண்டுமே தவிர, ஆளுங்கட்சியின் மாவட்டம், வட்டம், ஒன்றியங்கள் இதன் உள்ளே புகாதவாறு பார்த்துக் கொள்வது முதல்வரின் பொறுப்பாகும்.
சிதம்பரம் - 1, என். ஆர். பாஸ்கரன்.

◆ சம்பளமாக ஒரு ரூபாய் போதும் என்ற நம் முதல்வர் விழாக்களுக்குப் போனால் பவுன் பவுனாக நினைவுப் பரிசுகளை வாங்கிக் கொள்கிறார்! தனக்கு விழாக்களில் நினைவுப் பரிசோ, நிதிக் குவியலோ வேண்டாம் என்று சொல்லட்டுமே!
திருவட்டார், தா. சிந்துகுமார்.

◆ கலைஞர் ஆட்சியில் ஆம்னி பஸ் சீட் ஒவ்வொன்றையும் 2000 ரூபாய் ஆக்கினார். அதன் உரிமையாளர்கள் கோர்ட்டில் கேஸ் தொடுத்தார்கள். கோர்ட் கடைசியாக 1500 கட்டச் சொல்லியது. இவ்வளவு தொகையிலும் அவர்கள் கொழுக்கத்தான் செய்தார்கள். இன்று ஜெ. வெறும் 500 கட்டச் சொல்லியிருக்கிறார். இதற்கேற்றாற்போல் அவர்கள் டிக்கெட்டை குறைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்களோ அதே காசைத்தான் வசூல் செய்கிறார்கள். ஒவ்வொரு ஆம்னி டிராவல்சிலும் ஜெ. உருவத்தைப் பெரிதாகப் போட்டு நன்றி, நன்றி என்ற ஸ்டிக்கரை ஒட்டுகிறார்கள். ஏன் ஒட்ட மாட்டார்கள்!
தக்கோலம், அ. முஸ்தபா.

◆ 'அந்த மூன்று நாட்கள்' விவகார அலசல் அருமை. பத்மா மாமி போன்றோர் 'அந்த' நாட்களில் தமது மகள், மருமகள்களை கல்லூரி, அலுவலகங்களுக்கு அனுப்பாமலா இருக்கிறார்கள்? கல்லூரி, அலுவலகம் இவற்றிற்கு ஒரு கோட்பாடு, சமையல் கட்டு, விசேஷம் போன்றவற்றிற்கு ஒரு கோட்பாடா? 'ஆதிபராசக்தி' கோவில்களில் இதுபோன்ற 'தள்ளி வைக்கும்' சடங்கு இல்லையாமே? அடித் தொண்டையில் முனகாமல் 'அலமு' இன்னும் சற்று ஆங்காரமாக அங்கலாய்த்திருக்கலாம். இன்றையத் தேவை இது போன்ற அர்த்தமற்ற சாத்திரச் சடங்குகளுக்கு முன்னின்று எதிர்ப்புக் குரல் கொடுக்கும் 'தில்' மனோதிடம்!
ஈரோடு - 4, சி. நாச்சிமுத்து.

ஈஸ்வரி

1. இயக்குனர் இராம. நாராயணனின் படங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுவது யார் யாருக்கு?

2. அவருடைய படங்களில் நிச்சயமாக இடம்பெறும் நிகழ்ச்சிகள் எவை?

3. நடிகர்களின் பங்கு என்ன?

4. கதையம்சம் எந்த அளவுக்கு இடம்பெறுகிறது?

5. 'அம்மன் அருள்' யாருக்குக் கிடைக்கும்?

6. சண்டைக் காட்சிகளில் திருப்பங்களை ஏற்படுத்துவது யார்?

7. ஏமாளிகளாகக் கருதப்பட்டுக் காதில் பூ சுற்றப்படுகிறவர்கள் யார்?

8. ஒரே வரியில் உங்கள் கருத்து என்ன?

அவருடைய படங்களைத் தொடர்ந்து பார்த்து வருகிறவர்கள் இந்தக் கேள்விகளுக்கு மிக எளிதாகப் பதில் சொல்லி விடுவார்கள்.

அப்படித் தொடர்ந்து பார்த்திராதவர்களின் வசதிக்காக இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் இங்கே தரப்படுகின்றன:



1. நாய், குரங்கு, குதிரை. படத்தின் பெரும்பகுதியில் இவற்றின் சாகசங்கள் இடம்பெறும்.

2. எத்தனை பேர் எதிர்த்து வந்தாலும் இந்த மிருகங்கள் அவர்களை எளிதில் அடித்து வீழ்த்தித் துரத்தித் துரத்தி விரட்டி விடும்.

3. நாயகனும் நாயகியும் ஆடிப் பாடிக் காதல் செய்வார்கள். வில்லன்கள் அவ்வப்போது சதித் திட்டங்கள் தீட்டுவார்கள். இக்கட்டான காலகட்டங்களில் நாயக நாயகியைக் காப்பாற்ற முன்வருவதும், வில்லனைச் செயலிழக்கச் செய்வதும் இந்த மூன்று மிருகங்களும்தாம்.

4. அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு அவசியமும் இல்லை.

5. நிச்சயமாக யாரோ ஒரு சிறுமிக்குத்தான். அந்த அருளின் ஆற்றலால் அந்தக் குழந்தையின் கண்கள் அதீதக் கூர்மை பெற, தொடர்ந்து இடி இடித்து மின்னல் மின்னி, வில்லன் அந்தப் பார்வையின் தீவிரத்தைத் தாங்க முடியாமல் நடுநடுங்கிப் பின்வாங்கி விடுவான்.

6. நாய், குரங்கு, குதிரை.

7. வேறு யார்? படம் பார்க்கிறவர்கள்தாம்.

8. அவரே திரும்பத் திரும்பப் பலமுறை அரைக்கும் மாவு.

அது சரி, இந்தப் படம்?

மேற்சொன்ன பதில்கள் இதற்கும் சேர்த்துத்தான்.

– சி. ஆர். கே.

பத்து ஒன்றுக்குப் பரக்கப் பரக்க சீட்டில் வந்து அமர்ந்த தனுஷ், அரை மணி நேரத்துக்கு அக்கம் பக்கம் திரும்பவில்லை. பக்கத்து செக்‌ஷன் உமாவுடன் பேசவும் இல்லை.

காலையில் நடந்த எல்லாவற்றையும் அவளிடம் சொல்லி விட வேண்டும் என்ற தவிப்பு. துடிப்பு. ஆனால் அவள் கேட்கட்டும் என்று காத்திருந்தான். அவன் தோற்றத்தைப் பார்த்தாலே கேட்பாள். தலை மிகக் கலைந்திருந்தது.

கௌண்டர் ஓய்ந்தது. ஆனால் உமா வாயே திறக்கவில்லை. கடைசியில் அவனே தொடங்க வேண்டியதாயிற்று.

''காலையிலே ஃபுல்லா நான்தான் எல்லாம். அதான்!'' என்றான்.

உமா அப்போதுதான் பார்ப்பது போல் அவன் கலைந்த தலையைப் பார்த்தாள். ''ஏன், என்ன?'' என்றாள்.

''மறுபடி சுமதிக்கு உடம்புக்கு வந்திட்டது. லீவும் இல்லை எனக்கு. ஒண்ணும் செய்ய முடியலே. பெட்லேயே படுத்துக்க, இன்ஸ்ட்ரக்‌ஷன் மட்டும் கொ டு ன் னு சொல்லிட்டேன்.''

உமா தன் ஒயிலான நாடியைக் கைத் துண்களில் வைத்தாள். அவன் தொடர்ந்தான்.

''ரெண்டு மணி நேரம் கூட இல்லை. அதுக்குள்ளே எல்லா வேலைகளையும் மு டி ச் சா க ணும். நானும் புறப்பட்டாகணும். காஸ் அடுப்பில் ஒண்ணிலே டிகாக்‌ஷனுக்குத் தண்ணீர் வெச்சேன். இன்னொண்ணிலே சாதத்துக்குத் தண்ணீரைக் கொதிக்க வெச்சேன். ஒரு பக்கம் ஸ்டவ்வில் குளிக்க வெந்நீர் வெச்சேன்.



''பசங்க ரெண்டு பேரையும் எழுப்பி ட்யூஷனுக்கு அனுப்பினேன். ஃபில்டரில் வெந்நீரை விட்டுட்டு அரிசி எடுத்துக் களைஞ்சேன். அதுக்குள்ளே பால் பாக்கெட் வந்தது. சூடாக்கிக் காப்பி கலந்து, அவளுக்கும் கொடுத்து, நானும் குடிச்சேன். தண்ணீர் சூடானதும் அரிசியைப் போட்டேன்.''

''குக்கர் இல்லையா?''

''பயறு மாதிரி இருக்கும். ஒத்துக்காதே வயத்துக்கு...! அப்புறம் தேங்காயைத் துருவி மிளகாய், உப்பு, கருவேப்பிலை சேர்த்து மிக்ஸியிலே சட்னி அரைச்சிக்கிட்டேன். வாணலியில் தண்ணீர் விட்டு நாலு முட்டை கொதிக்கப் போட்டேன். இன்னொரு பக்கம் தோசைக் கல்லைக் காயப் போட்டேன்.''

''தினசரி தோசைக்கு மாவு போட்டுருவீங்களா?''

''நேத்து போட்டிருந்தது. வேறே டிபன்னா இன்னும் கஷ்டம். பசங்க ட்யூஷன் முடிச்சு வந்தாங்க. வெந்நீரை ஊற்றிக் கொடுத்துக் குளிக்கச் சொன்னேன். தோசை சுட ஆரம்பிச்சேன். இடையிடையே வந்து இவங்களுக்கு டிரஸ் எல்லாம் எடுத்துக் கொடுத்தேன். அவங்களை சாப்பிடச் சொல்லிட்டு, மீன் டைம் நான் குளிச்சேன்.

''மு ட் டை க ளை உரிச்க

உதட்டிலிருந்து...

கே.பி.ஜனார்த்தனன்

மசாலாத் தடவி பொரிக்க எடுத்துக்கிட்டேன். இன்னொரு அடுப்பில் ரசம் தாளிச்சேன். இடையில் சுமதியை எழுப்பித் தோசை சாப்பிடக் கொடுத்தேன்.''

''பசி எல்லாம் இருந்ததா?''

''ஒரு ரெண்டு தோசை சாப்பிட்டா. மணியைப் பார்த்தா ஒன்பது. பஸ்ஸுக்கு பத்து நிமிஷம் கூட இல்லே. ஒரே ஒரு தோசை, அதுக்குத்தான் அவகாசம் கிடைச்சது. எப்படியோ ஓடி வந்து பஸ்ஸைப் பிடிச்சுட்டேன்!''

சொல்லி முடித்து விட்டு, கோல் போட்டவன் கூட்டத்தைப் பார்ப்பது போல அவள் முகத்தைப் பார்த்தான்.

உமா முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. ஒரு செகண்ட், தான் சொன்னது அவளுக்குப் புரிந்ததா, ஏதாவது குழப்பியடித்து விட்டோமா என்று சந்தேகம் வந்தது. இல்லையே, அழகாய்க் கோத்துச் சொன்னானே!

''உங்க செக்ஷன்லே ஏதாவது வொர்க் பெண்டிங் இருக்கா?'' என்று கேட்டாள்.

என்ன இவள் பேச்சை மாற்றுகிறாள்?

''அது ஒண்ணும் இல்லை. எனக்குத்தான் கொஞ்சம் கஷ்டமாயிட்டுது. ஆனா காலையிலே அத்தனை வேலையையும் செய்தாத் தானே மூணு பேரும் புறப்பட முடியும்? ஒரு சேலஞ்ச் மாதிரி எடுத்துக்கிட்டு செய்து முடிச்சேன்.'' இவன் அதே விஷயத்துக்கு வந்தான்.

திரும்பவும் பார்த்தான். அவள் முகம் விசேஷ அலைகளை ஒளிபரப்பவில்லை.

தனுஷுக்கு ஆச்சரியம் ஒரு பக்கம். ஏமாற்றம் ஒரு பக்கம்.

உமாவுக்கு அவனை ரொம்பப் பிடிக்கும் என்பதை அவன் அறிவான். அதில் சந்தேகமே இருக்கவில்லை.

காரணமும் அவனுக்குத் தெரியும்.

அந்த ஆ பீ சி ல் உள்ள மற்ற ஆண்களை மாதிரி அல்ல அவன். பெண்களின் நிலை பற்றிப் பெரிதும் பேசுபவன். இதனால் ஆபீசில் ஒரு வித்தியாசமான இமேஜ் அவனுக்கு இருந்தது. அதிலும் பெண்கள் மத்தியில் அவனுக்குத் தனி மரியாதை.

உமா ரொம்ப நேரம் செலவு செய்வது அவனுடன்தான். பத்திரிகைகளில் வரும் பெண்கள் பிரச்னைக் கதை ஒவ்வொன்றையும் அவனுடன் விவாதிப்பவள்.

''பெண்கள் உணர்ச்சிகளை எப்படி சார் நீங்கள் இத்தனை அழகாய்ப் புரிந்து வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்பாள், பார்வையில் வியப்பொழுக.

''ஆணுக்குப் பெண் சமம்'' என்று சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம் அவன் அடித்துப் பேசுவான். ''பெண்களை மட்டும் ஏன் வித்தியாசமாப் பார்க்கணும்? அதுவே தப்பு!'' என்பான். ''ஹியர்! ஹியர்!'' என்பாள் உமா.

அவளா இப்படி வெறுமனே கேட்டுக் கொண்டு நகருகிறாள்? இத்தனை விஷயம் ஒரு பெண்ணுக்காகப் பண்ணி விட்டு வருகிறான். துளி ரியாக்ஷன் இல்லையே?

அவனால் பொறுக்க முடியவில்லை.

அவளிடமே கேட்டு விட வேண்டியது தான். நேரடியாகக் கேட்க முடியாதே? வெட்கமாக இருந்தது. ஒருவேளை நிறைய விஷயங்கள் விட்டுப் போச்சோ? லஞ்ச் டயத்தில் மறுபடியும் அதே பேச்சை எடுத்தான்.

''பாருங்க, இத்தனை காரியம்.. நான் ஒரு ஆம்பளை செய்யறதை வீட்டுக்கு வந்து ஒரு பொம்பளை பார்த்தா அப்படியே அசந்து போவா இல்லே?'' என்றான்.

கேட்டு விட்டான் ஏன் நீ அசரவில்லை என்பதை மறைமுகமாக.

உமா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். இப்போது அவள் கண்ணில் லேசாய் ஆச்சரியம் தலைகாட்டிற்று. ''ஒரு சாதாரணப் பெண் அசருவாளோ மாட்டாளோ நான் அசர மாட்டேன்'' என்றாள் நிதானமாக.


''அப்படியா?'' அவன் கேட்காவிட்டாலும் பார்வை சொல்லிற்று.

''ஏன், ஏன் அசரணும்?'' என்றாள். ''தினசரி நான் செய்துட்டு வர்றதைத் தானே இன்னிக்கு ஒருநாள் நீங்க செய்யறீங்க? அதிலும் ஆணும் பெண்ணும் சமம்னு பேசற நீங்க இப்படிச் செய்யறதைப் பார்த்து ஆச்சரியப்படறதுக்கு என்ன இருக்கு? அப்படி ஆச்சரியப்பட்டால்தானே உங்களுக்கு ஆச்சரியமா இருக்கும்? ஏன், எரிச்சலாக் கூட இருக்கும். உள்ளத்திலே உங்களுக்கு அந்த நிச்சயம் - ஆணும் பெண்ணும் ஒண்ணுங்கற நிச்சயம் - இருக்கிற போது கோபம் தானே வரும்?''

அவனுக்கு வெட்கம்தான் வந்தது. வார்த்தைக்கும் இதயத்துக்கும் உள்ள தூரத்தை எப்படி குறைத்துக் கொள்வது என்று யோசிக்கத் தொடங்கினான்.

கம்ப்யூட்டர் கிராமம்

15



ஷண்பேகர் தன் சட்டையைச் சரியாகப் பார்த்துக் கொண்டு, ''என்ன ஆச்சு?'' என்றான்.

''எங்கேயாவது விழுந்திருக்க வேண்டும், இல்லையா?'' என்றார் செல்வகுமார் கொஞ்சம் கேலியாக.

''ஆம் ஆம்'' என்றான் வலையில் அகப்பட்டு.

''மிஸ்டர் ஷண்பேகர், இப்பக்கூட நீங்க உண்மை சொல்லச் சந்தர்ப்பம் கொடுக்கிறேன். கம் க்ளீன். என்ன நடந்தது?''

ஷண்பேகர் நிச்சயமில்லாமல் பார்த்தான். ''எனக்கு ஒன்றும் தெரியாது'' என்றான். ''ஐ நீட் எ லாயர்.''

''உங்கள் சட்டை பட்டன் எப்படி இறந்து போன செல்வியின் கை முஷ்டிக்குள் வந்திருக்கும்?''

''எனக்கு பட்டன் எதும் தெரியாது.''

''இதோ பட்டன். கலர் பொருத்தம் இருக்கிறது'' என்றார் எஸ்பி, அவன் மார்பைப் பார்த்துக் கொண்டு. ''ஷண்முகம் அரஸ்ட் பண்ண ஏற்பாடு செய்யுங்க'' என்றார்.

ஷண்பேகர், ''என் நண்பனுடன் பேச வேண்டும்'' என்றான்.

''பேசி விட்டு உண்மையாக நடந்ததைச் சொல்லலாம். நீங்கள் இந்தப் பெண்ணைக் கொல்லவில்லைதானே?''

''இல்லை. நிச்சயம் இல்லை.''

''இதை நிரூபிக்க நீங்கள் உண்மையை மறைக்கக் கூடாது. பெண்ணை உங்கள் அறைக்கு அழைத்துச் சென்றதோ அல்லது 'சைட்'டில் அவளுடன் சல்லாபித்ததோ இப்போது இரண்டாம் பட்சம். இது கொலை. இதில் சம்பந்தப்பட்டவர் நீங்கள். உண்மையைச் சொன்னால்தான் மற்ற உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியும்.''

''நான் என் நண்பனுடன் பேச வேண்டும்'' என்றான் ஷண்பேகர் பிடிவாதமாக.

''தாராளமாக.''

ஷண்பேகரும் மனோஜும் வெளியே வந்து மரத்தடியில் போட்டிருந்த சிமெண்டு பெஞ்சில் உட்கார்ந்தார்கள்.

''ஷன் என்ன ஆச்சு, சொல்.''

''முதலில் எனக்கு லாயருடைய உதவி வேண்டும்.'' நடுங்கும் கரங்களால் சிகரெட் பற்றவைத்துப் பேசினான்; உதடுகளும் துடித்தன.

''ஷன், நீ அந்தப் பெண்ணை சினிமாக் கொட்டகையிலிருந்து சைட்டுக்கு அழைத்துச் சென்றாயா?''

''ஆம். கம்ப்யூட்டர் கற்றுக் கொடுப்பதற்கு.''

''யாரும் நம்ப மாட்டார்கள். அதையே திரும்பத் திரும்ப சொல்லாதே. கம்ப்யூட்டர் கற்றுக் கொடுப்பதற்குச் சட்டை பட்டன்களை உதிர்க்கத் தேவையில்லை.''

''மனோஜ், நண்பனே..! நீயும் இ ந் த ச்

சுஜாதா


சமயத்தில் என்னைக் கைவிடக் கூடாது. நீயும் என்னைச் சந்தேகிக்கக் கூடாது.''

''அதற்கு நீ உண்மையை மறைக்கக் கூடாது.''

''அந்தப் பெண்ணை அழைத்துச் சென்றேன். அவள் என் பக்கத்தில் வந்து, என்னவோ தமிழில் சொல்லி விளையாடினாள். அவளை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்று கன்னிப் பெட்டிகளின் மேல் கம்ப்யூட்டர் மேன்யுவல்களையெல்லாம் போட்டு பாக்கிங் மெட்டிரியல் அமைத்துப் படுக்கை செய்தேன்.''

''மை காட்!''

''அவளுடன் கொஞ்சம் சல்லாபமாக இருந்த போது, பெண்ணுக்கு என்ன ஆயிற்றோ, என்னை அப்படியே இழுத்து அணைத்துச் சட்டையெல்லாம் கலைத்துக் கழற்றி ரொம்பக் கலாட்டா பண்ணி விட்டாள். ஒருவிதமான தாகம் போல, வெறி போல, தீராத மையல் போல, இட் வாஸ்



வயலண்ட் ப்ரிமெட்டிவ்...''

''.....''

''அதன்பின் எப்போது எ ழு ந் து போனாள் எ ன் று தெரியவில்லை. வெளியே பேச்சுக் குரல் கேட்டது. அவளை யாரோ அழைத்துச் செல்வது போலத் தெரிந்தது.''

''யார், சொல்ல முடியுமா?''

''சரியாகத் தெரியவில்லை. பண்டிதர் மாதிரியும் இருந்தது. அல்லது... ஐம் நாட் ஷ்யூர்.''

''சரியாகப் பார்த்தாயா?''

''இல்லை.''

மனோஜ் யோசிக்கையில் ஷண்பேகர், ''இப்போது நான் என்ன செய்வது?'' என்றான்.

''யு ஆர் இன் ஆல் ஸார்ட்ஸ் ஆஃப் ட்ரபிள். இருந்தும் நடந்ததை நடந்தவாறே சொல்லி விடுவதுதான் உசிதம்.''

''மனோஜ், என் மேல் சந்தேகப்படு கிறாயா? எனக்கு அவளைக் கொல்லக் காரணம் ஏதும் இல்லை.''

''ஏதாவது தற்செயலாக விழுந்து, விபத்து ஏற்பட்டு அதிலிருந்து...''

''இல்லை, இல்லவே இல்லை. வி ஜஸ்ட் ஹாட் எ குட் டைம். அவ்வளவு தான்! அந்த கணத்தின் சந்தோஷ உச்சியில் அவள் என் சட்டைப் பித்தானை அபகரித் திருக்க வேண்டும், மனோஜ், மனோஜ்! நான் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்.''

''சொல்லிப் பார்.''

''லாயர் வரும் வரை ஏதும் சொல்லத் தயாராயில்லை என்று சொல்லி விடவா?''

''உன் இஷ்டம். மாஜிஸ்திரேட் ஆர்டர் இல்லாமல் அவர்கள் உன்னைக் கைது பண்ண முடியாதல்லவா?''

''முடியும். நியாயமான சந்தேகம் இருந் தால் செய்யலாம்.''

''என்ன பேசியாச்சா?'' என்றார் செல்வகுமார். அருகில் வந்து, ''ஒங்க ப்ரண்டுகிட்ட புத்தி சொல்லுங்க. நாங்க மற்ற எல்லாத்தையும் போலத்தான் அவர் பேர்லயும் சந்தேகப்படுறோம்.''

''இவர் மேல கொஞ்சம் சந்தேகம் அதி கமா இருக்காப்பல...''

''ஆமாங்க. பெண்ணை அழைச்சுப் போயிருக்காரு. பெண்ணு கைல இவரு சட்டைப் பொத்தான் இருக்குது! அதி லிருந்து போலீஸ் என்ன நெனைக்கும் சொல்லுங்க? மனோஜ், இந்தாளு, சாமா னியப்பட்ட ஆளு இல்லைங்க. பாத்தா பூனைக் கண்ணை வச்சுக்கிட்டு சாது மாதிரி இருக்காரு. கிராமத்தில எல்லாப் பெண் ணுங்ககிட்டேயும் ஏதாச்சும் வம்பு பண்ணி யிருக்காரு. தகவல் வந்திருக்கு. பதிமூணு வயசுப் பெண்ணு, கருப்பாயினு. எப்பவும் கூடவே கூட்டி வெச்சுக்கிட்டு இருந்திருக் காரு, எதுக்காக?''

''அது வந்து கம்ப்யூட்டர் பாடம் கத்துக் கொடுக்கறதுக்குன்னு சொல்றான். அவன் ஒரு மாதிரிங்க. எஜுகேஷன் கல்வி முறைங்க எல்லாத்திலியும் பரிசோதனை பண்ணிக்கிட்டு இருப்பான். கிராமத்து அறியாத சனங்களுக்குக் கூட கம்ப்யூட்டர் கத்துக் கொடுக்கலாம்னு நம்பிக்கை. அத னாலதான் பெண்ணுங்களைக் கூட்டி வெச் சுக்கிட்டு...''

''யாராவது நம்புவாங்களா இதை! சொல்லுங்க? மேலும் அந்தப் பெண்ணை பலாத்காரம் பண்ணிருக்கான். போராடிக் கிட்டு இருந்திருக்கா. போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்ல தெரியுது!''

''எங்கேயாவது விழுந்து கிழுந்து மண்டை உடைஞ்சிருக்கும். என்ன பண் ணான்? பேசாம அதை எடுத்து மரத்தில தொங்க விட்டுட்டான். தற்கொலையே இல்லைங்க! ஸ்கல் இன்ஜுரி இருக்குது.''

ஷண்பேகர் புரியாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். ''என்ன சொல்கிறீர்கள்? ஆங்கிலத்தில் சொல்லக் கூடாதா?''

மனோஜ், ''ஷண் தி மாட்டர் இஸ் சீரியஸ்'' என்றான்.

''மிஸ்டர் ஷண்பேகர், ஐம் கோயிங் டு அரஸ்ட் யு அண்ட் ரிமாண்ட் யு டு போலீஸ் கஸ்டடி!''

ஷண்பேகர், ''ஃபார் வாட்?'' என்றான்.

''இந்தப் பெண்ணைக் கொன்றதற் காக.''

''லுக் இன்ஸ்பெக்டர்! நான் இந்தப் பெண்ணை அழைத்து வந்தேன். அழைத்து வந்தபின் மனோஜ் சொல்லியிருப்பான், இவளுடன் சல்லாபம் செய்தது உண்மை தான். ஆனால் நான் அவளைக் கொல்ல வில்லை. என்னிடமிருந்து விலகும் போது அவள் முழுசாக உயிருடன் இருந்தாள். இதை நான் உங்கள் முனியப்பன் மரத்தின் மேல் வேண்டுமானாலும் சத்தியம் அடித்துச் சொல்லத் தயாராக இருக் கிறேன்!''

''மிஸ்டர் செல்வகுமார், இவனை ஷண் கொல்லுவதற்குக் காரணம் என்ன?''

''மர்டர் இல்லை. மேன்ஸ்லாட்டர் ரேப்.''

''மை காட்! இட் வாஸ்ன் தட் அட் ஆல்'' என்று பயத்துடன் சிரித்தான். ''ஐம் 'இன் எ மெஸ்!'' என்றான் ஷண்பேகர்.

''ஷண்முகம்'' என்றார் செல்வகுமார்.

''பஸ் செலவுக்காக உனக்கு மாதம் நூறு ரூபாய் உன் அப்பா கொடுத்தால் மாத முடிவில் மீதி எவ்வளவு இருக்கும்?''

''பணம் போதாமல் வாங்கிய கடன் ஐம்பது ரூபாய் இருக்கும் சார்!''

- வி. ராஜேஸ்வரி



இன்ஸ்பெக்டர் ஷண்முகம், கான்ஸ்டபிளைக் கூப்பிட அவர் கைவிலங்கு கொண்டு வந்தார்.

அதைப் பார்த்ததும் ஷண்பேகர் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அங்கிருந்து ஓட ஆரம்பித்தான். யார் யாரோ ''பிடி பிடி'' என்று சொல்ல, அவன் 'நேரு மிதிவண்டி நிலையம்' என்கிற சைக்கிள் கடையிலிருந்து சைக்கிள் வரிசையிலிருந்து முழு வரிசை சரிய ஒரு சைக்கிளை எடுத்துக் கொண்டு அதன் மேல் பாய்ந்து தெருச் சந்தடியில் வேகமாக மிதித்துக் கொண்டு விரைவில் மறைந்தான். இரண்டு கான்ஸ்டபிள்களும் துரத்த, பின்னாலேயே ஜீப்பை கிளப்பிக் கொண்டு ஒரு கோஷ்டி செல்ல, ஷண்பேகரின் தலை அந்த மார்க்கெட் சந்தடியின் ஊடே மிதப்பதைக் கவலையுடன் மனோஜ் பார்த்தான்.

ஷண்முகம் சிரித்தார். ''ரேடியோவில் சொல்லிடுங்க. சிறுபிள்ளை மாதிரி பிஹேவ் பண்றான் பாருங்க. இந்த ஆள் மேல சந்தேகம் உறுதியாயிருச்சு! ஊரை விட்டு வெளியே போக ரெண்டே பாதை தான் இருக்குது. மத்தியானத்துக்குள்ள பிடிபட்டுருவாரு. அதுக்குள்ள உங்களைப் பார்க்க வந்தா, புத்தி சொல்லுங்க'' என்றார் எஸ். பி.

மனோஜுக்குக் கவலையாக இருந்தது.

டிஸியின் வீட்டுக்கு வந்த போது ப்ரமிளா உட்கார்ந்திருக்க நித்யா, ''என்ன ஆச்சு?'' என்றாள்.

''ஷண்பேகர் ஓடிப் போய்ட்டான்.''

''அய்யோ எங்கே?''

''சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடிப் போய் விட்டான்.''

''ஏன்?''

''அந்தப் பெண்ணுக்கும் அவனுக்கும் சம்பந்தமிருந்திருக்கு. பயந்துட்டான்... வில்லி.''

''அப்பாகிட்டயிருந்து தந்தி வந்திருக்கு. என்னைக் கூட்டிப் போக வரார். மெட்ராஸுக்குப் போகலாமா?'' என்றாள் ப்ரமிளா.

''எனக்குக் கவலைல இப்ப தலை சுத்துது. என்ன பண்ணுவேன்? ஸாட்டிலைட் வெப்பனா, ஷண்பேகரைப் பிடிப்பனா... உன்னை மெட்ராஸ் கூட்டிட்டுப் போவேனா?''

மத்தியானம் வரை ஷண்பேகரை அவர்கள் பிடிக்கவில்லை என்று தெரிந்தது. எங்கே போயிருப்பான் என்று தெரியவில்லை. ஸைட்டில் கான்ஸ்டபிளும் அவன் விடுதியில் ஒரு கான்ஸ்டபிளும் டிஸியின் வீட்டில் ஒருவரும் காத்திருந்தார்கள், ஷண்பேகர் வந்தால் பிடிப்பதற்கு. யோசித்துப் பார்த்தான். சாலை மருங்கில் பரவியிருந்த நூற்றுக்கணக்கான வைக்கோல் போர்களில் ஒன்றில் அவன் மறைந்து கொண்டிருக்க முடியும் என்று தோன்றியது. இருந்தும் அவன் செய்த காரியம் அசட்டுத்தனமானதாகப் பட்டது. அவன் மேல் சந்தேகம் வரும்படியாக நடந்து கொண்டு விட்டான். அவன் திருடிச் சென்ற சைக்கிளை செடுப்பாக்கம் நெடுஞ்சாலையின் ஓர் ஓரத்தில் அனாதையாகப் பார்த்தார்கள். பத்திரிகைகளிலிருந்து நிருபர்கள் வந்து போட்டோ எடுத்தார்கள்.

''கொலைகாரர் தலைமறைவா இருக்காருங்களாமே'' என்று டிஸியை கேட்ட போது, அவர் ''கொலைகாரர்னு எழுதாதீங்க. அவரு ஏதோ பயத்தில இருக்காரு...''

''நீங்கதான் மனோஜ்ங்களா?''

''ஆமாங்க.''

''இந்த ஸட்டிலைட்டு நிறுவறதால தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன லாபங்க தீங்க?''

''எனக்கு நாங்க செய்யறது சரியான்னே சொல்ல முடியலிங்க. இன்னும் பத்தாம் நூற்றாண்டிலேயே இருக்கற கிராமத்தில இருபத்தோறாம் நூற்றாண்டுச் சாதனத்தை அமைக்கிறதுன்னா...''

''இந்த மிஷினை நிறுவறதுக்கு யாரைக் கூப்பிடுவீங்க? நரசிம்மராவையா புரட்சித் தலைவியையா?''

''கொலை விழுந்து போச்சே! மாற்றிடுவீங்களா இடத்தை?''

அபத்தமான கேள்விகள்; அபத்தமான பதில்கள்.

ராத்திரி ஆகியும் ஷண்பேகரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

(தொடரும்)

போட்டிக்கதை - 11

எல்லோருக்குமான நேசம்

சுப்ரபாரதிமணியன்

முதுகில் ஏதோ பதிவது போலிருந் தது. சிவக்கண்ணனுக்கு, சட்டென விழிப்பு வந்துவிட்டது.

அவன் சகாக்கள் அவனை எழுப்புவது வெகு ஜாக்கிரதையாக இருக்கும். சொல்லி வைத்த மாதிரி முதுகில் மூன்று முறை தட்டுவது. 'சிவா சிவா....' என்ற குரல்கள் இருக்கும். ஏதோ ஆபத்து என்கிற மாதிரி தான் உணர்வான்.

ரோந்து போகிற போலீஸ் தன் சகாக் களை அள்ளிப்போட்டு, சந்தேகக் கேஸில் தள்ளும்போது எப்படியும் தகவல் கிடைத்துவிடும். யாராவது வந்து தகவல் சொல்லி விடுவார்கள். பெரும்பாலும் இப்படி முதுகில் தட்டுகிற சமிக்ஞையாகத் தான் இருக்கும். இன்றைக்கு முதுகில் பதிந்தது போலீஸ்காரரின் கைத்தடி என் பதை விழித்து உட்கார்ந்த கணத்திலேயே கண்டு கொண்டான் சிவக்கண்ணன்.

''என்னடா திருட்டு நாயே.... திரு டிட்டு வந்து சொகமாத் தூங்கறியே... சுத்த மான திருட்டைப் பண்ணிட்ட சந்தோ ஷமா....?''

பேப்பர் பொறுக்க கையில் எப்போதும் வைத்திருக்கும் அழுக்கு பிளாஸ்டிக் சாக் கைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். கொஞ்சம் சில்லறை இருக்கும் என நினைத்தான். நாளை காலை நாஷ்டாவுக்கு சரியாகப் போய்விடும் என்றிருந்தது. சில்லறை கலகலத்தது.

''என்னடா பொண்ணு கொலுசு மாதிரி சத்தம் கேக்குது. எந்தப் பொண்ணு கலை வெட்டிக் கொண்டு வந்தே?''

அந்த போலீஸ்காரரின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான் சிவக்கண்ணன். பி-12 போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்தவர். இப் படித்தான் நடுராத்திரிகளில் எங்காவது தூங்கிக் கொண்டிருந்தவனை எழுப்பிப் பல தரம் வேலை தந்திருக்கிறார். இன் றைக்கு என்ன வேலை காத்திருக்கிறதோ! வருத்தமாக இருந்தது.

முன்பெல்லாம் சிவக்கண்ணனும், அவ னுடன் பேப்பர் பொறுக்கும் சகாக்களும் காந்தி மண்டபத்தில்தான் படுத்துக் கிடப் பார்கள். அங்கெல்லாம் ஏதாவது விசே



ஷங்கள் என்று வந்து போலீஸ் தொந்தரவுகள் இருந்துவிடுவதால் இப்போதெல்லாம் இடம் கிடைக்கிற பகுதியில் தூங்கிக் கொள்வது என்றாகிவிட்டது. போலீஸ் ஸ்டேஷன் இல்லாத ரோட்டை தேர்ந்தெடுத்துக் கொள்வான் சிவக்கண்ணன்.

இருந்தாலும் அவர்களின் பிடியிலிருந்து தப்பிக்க முடிந்ததில்லை. சில சமயம் இழுத்துக் கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷன் கக்கூலை கழுவச் சொல்வார்கள்; போலீஸ் ஸ்டேஷன் உள்புறங்களைத் தண்ணீர் ஊற்றிக் கழுவச் சொல்வார்கள். எஸ்.ஐ. வீட்டிற்கு ஜீப்பில் கூட்டிக் கொண்டு போய் ஏறத்தாழ இது மாதிரியான சுத்தம் செய்கிற வேலையைத் தருவார்கள்.

கல்யாணச் சமயங்கள் என்றால் சிரமமாக இருக்கும். போலீஸ் அதிகாரிகள் வீடுகளில் இவ்வளவு ஆண்களும், பெண்களும் கல்யாணத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்களா என்று ஆச்சர்யப்படும்படி நிறைய கல்யாணங்கள் இருக்கும். ஏதிலாவது வேலை இருக்கும். இழுத்துக் கொண்டு போய்விடுவார்கள். வரமுடியாது என்று போலீஸ்காரரின் குண்டாந்தடிக்கு முன் சொல்லி விட முடியாது. உடம்பு படப்போகும் காயங்களை நினைத்துப் பயப்பட்டு போலீஸ்காரரின் பின்னால் நடக்க வேண்டியிருக்கும்.

எப்படியும் அவர்கள் வேலை நடந்து முடிக்கத் தேவையான பேப்பர் பொறுக்கும் பையன்கள் ஒவ்வொரு முறையும் போலீஸ்காரர்களுக்குக் கிடைத்து விடுவது பற்றி ஆச்சர்யமாகவே இருக்கும் சிவக்கண்ணனுக்கு.

''என்னடா பாக்கறே... என்ன திருடினே.... கலகலக்குது....''

''சில்லறைங்க...''

''என்ன சில்லறைங்கறே... நீ சில்லறையா நான் சில்லறையா...?''

''சில்லறை பைசாவச் சொன்னேன் சார்....''

''சரி... என்ன திருடினே சொல்லு....''

''பேப்பர் பொறுக்கறேன் சார்.... அவ்வளவுதான். அசந்து தூங்கிட்டிருந்தேன். எழுப்பிட்டீங்க...''

''எழுப்புனது தப்புங்கறையா... உடம்பைப் புண்ணு பண்றேன்.... தப்பா சரியான்னு சொல்லு....''

போலீஸ்காரர் சிவக்கண்ணனின் தலைமுடியைப் பிடித்தார். விர்ரென்று மேலே இழுத்தார். மயிர்க்கால்கள் குத்திட்டு வலி தந்தது அவனுக்கு. ''அய்யோ'' என்றான். குண்டாந்தடி போலீஸ்காரரின் கையிலிருந்து உயர்ந்தது.





(பஸ்ஸில் தூங்கிக் கொண்டிருந்தவர் திடுக்கிட்டு எழுந்து): ''அதுக்குள்ளாற மேலூர் வந்திடுச்சா! சொன்னபடி எழுப்பி னதுக்கு ரொம்ப தாங்க்ஸ்.''

''மோதிரத்தையும் , கடிகாரத்தையும் கழற்றடா முட்டாளே. பஸ்ஸிலே நாங்க கொள்ளையர் புகுந்திருக்கறது கூடத் தெரியாமல் அப்படி என்ன தூக்கம்?''

- கரம்

''தப்பு சார்.. மன்னிச்சுருங்க...'' தடா லெனக் காலில் விழுந்தான். தன் சகாக் களுடன் துடுக்காய்ப் பேசுவது போல போலீஸ்காரருடன் பேசினது எவ்வளவு தப்பு என்றிருந்தது.

''எந்திரிடா. கால்ல வுழுந்ததுனாலே தப்புச்சே....'' சிவக்கண்ணனின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கைகளைக் கூப்பி இருந்தான். போலீஸ்காரர் குண்டாந் தடியைக் கை விறைப்பிலிருந்து தளர்த்தி னார்.

''என்னடா... போலீஸ்காரன் வந்ததும் என்ன பண்ணனும்னு கேட்டுக்கிட்டு முழங்கால்ல மண்டி போட வேணாமா?''

''சொல்லுங்க சார்.. செய்யறேன்...''

''வா வழிக்கு... சிவன் கோவில் தெரு வுல ஒரு காளை மாடு ரகளை பண்ணித் திரிஞ்சுக்கிட்டிருக்கு. எஸ்.ஐ. புடின்னு என்கிட்ட சொன்னார். நான் எதுக்குப் புடிக் கணும். உன்னெ மாதிரி பேப்பர் பொறுக் கற பையன்க எதுக்கு இருக்காங்க... எத்தனை பேரை அது குத்திக் கொன் னிருக்கு... கால்ல தள்ளியே எத்தனை பேரைக் காயம் பண்ணியிருக்கு.... நான் குத்திச் சாகவா.... போடா... வெடியறதுக் குள்ள புடுச்சு போலீஸ் ஸ்டேஷன் காம்ப வுண்ட்லே கட்டு.... இல்லைன்னா நாளைக்கு பி-12 ஏரியாவிலே எங்கயும் படுக்க மாட்டே... தப்பிக்க முடியாது. இன்னிக்கு ராத்திரி முடியலியா... நாளைக்குப் பகல்லே அலைஞ்சு இழுத் துட்டு வா.....''

சிவக்கண்ணனின் கையிலிருந்த சாக் கைப் பிடுங்கினார் போலீஸ்காரர்.

''நாளைக்கு வந்து போலீஸ் ஸ்டே ஷன்லே வாங்கிக்க....''

நாளை காலையிலான நாஷ்டா பணம் சில்லறையாய், ஒரு சர்ட்டும், அரைக்கால் பேண்டும், ஒரு போர்வை, சீப்பு.. அப்புறம் அம்மா எழுதின கடிதங்கள் கொண்ட சிறு பை ஒன்று உள்ளே இருந் தது. திக்கென்றது.

''கண்டிப்பா மாட்டைப் புடுச்சு வர்றேன் சார்..... சாக்கைக் குடுத்தி ருங்க...''

''என்னடா பெரிய பொக்கிஷமா....?''

''சர்ட்.... எங்கம்மா எழுதின கடுதாசிக....''

''அம்மா லவ்லெட்டர் எழுதியிருக்காளா... கனவுக் கன்னி அம்மா போலிருக்கு....''

ஏதாவது கோபமாய்ச் சொல்ல வேண் டும் போலிருந்தது. உதட்டைக் கடித்து கோபத்தை அடக்கிக் கொண்டான். சரமாரி யாய்க் கெட்டவார்த்தைகளை மனத்தில் உதிர்த்தான். சைக்கிள் கேரியரில் இருந்த கயிற்றை வீசியெறிந்தார் போலீஸ்காரர். முகத்தில் விழுந்தது.

''எவ்வளவு சீக்கிரம் புடுச்சுக்கிட்டு வர்றியோ... நல்லது. உனக்கும் தூக்கம் மிச்சம்.... எனக்கும் மிச்சம்..''

சைக்கிள் விர்ரென்று நகர்ந்தது. வாயி னுள் அடக்கி வைத்திருந்த கெட்ட வார்த் தைகள் சரமாரியாய் வெளிவந்தன. பக்கத் தில் கிடந்த கல்லொன்றை எடுத்து வீசி னான். பத்தடி தூரம் அப்பால் விழுந்தது.

சிவன் கோவில் தெற்குப் பிராகாரம் பக்கம் அந்த மாடு நின்றிருந்தது. எதையோ அப்போதுதான் தின்று முடித்திருந்தது போல வாயைப் பெரிதாய் அசைத்துக் கொண்டிருந்தது. அது வெளிச்சத்தில் பளீ ரெனத் தெரிந்தது. கொம்புகளை அளவாய் வெட்டிவிட்டது போல அரைகுறையாய் இருந்தது. நிறையப் பேரை முட்டியிருப் பதைக் கேள்விப்பட்டிருந்தான். இன் றைக்குச் சுலபமாய்த் தான் பலியாவதை நினைத்துக் கொண்டான்.

கோவில் காம்பவுண்ட் சுவரில் ஏறி உட்கார்ந்து கொண்டான். ஆசுவாசப் படுத்திக் கொள்ள வேண்டும் போலி ருந்தது. கையிலிருந்த கயிற்றின் முனையில் சுருக்கு இட்டான். ஒரு வீச்சில் கழுத்து மாட்டிக் கொண்டால் எவ்வளவு சுலபமாக இருக்கும் என நினைத்தான்.

சுருக்கு இறுக்கமாக இருக்கிறதா என்று உறுதிப்படுத்திக் கொள்ள இருகைகளிலும்

கயிற்றை இழுத்தபோது சொல்லி வைத்த மாதிரி, இலக்கு தனக்குதான் என்பதை அறிந்தது போல் விர்ரென்று வந்த மாடு அவனை முட்டித் தள்ளியது. காம்பவுண்ட் சுவர் ஓரம் போய் விழுந்தான். மாடு மிக அருகில் இருப்பதை அதன் சீற்றமான மூச்சு மிக நெருக்கத்தில் உணர்வதிலிருந்து அறிந்தான். காம்பவுண்ட் சுவரில் வைத்துத் தள்ளிக் கால்களை அவன் உடம்பில் வைத்தால்போதும், உயிர் போய் விடும். ''அய்யோ'' என்றான் பெரிதாய்.

ஜன நடமாட்டம் எதுவுமில்லை. அவன் கதறல் யாரையும் எட்டவில்லை என்பது போல் திரும்ப அவன் காதுகளில் எதிரொலித்தது. பயந்து கொண்டே ஓடினான். நந்தி பீடத்தின் மேல் ஏறிக் கொண்டான். மாடு பீடத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. அவன் நந்தியின் மேல் உட்கார்ந்து இறுக்கிக் கொண்டான். 'அய்யோ சாமி....' என்பதான எண்ணம் மனத்தில் வர விலகினான்.

என்ன நினைத்தானோ பீடத்திலிருந்து கீழே குதித்தான். ஓட ஆரம்பித்தான். மாடு அவனைக் குறி பார்த்துத் துரத்தியது. குளம்படிகள் தார்ரோட்டில் பட்டு சப்த முண்டாக்கின. மூச்சு வேறு புஸ்புஸ் ஸென்று வெளிவந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் ''அய்யோ அய்யோ'' என்றான். இம்முறை அவன் குரல் நிஜமான கதறலாகத்தான் இருந்திருக்க வேண்டும். பாதை ஓரத்துக் கடைகளுக்குக் காவல் போல் படுத்துக் கிடந்த இருவர் எழுந்தனர். ''அடப்பாவி மகனே'' என்றான் ஒருவன்.

மூச்சு வாங்கியது சிவக்கண்ணனுக்கு. 'என்ன நடந்தாலும் நடக்கட்டும்; நின்று விடலாம்' என்றிருந்தது. ஒரு நிமிடம் நின்றான். மாடு பக்கத்தில் வந்து விட்டது. அவனைக் கீழே தள்ளியது. எங்கேயோ ரத்தம் வழிவதைக் கையில் ரத்தம் பட்டிருப்பதிலிருந்து அறிந்து கொண்டான். அதற்குள் மாடு இன்னொரு முட்டு முட்டியிருந்தது. பன்னிரெண்டு வயதுப் பையன் மாடு முன் துச்சமாகி விட்டது தெரிந்தது. உடம்பின் காயங்களை அவற்றின் எரிச்சல், வலி மூலம் உணர்ந்தான்.

காம்பவுண்ட் மதிலையொட்டி ஓடினவன் மதிலைத்தாண்டிக் குதித்தான். இப்போது மதிலுக்கு இரு புறங்களில் மாடும், அவனுமாக இருந்தார்கள். அவன் தலைக்குக் கீழாக மதில் உயரம் இருந்தது. மாடு இந்தப்புறம் வர வேண்டுமானால் சுலபமாக வரமுடியாது. குதித்துத் தாண்டியும் வந்து விட முடியாது. ஆறுதலாக இருந்தது.

மூச்சு இவ்வளவு வேகமாக வந்து போய்க் கொண்டிருக்கிறதா என ஆச்சர்யப்பட்டான். ஆசுவாசப்படுத்திக் கொண்டான். மாடும் மூச்சைச் சீராக்கிக் கொண்டிருப்பதாய்ப் பட்டது.

கையிலிருந்த கயிறு இன்னும் நழுவி விடாதது ஆச்சர்யமாகவே இருந்தது. சுருக்கைப் பார்த்தான் பலமாகவே இருந்தது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டவன் போல் கயிற்றை வீசினான்.

துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது. மாட்டின் கழுத்தில் சரியாகச் சுருக்கு விழுந்திருந்தது. இறுக்கிக் கொண்டது. இரு கைகளிலும் கயிற்றைக் கட்டிக் கொண்டான். பரபரவென்று விடுவித்து இடுப்பில் கட்டிக் கொண்டான். என்ன செய்வது என்று விளங்கவில்லை. மாடும் கால்களைப் பரப்பி விடுபட முயன்று கொண்டிருந்தது.

''அட பயலே... புடுச்சிட்டயா...''

தூங்கின முகத்தோடு வந்தவன் சிவக்கண்ணனைப் பார்த்துச் சிரித்தான். சிவக்கண்ணனுக்கும் சிரிக்க வேண்டும் போலிருந்தது. முகத்தசைகள் வலியை உண்டு பண்ணின. சிரிப்பது எவ்வளவு கஷ்டமாகி விட்டது என்றிருந்தது. முகத்தில் வலது கையை வைக்க எரிச்சலானது.

பின்னால் வந்தவன் ஒருவன் எங்கேயோ தேடிப்பிடித்து கயிறு ஒன்றைக் கொண்டு வந்தான். விறுவிறுவென மாட்டின் பின் பக்கம் கட்ட ஆரம்பித்தான். நுனியைக் கைகளில் இறுக்கிக் கொண்டான்.

''எத்தனை பேரைக் காயம் பண்ணியிருப்பே.. கைகாலை முறிச்சிருப்பே... இன்னிக்கு மாட்டிக்கிட்டே.'' அவன் சந்தோஷமாய்ச் சொன்னான்.

''ஏண்டா பயலே... உனக்கெதுக்குடா இந்த வேலை. மாடு பிடிக்கறது....''

''போலீஸ்காரன் ஒருத்தன் புடிக்கச் சொன்னான். அதுதா....''

''பேப்பர் பொறுக்கறவனா...''

''ஆமா...''

''போலீஸ்காரர்களுக்கு பேப்பர் பொறுக்கறவங்கன்னா எளப்பம்தா....'' சொல்லிவிட்டுச் சிரித்தான். ''சபாஷ்'' என்றான்.

''போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் இழுத்துட்டுப் போகணும் வர்றியா?''

கெஞ்சுகிற குரலில் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

''தூக்கம் முழிச்சாச்சு. இன்னும் என்ன... வர்றேன்.''

மதிலுக்கு இருபுறங்களிலும் சிவக்கண்ணனும், அவனுமாகக் கயிற்றை இழுத்துக் கொண்டு மாட்டை நகர்த்தினார்கள். அடுத்ததெருதான் போலீஸ் ஸ்டேஷன். சமாளித்து விடலாம் என்றிருந்தது.

''உனக்குத்தான் எத்தனை காயமடா பயலே... போலீஸ்காரன் நாசமாப் போக.''

''ஆமா பாருங்க....'' சிவக்கண்ணனின் கண்களில் நீர் வழிந்தது. இவை ஆறுவதற்கு பல நாட்கள் ஆகிவிடும். நிறையச் செலவாகும். அம்மாவிற்கு அனுப்பும் பணத்தைச் சரியாக அனுப்ப முடியாதபடி டாக்டர் செலவுகள் வந்து விடுமோ என்று பயமாக இருந்தது. இந்தக் காயங்கள் என்றால் பரவாயில்லை. இதற்கு மேல் உடம்புக்கு வந்துவிடக்கூடாது என்றிருந்தது.

போலீஸ்காரன் மகனுக்கு இப்படி உடம்பில் காயம்பட்டிருந்தால் அவன் எப்படித் துடிப்பான் என யோசித்தான் சிவக்கண்ணன். சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கும் போலீஸ்காரன் மகனை இப்படியொரு மாடு முட்டிச் செத்துப்போன போன் தகவல் வர, அலறியடித்து மகன் சடலத்தைப் பார்க்க போகிற கற்பனை ஒரு நிமிஷம் மனத்தில் வந்தது. 'இதற்கெல்லாம் அவன் அனுபவிப்பான்' என்று கற்பனையை நியாயப்படுத்தினான்.

சட்டெனத் தலையைக் குலுக்கிக் கொண்டான். உடம்பின் மீது இருந்த ரத்தத் துளிகளைப் பார்த்தான். உடம்பு வலி உச்சமாக இருந்தது. தன் கற்பனை எவ்வளவு மோசம், அசிங்கம் எனச் சொல்லிக் கொண்டான். பிறருக்குத் தீங்கு நினைப்பது கோரம் என்று நினைத்தான். அம்மாவின் கடிதங்கள் எப்போதும் இதைத்தானே சொல்லும் என்பது ஞாபகம் வந்தது.

அம்மாவின் கடிதங்களைக் கசங்காமல் போலீஸ்காரன் வைத்திருக்க வேண்டும். அதற்காக நன்றி சொல்ல நினைத்தான். உடம்பு வலியை ஒரு நிமிஷம் மறந்து ''அம்மா'' என முணுமுணுத்தான்.

''ஆபீஸ்லே எல்லோரும் தூங்குவதைத் தடுக்க, திடீர்னு டேப்ரிக்கார்டரில் 'ஜனகணமண' வைச்சுப் பார்த்தது என்ன ஆச்சு?''

''எல்லோரும் எழுந்து நின்று தூங்கினாங்க!''

- விஜயா கண்ணன்



சிவகாமியின் சபதம்

பதினேழாம் அத்தியாயம்

சின்னக் கண்ணன்

ஏறக்குறைய ஒன்றரை ஆண்டு காலம் பிரிந்திருந்த பிறகு, சிவகாமியும் கமலியும் சந்தித்த போது, அந்த இளம் பிராயத் தோழிகளுக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியை விவரிக்க முடியாது.

ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டார்கள்; ஒருவருடைய தலையை ஒருவர் தோளில் வைத்துக்கொண்டு கண்ணீர் விட்டார்கள்! விம்மி அழுதார்கள்; திடீரென்று சிரித்தார்கள்; ஒருவரை யொருவர் வாழ்த்திக் கொண்டார்கள்; உடனே வைது கொண்டார்கள்.

இருவரும் ஏக காலத்தில் பேச முயன்றார்கள்; பிறகு இருவரும் சேர்ந்தாற்போல் மௌனமாயிருந்தார்கள்.

அந்த ஒன்றரை வருஷத்துக்குள் இருவருடைய வாழ்க்கையிலும் எத்தனை எத்தனையோ முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்திருந்தன. அவற்றில் எதை முதலில் சொல்வது எதை அப்புறம் சொல்வது என்று நிர்ணயிக்க முடியாமல் தவித்தார்கள். அந்தப் பிரச்னையை அவர்களுக்காகச் சின்னக் கண்ணன் தீர்த்து வைத்தான்.

தொட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை, தான் விழித்துக்கொண்டு விட்டதை ஒரு கூச்சல் மூலம் தெரியப் படுத்தியதும், கமலி ஓடிப் போய்க் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு வந்தாள்.

சிவகாமி சின்னக் கண்ணனைக் கண்டதும் சற்று நேரம் திகைத்துப்போய், பார்த்தது பார்த்தபடி நின்றாள். வெளிப் படையில் அவள் ஸ்தம்பித்து நின்றாளே தவிர, அவளுடைய உடம்பின் ஒவ்வோர் அணுவும் அப்போது துடித்தது. அவளுடைய இதய அந்தரங்கத்தின் ஆழத்திலிருந்து இதுவரை அவளுக்கே தெரியாமல் மறைந்து கிடந்த ஏதோ ஓர் உணர்ச்சி பொங்கி வந்து, மளமளவென்று பெருகி, அவளையே முழுதும் மூழ்கடித்து விட்டது போலிருந்தது.

''ஏனடி இவ்விதம் ஜடமாக நிற்கிறாய்? சின்னக் கண்ணன் உன்னை என்ன செய்தான்? இவன் பேரில் உனக்கு என்ன கோபம்?'' என்று கமலி கேட்டதும், சிவகாமி இந்தப் பூவுலகத்திற்கு வந்தாள்.

''கமலி! இவன் யாரடி? எங்கிருந்து வந்தான்? எப்போது, வந்தான்? - என்னிடம் வருவானா?'' என்று சிவகாமி குழறிக் குழறிப் பேசிக் கொண்டே இரண்டு

அமரர் கல்கி

கைகளையும் நீட்ட, குழந்தையும் சிவகாமியின் முகத்தைத் தன் அகன்ற கண்கள் இன்னும் அகலமாக விரியும்படி பார்த்துக் கொண்டே, அவளிடம் போவதற்காகக் கைகளையும் கால்களையும் ஆட்டிக் கொண்டு பிரயத்தனப் பட்டது.

''உன்னிடம் வருவானா என்றா கேட்கிறாய்? அதற்குள் என்னவோ மாயப் பொடி போட்டுவிட்டாயே! கள்ளி - மாமல்லருக்குப் போட்ட மாயப்பொடியில் கொஞ்சம் மிச்சம் இல்லாமல் போகுமா?'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே கமலி குழந்தையைச் சிவகாமியிடம் கொடுத்தாள்.

மாமல்லரைப் பற்றிக் குறிப்பிட்டது சிவகாமிக்குக் குதூகலத்தையும் நாணத்தையும் ஒருங்கே அளித்தது. அவள் குழந்தையைக் கையில் வாங்கி மூக்கும் விழியும் கன்னமும் கதுப்புமாயிருந்த அதன் முகத்தைப் பார்த்துக் கொண்டே, 'ஆமாண்டி அம்மா, ஆமாம்! நீ கண்ணனுக்குப் போட்ட மாயப் பொடியில் கொஞ்சம் மீத்துக் கொடுத்ததைத்தானே நான் மாமல்லருக்குப் போட்டேன்? - பார்! அப்படியே அப்பாவின் முகத்தை உரித்து வைத்தது போலிருக்கிறது! கமலி! இவன் அப்பா எங்கே?'' என்று கேட்க, கமலி, ''இது என்ன கேள்வி? மாமல்லர் எங்கே இருக்கிறாரோ, அங்கேதான் இவன் அப்பா இருப்பார்!'' என்றாள்.

''ஓஹோ! அப்படியானால் அண்ணனும் இன்று அரண்மனையில்தான் இருந்தாரா? சபையில் என்னுடைய நாட்டியத்தைப் பார்த்திருப்பார் அல்லவா? நீ ஏனடி வரவில்லை?'' என்று சிவகாமி கேட்டதும் கமலி, ''என்ன தங்கச்சி உளறுகிறாய்? உன் அண்ணனாவது நாட்டியம் பார்க்கவாவது? உனக்குத் தெரியாதா, என்ன? மாமல்லர் தான் தெற்கே பாண்டியனோடு சண்டை போடுவதற்குப் போயிருக்கிறாரே?'' என்றாள்.

இதைக் கேட்டதும், சிவகாமிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில், தன் மடியில் இருந்த குழந்தையைக் கூட மறந்துவிட்டு எழுந்தாள். குழந்தை தரையில் 'பொத்' என்று விழுந்து, 'வீர்' என்று கத்திற்று. கமலி அலறும் குரலில், ''அடிப்பாவி! ஏனடி குழந்தையைக் கீழே போட்டாய்? நீ நாசமற்றுப்போக! உன்னைப் புலிகேசி கொண்டு போக!'' என்றெல்லாம் திட்டிக் கொண்டே, சின்னக் கண்ணனை எடுத்து மார்போடு அணைத்து இப்படியும் அப்படியும் ஆட்டிக் கொண்டே, ''வேண்டாமடா, கண்ணே! வேண்டாமடா!'' என்று சமாதானப்படுத்தினாள். குழந்தை மீண்டும் மீண்டும் வீரிட்டு அழுதவண்ணம் இருக்கவே, கமலி கோபங் கொண்டு ''அடே, வாயை மூடுகிறாயா? அல்லது புலிகேசியை வந்து உன்னைப் பிடித்துக் கொண்டுபோகச் சொல்லட்டுமா?'' என்றாள். குழந்தை அதிகமாக அழுதால் இந்த மாதிரி புலிகேசியின் பெயரைச் சொல்லிப் பயமுறுத்துவது வழக்கமாயிருந்தது. அதனால் தான் சிவகாமியையும் மேற்கண்டவாறு சபித்தாள்.

குழந்தை ஒருவாறு அழுகையை நிறுத்தியதும் அதைக் கீழே விட்டு விட்டுக் கமலி சிவகாமியைப் பார்த்தாள். அவளுடைய திகைப்பைக் கவனித்துவிட்டு, ''தங்கச்சி! மாமல்லர் பாண்டியனோடு யுத்தம் செய்யப் போயிருப்பது உனக்குத் தெரியாதா, என்ன?'' என்று கேட்டாள்.

''தெரியாது, அக்கா!'' என்று சிவகாமி உணர்ச்சி பொருந்திய கம்மிய குரலில் கூறினாள். தான் சபையில் நடனமாடியபோது, மாமல்லர் எங்கேயோ மறைவான இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருப்பார் என்று எண்ணியதை நினைத்து ஏமாற்றமடைந்தாள்.

ஆம்! கமலி சொல்வது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். மாமல்லர் மட்டும் இங்கு இருந்திருந்தால் அந்தக் காட்டுப் பூனையின் முன்னால் தன்னை ஆட்டம் ஆடச் சொல்லிப் பார்த்துக் கொண்டிருப்பாரா?

மாமல்லர் இல்லாத சமயத்தில் புலிகேசியின் முன்னால் தான் ஆடியதை நினைத்தபோது சிவகாமிக்கு இப்போது அசாத்திய வெட்கமாயிருந்தது. மகேந்திர பல்லவர் மீது கோபம் கோபமாய் வந்தது. மாமல்லர் இல்லாதபோது அவர் இல்லை என்கிற தைரியத்தினாலேயே சக்கரவர்த்தி தன்னைப் புலிகேசியின் முன்னால் ஆடச் சொல்லி அவமானப்படுத்தியிருக்கிறார்.

இத்தகைய குழப்பமான எண்ணங்கள் சிவகாமியின் உள்ளமாகிற ஆகாசத்தில் குமுறி எழுந்தன. திடீரென்று, மின்னலைப் போல் ஓர் எண்ணம் தோன்றிக் குழப்பமாகிற கரிய இருளைப் போக்கியது. அந்த மின்னல் ஒளியிலே அவள் கண்டு தெரிந்து கொண்ட விஷயம், தன்னைக் கெடுப்பதற்கு மகேந்திர பல்லவர் செய்த சூழ்ச்சி எவ்வளவு பயங்கரமானது என்பதுதான். அதாவது மாமல்லர் தெற்கே போகும் போது தன்னை மண்டபப் பட்டில் சந்திக்காதிருக்கும் பொருட்டே, தன்னை இங்கே சக்கரவர்த்தி வரவழைத்திருக்கிறார்! -என்று

அவன் முடிவு செய்தாள்.

சிவகாமியின் முகத் தோற்றத்தையும் அவளுடைய கண்களில் ஜொலித்த கோபக் கனலையும் கவனித்த கமலி சிறிது நேரம் தானும் வாயடைத்துப் போய் நின்றாள். அப்புறம் சமாளித்துக் கொண்டு ''தங்கச்சி! இது என்ன கோபம்? ஒன்றும் முழுகிப் போய்விடவில்லையே! மாமல்லருக்கு யுத்தம் புதிதா? பாண்டியனை முறியடித்து விட்டு வெற்றி வீரராகத் திரும்பி வரப் போகிறார்! அதுவரையில்....'' என்று கமலி சொல்லி வந்தபோது, ''ஆ! போதும்! போதும்! வாதாபிப் புலிகேசியை ஜயித்து வாகைமாலை சூடியாகி விட்டது; - பாண்டியனை ஜயிப்பதுதான் மிச்சம்! போடி, அக்கா, போ! இந்தப் பல்லவ குலத்தாரைப் போல் மானங்கெட்டவர்களை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை'' என்றாள் சிவகாமி.

கமலிக்குத் தூக்கிவாரிப் போட்டது! 'இது என்ன இவள் இப்படிப் பேசுகிறாள்? சூரியனிடம் காதல் கொள்ளத் துணிந்த பனித்துளிக்கு ஒப்பிட்டுத் தன்னைத்தானே எத்தனையோ தடவை நொந்து கொண்ட சிவகாமிதானா இவள்? குமார பல்லவரின் ஒரு கடைக்கண் நோக்குக்காகத் தன் உயிரையே கொடுக்கச் சித்தமாயிருந்த சிவகாமிதானா இவள்?'

இப்படிக் கமலி எண்ணி வியந்து கொண்டிருக்கும்போதே, சிவகாமியினுடைய முகபாவம் மாறியது. கமலியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, ''அக்கா! ஏதோ பிதற்றுகிறேன். மன்னித்து விடு. எல்லாம் விவரமாகச் சொல்லு. மாமல்லர் எப்போது யுத்தத்துக்குப் போனார்? வாதாபிச் சக்கரவர்த்தி காஞ்சிக்கு வருவதற்கு முன்னாலா? அப்புறமா? அவருடன் அண்ணனைத் தவிர இன்னும் யார் யார் போயிருக்கிறார்கள்? எல்லாம் விவரமாகச் சொல்லு. போகும்போது அண்ணன் உன்னிடம் என்ன சொல்லிவிட்டுப் போனார்? என்னை இங்கே சக்கரவர்த்தி நாட்டியம் ஆட வரவழைக்கப் போவது அவர்களுக்குத் தெரியுமா? சொல்லு அக்கா! ஏன் மௌனமாயிருக்கிறாய்? என்பேரில் உனக்குக் கோபமா?'' என்று கேள்விகளை மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போனாள்.

அதன் பேரில் கமலியும் தனக்குத் தெரிந்த வரையில் கூறினாள். சிவகாமி நாட்டியமாடுவதற்காக வரப்போகும் செய்தி யுத்தத்துக்குப் போனவர்களுக்குத் தெரிந்திருக்கவே நியாயமில்லையென்றும், தனக்கே இன்றுதான் தெரியுமென்றும் சொன்னாள். எல்லாவற்றையும் கேட்டு விட்டுச் சிவகாமி, ''அக்கா! நீ ஒன்றும் தப்பாக நினைத்துக் கொள்ளாதே! உன்னை நான் பார்த்து எத்தனையோ நாளாயிற்று. உன்னோடு பேசுவதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. உன் குழந்தை இந்தக் கண்மணியோடு எத்தனை யுகம் கொஞ்சினாலும் எனக்கு ஆசை தீராது. ஆனாலும் இப்போது இங்கே இருப்பதற்கில்லை. மண்டபப்பட்டுக்கு உடனே புறப்பட்டுப் போக வேண்டும். அப்பாவிடம் இதோ சொல்லப் போகிறேன்!'' என்றாள்.

பதினெட்டாம் அத்தியாயம்
''புலிகேசிக்குத் தெரியுமா?''

மறுநாள் மாலை கண்ணபிரானுடைய வீட்டுக் கூடத்தில் ஆயனர், சிவகாமி, கமலி, கமலியின் மாமனார் ஆகியோர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். புலிகேசியும் மகேந்திர பல்லவரும் நகர்வலம் வந்தது பற்றியும், அவர்கள் வடக்குக் கோட்டை வாசலில் ஒருவரிடம் ஒருவர் விடைபெற்றுக் கொண்ட காட்சியைப் பற்றியும், புலிகேசி அக்கோட்டை வாசல் வழியாக வெளியேறியது பற்றியும் யோகி அசுவபாலர் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். புலிகேசி காஞ்சிக்கு விஜயம் செய்த நாளிலிருந்து அந்த யோகி தமது யோக சாதனத்தை அடியோடு மறந்து நகரில் நடந்த களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தார் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

மேற்படி பேச்சுக்கு இடையிடையே அங்கே தவழ்ந்து வட்டமிட்டுக் கொண்டிருந்த சின்னக் கண்ணன் அவர்களுடைய கவனத்தைக் கவர முயற்சி செய்தான். கமலியும் அவனுடைய நோக்கத்துக்குத் துணை செய்கிறவளாய், பேச்சை மறித்து, சின்னக் கண்ணனுடைய பிரதாபங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்

தான். அப்போதெல்லாம் அசுவபாலர் அவளை, ''ஐயோ! பைத்தியமே! இப்படியும் ஒரு அசடு உண்டா?'' என்று சொல்லும் தோரணையில் பார்த்துவிட்டு, மேலே தமது வரலாற்றைத் தொடர்ந்தார்.

எல்லாம் முடிந்ததும் சிவகாமி, ''மாமா, வாதாபிச் சக்கரவர்த்திதான் போய்த் தொலைந்துவிட்டாரே? கோட்டைக் கதவுகளை இனிமேல் திறந்துவிடுவார்கள் அல்லவா?'' என்று கேட்டாள்.

'எல்லாம் நாளை மறுநாள் தெரிந்துவிடும், அம்மா! எனக்கென்னவோ அவ்வளவு நம்பிக்கை ஏற்படவில்லை. அந்த வாதாபி சளுக்கனுடைய முகத்தில் பத்து நாளாக இருந்த முகமலர்ச்சியை இன்றைக்குக் காணோம். பல்லவரிடம் விடை பெற்று வெளியே போகும் சமயத்தில் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டிருந்தான்! அந்த ராட்சதன் என்ன செய்கிறானோ, என்னவோ?''

''அப்படி என்ன செய்துவிடுவான்?'' என்று சிவகாமி கேட்டாள்.

''மறுபடியும் அவன் கோட்டையை முற்றுகை போடத் தொடங்கலாம்; அல்லது கோட்டையைத் தாக்கிப் பிடிக்க முயலலாம்.''

''அப்படியெல்லாம் செய்வார்களா, என்ன? இத்தனை நாள் இவ்வளவு சிநேகம் கொண்டாடிவிட்டு?'' என்று சிவகாமி வியப்புடன் கேட்டாள்.

''தங்கச்சி! இது என்ன நீ கூட இப்படிக் கேட்கிறாயே? இராஜ குலத்தினருக்கு விவஸ்தை ஏது? இன்றைக்குச் சிநேகிதர்களாயிருப்பார்கள்; நாளைக்குக் குத்திக் கொள்வார்கள். இன்றைக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தியாவார்கள்; நாளைக்குப் போர்க்களத்தில் சண்டை போடுவார்கள்!'' என்றாள் கமலி.

ஆயனர், அசுவபாலரைப் பார்த்து, ''வாதாபி அரசருக்கு என்ன கோபமாம்? ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டார்.

''சளுக்கனும் பாண்டியனும் சிநேகிதர்களாம். கொள்ளிடக் கரையில் இரண்டு பேரும் ரொம்ப உறவு கொண்டாடினார்களாம். சளுக்கன் இங்கே வந்திருக்கும் போது, மாமல்லர் பாண்டியன் மீது படையெடுத்துச் சென்றதில் இவனுக்குக் கோபம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் ஒரு அபிப்பிராயம் என்ன தெரியுமா?....'' என்று அசுவபாலர் நிறுத்தினார்.

''என்ன சொல்லுங்களேன்?'' என்றார் ஆயனர்.

''சிவகாமியின் நடனத்தைப் பார்த்துவிட்டு மயங்கிப் போய் வாதாபி அரசர் சிவகாமியைத் தம்முடன் அனுப்பும்படி கேட்டாராம். பல்லவேந்திரர் மறுத்து விட்டாராம்! - அதனால்தான் புலிகேசிக்குக் கோபமாம்!'' என்றார் அசுவபாலர்.

''அவன் நாசமாய்ப் போக! அவன் தலையிலே இடி விழ!'' என்றாள் கமலி அழுத்தந் திருந்தமாக.


அப்போது, ''ஆஹா! இவ்வளவு திவ்யமான ஆசீர்வாதம் யார் வாயிலிருந்து வருகிறது?'' என்று ஒரு குரல் கேட்டதும், அனைவரும் திடுக்கிட்டு எழுந்து நின்று, குரல் வந்த பக்கத்தைப் பார்த்தார்கள். அந்தக் கம்பீரமான குரல் சின்னக் கண்ணனுடைய கவனத்தைக் கூடக் கவர்ந்து விட்டதாகத் தோன்றியது. அவனும் உட்கார்ந்தபடியே ஆவலுடன் குரல் வந்த திசையை நோக்கினான்.

வீட்டின் பின் வாசல் வழியாக உள்ளே வந்தவர் வேறு யாருமில்லை; மகேந்திர பல்லவ சக்கரவர்த்திதான்.

''அசுவபாலரே! நீர் சொல்லிக் கொண்டிருந்த வதந்தி என் காதிலும் விழுந்தது. ஆனால் அது உண்மையல்ல. வாதாபிச் சக்கரவர்த்தி சிவகாமியைத் தம்முடன் அனுப்பும்படி என்னைக் கேட்கவில்லை. பின்னே என்ன சொன்னார் தெரியுமா? 'இந்தப் பெண்ணுக்கு என்னவோ இவ்வளவு பிரமாத மரியாதை செய்கிறீரே? என்னுடன் வாதாபிக்கு அனுப்பினால் சாட்டையினால் அடித்து நாட்டியம் ஆடச் சொல்வேன்' என்றார். அவ்வளவு ரஸிக சிகாமணி அந்த மூர்க்கப் புலிகேசி!'' என்றார் சக்கரவர்த்தி. அப்போது அவருடைய கண்களில் உண்மையான கோபத்துக்கும் வெறுப்புக்கும் அறிகுறி காணப்பட்டது.

அப்போது சிவகாமி ஓர் அடி முன் வந்து சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்து, ''பிரபு! அப்பேர்ப்பட்ட பரம ரஸிகரின் முன்னிலையிலே என்னை நாட்டியம் ஆடச் சொன்னீர்களே! அது தர்மமா?'' என்று கம்பீரமாகக் கேட்டாள்.

''அது தவறுதான், குழந்தாய்! புலிகேசியின் முன்னால் உன்னை நான் ஆடியிருக்கச் சொல்லக்கூடாதுதான். ஆனால் நான் கண்டேனா? அஜந்தாவின் அற்புத வர்ண சித்திரங்கள் எவனுடைய இராஜ்யத்தில் உள்ளனவோ, அவன் இப்பேர்ப்பட்ட ரஸிகத் தன்மையற்ற மூர்க்கனாயிருப்பான் என்று நான் நினைக்கவில்லை.... ஆயனரே! ஒரு செய்தி கேட்டீரா? காஞ்சிக் கோட்டைக்கு வெளியே இத்தனை மாதம் சளுக்க சக்கரவர்த்தி தண்டு இறங்கியிருந்தாரல்லவா? ஒரு தட





அருள்வாக்கு

வெளிப்பொருள் அதுவாகவே ஆனந்தத்தைத் தரவில்லை என்பதைக் கொஞ்சம் ஆலோசித்தாலும் புரிந்து கொண்டு விடலாம். காஷ்மீர் சால்வை அதுவே ஆனந்தம் தருவது என்றால், எக்காலத்திலும் ஒருத்தனுக்கு ஹிதமாகத்தானே இருக்க வேண்டும்? ஆனால் அது எத்தனை விலை உயர்ந்ததாயிருந் தாலும், எத்தனை மழமழப்பாயிருந்தாலும் நல்ல கோடைக்காலத்தில் மேலே பட்டாலே தாங்காமல் தூக்கி எறிகிறோமே! அதனால் ஆனந்தம் அதிலேயே இல்லை என்று புரியத்தானே செய்கிறது? ரொம்பவும் அழகான ஒரு ராகத்தை நல்ல சாரீரமும் ஞானமும் உள்ள பாடகர் ஆலாபனை செய்கிறாரென்பதால் அது எப்போதும் ஆனந்தமளிப்பதாக உள்ளதா என்றால் - நமக்கு ரொம்பப் பிரியமானவர் ''போய்'' விட்டார் என்று சேதி வருகிறது; அப்போது ரேடியோவிலே அந்த ராகத்தை அந்த வித்வான் தேவகானமாகப் பாடுகிறாரென்றால் ஆனந்தமா தருகிறது? கேட்கப் பிடிக்காமல் நிறுத்தித்தானே விடுகிறோம்? ஜ்வரக்காரனுக்கு நல்ல பக்ஷணமோ, ஐஸ்க்ரீமோ ஆனந்தம் தருமா? சொல்லிக் கொண்டே போகலாம் - ஆனந்தம் வெளி வஸ்துவில் இல்லை என்று காட்டுவதற்கு. ஜீவனுடைய மனஸ் கலப்பதில்தான் ஆனந்தம் உண்டாகிறது. இவன் மனஸ் எதிலும் கலக்காமல் தூங்கிக் கொண்டிருக்கும் போது, எந்த வஸ்துவாவது ஆனந்தம் தருகிறதா? இந்த மனஸின் ஆனந்தமோ நிலையாய் இருப்பதேயில்லை. இதற்கு எத்தனை ஆனந்தமோ அதைப்போல ஆயிரம் மடங்கு அழுகை. இடுக்குவழியாக துளித்துளி வெளிச்சத்தை உள்ளே விட்டு, பாக்கி முழுக்க இருட்டடையே தருகிற பந்தல் மாதிரி, துளித்துளி ஆனந்தத்தோடு ஏராளமான துக்கத்தையே மனஸ் தருகிறது. இதன் க்ருத்ரிமம் இல்லாமல், இதற்கு ஆதாரமான ஆத்மாவுக்குப் போனால்தான் சாச்வத ஆனந்தமென்பது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

வையாவது மாமல்லபுரத்துக்குப் போய் அவர் பார்க்கவில்லையாம்! நான் கேட்டதற்கு, 'உயிருள்ள மனிதர்கள் இருக்கும் போது வெறுங் கல் பதுமைகளை யார் போய்ப் பார்த்துக் கொண்டிருப்பது?' என்று விடை சொன்னார். இது மட்டுமா? 'அஜந்தாவிலே அப்படி என்ன பிரமாதமாயிருக்கிறது? சுவரில் எழுதிய வெறுஞ் சித்திரங்கள் தானே?' என்றார். இப்பேர்ப்பட்ட மனுஷரிடந்தான் அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வரும் பொருட்டு நாகநந்தியின் ஓலையுடன் பரஞ்சோதியை நீர் அனுப்பி வைத்தீர்; உமக்கு அது ஞாபகம் இருக்கிறதா?'' என்று மகேந்திர பல்லவர் ஆயனரை நோக்கிக் கேட்டார்.

ஆயனருக்கு அப்போது உண்டான அளவு கடந்த ஆச்சரியத்தை அவருடைய முகக் குறி காட்டியது. 'பல்லவேந்திரா! உண்மையாகவா? வாதாபிச் சக்கரவர்த்திக்கா நாகநந்தி ஓலை கொடுத்து அனுப்பினார்? இது தங்களுக்கு எப்படி....?'' என்று தயங்கினார்.

''எப்படித் தெரிந்தது என்றுதானே கேட்கிறீர்? ஓலையை நானே படித்துப் பார்த்தேன். ஆனால் நாகநந்தி ரஸிகர். இந்த மூர்க்கப் புலிகேசியைப் போன்றவர் அல்ல. அவர் என்ன எழுதியிருந்தார் தெரியுமா? 'சைனியத்துடன் சீக்கிரம் வந்து பல்லவ ராஜ்யத்தையும் காஞ்சி சுந்தரியையும் நீ கைப்பற்றிக் கொள். சிவகாமியை மட்டும் எனக்குக் கொடுத்துவிடு!' என்று எழுதியிருந்தார்; எ ப் ப டி யி ரு க் கி ற து, விஷயம்?.... ஆயனரே? உம்முடைய அத்தியந்த சிநேகிதர் நாகநந்தியினால் இந்தப் பல்லவ இராஜ்யத்துக்கு எப்பேர்ப்பட்ட ஆபத்து வருவதற்கு இருந்தது, தெரியுமா?'' என்றார் சக்கரவர்த்தி.

ஆனால், ஆ ய ன ரோ சக்கரவர்த்தி கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கவனித்தவராகக் கா ண ப் ப ட வி ல் லை. வேறு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவராகக் காணப்பட்டார். 'ஆஹா! புத்த பிக்ஷு கொடுத்த ஓலை வாதாபிச் சக்கரவர்த்திக்கா?.... அப்படியானால், அஜந்தா வர்ண இரகசியம் புலிகேசி மகாராஜாவுக்குத் தெரியுமா?' என்று தமக்குத் தாமே மெதுவான குரலில் சொல்லிக் கொண்டார்.

(தொடரும்)



என் தந்தையின் நண்பரது அலுவலகத்தில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை காலியாக இருப்பதை அறிந்து, அவ்வேலைக்கு விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்வுக்கான அழைப்பும் வந்தது.

"இது மிகவும் பொறுப்பான வேலை. மேலும் உனக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டுமே... வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல்லியனுப்புகிறேன்" என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஓர் அரிய வாய்ப்பு கை நழுவப் போகிறதே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

ஒருநாள் வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டும் போது அதில் "யெஸ் ரூபா ஜெகன் ஸ்பீக்கிங்" என்ற தலைப்பில் திருமதி. ரூபா ஜெகன் அவர்கள் விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் ஆங்கிலம் சரளமாகப் பேசப் பயிற்சி பெற்ற செய்தி வெளியாகியிருந்தது.

இப்பயிற்சியில் சேர்ந்தால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியும் என்ற நம்பிக்கை எனக்கு துளிர் விட்டது.

என் தந்தையின் அனுமதி பெற்று நானும் இப்பயிற்சியில் சேர்ந்தேன்.

ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதைப் போல, பயிற்சி மிகவும் எளிய முறையில் அமைந்திருந்ததால் மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சியினை மேற்கொண்டேன்.

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது ஆங்கிலத்தில் பயமின்றி சரளமாகப் பேச முடிகிறது.

ஆங்கிலத்தில் பேசத் தெரியாத காரணத்தினால் எந்த வேலை எனக்குத் தர மறுக்கப்பட்டதோ, அதே ரிஸப்ஷனிஸ்ட் வேலை எனக்கு வேறு ஒரு பிரபல நிறுவனத்தில் கிடைத்துள்ளது.

"THE INSTITUTE'S COACHING IS SIMPLY SUPERB:"

நீங்களும் தபால் மூலம் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

மௌனமே சுகம்

"என்னப்பா கண்டக்டர்..... இவ்ளோ பெரிய மரப்பலகைய பஸ் மேலே நின்னுக்கிட்டு ரெண்டுபேரு கயித்தைக் கட்டிக்கிட்டுத் தாறுமாறா இழுக்கிறாங்க. மேலே இருக்கிற ஏணிக் கம்பியெல்லாம் வளைஞ்சுபோச்சு.... பெயின்டெல்லாம் கொட்டிப் போச்சு... நீ என்னமோ கீழே நின்னுக்கிட்டு வேடிக்கை பாத்துக்கிட்டிருக்கே..."

செக்கிங் இன்ஸ்பெக்டரை அந்த இடத்தில் எதிர்பார்க்காத கண்டக்டர் ஒரு வினாடி தடுமாறி, மறு வினாடியே சுதாரித்துக் கொண்டார்.

"நான் என்ன சார் பண்ண முடியும்? போடாதீங்கன்னு சொன்னா, கேட்டாத்தானே... முடியாதுன்னு சொன்னா உடனே உங்ககிட்ட வந்து புகார் பண்ணுவாங்க. அப்பவும் நீங்கதான் கேப்பீங்க. 'ஏத்திக்கிட்டா என்னப்பா... ஜனங்க சௌகரியத்துக்குத்தானே பஸ்ஸு'ம்பீங்க....! அதுக்குப் பயந்துக்கிட்டுத்தான் பக்கத்துலேயே நின்னுக்கிட்டு ஜாக்ரதையா ஏத்துங்கப்பான்னு சொல்லிக்கிட்டிருக்கேன். அப்பவும் கோச்சுக்குறீங்க... நாங்க என்ன செய்யுறதுன்னே தெரியலே...."

செக்கிங் இன்ஸ்பெக்டருக்குப் பதிலாக, கண்டக்டர் சாதுரியமாய் நொந்து கொண்டார்.

"ஜனங்களுக்கு சௌகரியம் செய்ய வேண்டியதுதான். அதுக்கு ஒரு வரைமுறை இல்லையா...? இந்தப் பலகைங்களை லாரி புடிச்சுத்தான் ஏத்திக்கிட்டுப் போவ முடியும். ஆனா பஸ்ஸிலே சுலபமா ஏத்திக்கிட்டுப் போயிடணும்னு நினைக்கிறாங்க... இந்த பஸ் புதுசா வந்து ஒரு வாரம்கூட ஆகலே.... அதுக்குள்ளே கண்டதைக் கடயதை ஏத்தி இப்படி அலங்கோலம் பண்ணி வச்சிருக்கீங்க. நம்ப வீட்டு பஸ்ஸா இருந்தா இப்படிச் செய்வோமா... அதைக் கேட்டா என்னென்னமோ கதை சொல்றே... இதெல்லாம் உம் மனசுக்கே சரியா இருந்தாச் சரிதான்...."

முணுமுணுத்தபடியே செக்கிங் இன்ஸ்பெக்டர் அந்த இடத்தைவிட்டு நகரத் தொடங்கினார். அதற்கு மேல் கண்டக்டரிடம் வாதம் செய்வது அத்தனை உசிதம் அல்ல என்று அவர் நினைத்திருக்க வேண்டும்.

பஸ்ஸின் முன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு இதை கவனித்துக் கொண்டிருந்த ஒரு கிராமத்துப் பயணி வாயை மூடிக் கொண்டிருந்திருக்கலாம்.

ஆனால் அவர் அப்படி இருக்கவில்லை. ஒரு வேளை செக்கிங் இன்ஸ்பெக்டரின் இயலாமையைப் பார்க்க பாவமாக இருந்ததோ அல்லது அதே கண்டக்டரால் வேறு ஏதாவது பாதிப்புக்கு ஆளான காரணமோ என்னவோ சட்டென்று பஸ் ஓரமாய்ப் போய்க் கொண்டிருந்த செக்கிங் இன்ஸ்பெக்டரைப் பார்த்துச் சொன்னார்.

"இந்த ஆளுங்க இப்படித்தான் சார் பண்ணுவாங்க. எங்களை மாதிரி ஏழை பாழைங்க எப்போதாவது ஒரு சின்ன மூட்டை முடிச்சோடா வந்தா 'நகரு நகரு இது ஒண்ணும் லாரியில்லே'ன்னு பஸ்ஸை எடுத்துக்கிட்டுப் போயிடுவாங்க.... இப்ப லாரியிலே ஏத்த வேண்டியதைப் பொறுமையா முக்கி முக்கி பஸ்லே ஏத்திக்கிட்டிருக்காங்க... இவங்களையெல்லாம் யாரு சார் கேக்குறது?"

"எல்லாம் அல்ப சொல்பங்க.... அப்படித்தான் பண்ணுவாங்க...." என்றபடி செக்கிங் இன்ஸ்பெக்டர் போய்விட்டார்.

செக்கிங் இன்ஸ்பெக்டருக்கும் முன் சீட் பயணிக்கும் நடந்த உரையாடலைச் சற்று மறைவாக நின்று கவனித்துக் கொண்டிருந்த டிரைவர், பின்புறமாக நின்றிருந்த கண்டக்டரிடம் புகார் செய்தார்.

பிறகு இருவருமாகச் சேர்ந்து முன் சீட் பயணியிடம் வந்தார்கள்.

"என்னய்யா... என்னமோ புகார் பண்ணினே போலிருக்கு... உந்தலையிலே கிரீடம் வச்சுட்டாங்களா? இல்லே எங்க தலையே எடுத்துடுவாங்களா?"

அவர்கள் இப்படி எகத்தாளமாகக்

உத்தமசோழன்

கேட்டதும் பயணி சற்று தடுமாறிப் போய் விட்டார்.

''புகார் ஒண்ணும் பண்ணலியே..... நடப்பைத்தானே சொன்னேன்....''

''ஓகோ! எங்களுக்கே காது குத்துறியா...? இதப்பாரு. நீ எப்ப மூட்டை முடிச்சோட வந்தே... நாங்க முடியாதுன்னுட்டோம்...?''

பயணிக்கு அவர்களது மிரட்டலைக் கண்டதும் பயத்திற்குப் பதிலாக கோபம் தான் வந்தது.

''எத்தனையோ தடவை சொல்லியிருக்கேன்... நானும் மூட்டை யாவாரிதானே.... உன்னை மாதிரி ஆளுங்களாலே ரெண்டு மூணு பஸ்ஸை விட்டுட்டு அர்த்த ராத்திரியிலே கடைசி பஸ்ஸுலேதான் வீட்டுக்குப் போயிருக்கேன்....''

''ஓகோ.... நினைச்சோன்னே போகணும்னா சொந்தமா கார் வாங்கி வச்சுக்கணும்... பஸ்ஸுக்கெல்லாம் வரக்கூடாது...''

''அப்படியா...?''

''அப்படித்தான். லக்கேஜை ஏத்துறதும் ஏத்தாததும் எங்க இஷ்டம்... அதைக் கேக்க நீர் யார்? பஸ்ஸுக்கு வந்தா வாயை மூடிக்கிட்டு உக்காந்திருக்கணும். அதை விட்டுட்டு அது இதுன்னு ஏதாவது அதிகப் பிரசங்கித்தனமாப் பேசினா மரியாதை கெட்டுடும்.''



''இப்ப என்ன செய்யணுங்கிற நீ....?'' அந்தப் பயணி கொஞ்சம் முறைப்பாகக் கேட்க, அதற்குள் பின்புறம் உட்கார்ந்திருந்த அவரது மனைவி ஓடிவந்து அவரது தோளைப் பிடித்து அமுக்கினாள்.

''இப்ப வாயை மூடிக்கிட்டு இருக்கப் போறீங்களா? இல்லே நான் இறங்கிப் போயிடட்டுமா?'' என்றாள்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண் டிருந்த ஆனந்தனுக்கு வாய் துடித்தது. முன்சீட் பயணியைப் போல் அவனும் ஒரு பயணிதான். கல்யாணமான புதிது. புது மனைவி வேறு பக்கத்தில் அமர்ந்திருக் கிறாள். அதனால்தான் இ து வ ை ர பொறுமை காத்திருந்தான்.

இதற்கு மேல் பொறுக்க முடியாது என்ற மனநிலையில் சட்டென்று எழுந்து நின்று கொண்டு வெடித்தான்.

''இப்ப அவர் என்ன சொல்லிட் டாருன்னு இந்தப் பாய்ச்சல் பாயுறீங்க...?'' கண்டக்டரின் கவனம் இப்போது ஆனந்த னின் மீது திரும்பியது. இமே அக்கம் பக்கத் தில் நின்று கொண்டிருந்த மற்ற பஸ்களின் கண்டக்டர்களும், டிரைவர்களும் இப் போது கும்பலாய்க் கூடிவிட்டனர்.

நமது சக தொழிலாளியைக் குற்றம் சொல்ல இவன் யார் என்ற ஆத்திரம் அனை வருக்கும்.

''அட.... சார் ஆகாசத்திலேருந்து சரட் டுன்னு பொத்துக்கிட்டு வந்திருக்கா ருப்பா... நியாயம் கேட்க...'' கண்டக்டர் சுற்றிலும் நின்ற சகாக்களிடம் கிண்டலடித் தார். பின் ஆனந்தனிடம் கேட்டார்.

''ஐயா இப்ப என்ன செய்யச் சொல் றீங்க... நாங்க ஒண்ணும் கொலைக் குத்தம் பண்ணிடலே. தூக்குத் தண்டனை கொடுக்க... கொலை பண்ணினவனே இந்த நாட்டிலே ஜோரா கையை வீசிக்கிட்டுப் போறான். இத்தனூண்டு பலகையை ஏத் துனதுக்கு அந்த இன்ஸ்பெக்டரு என் னமோ புலம்புனாருன்னா.... இந்த மனுச னுக்கு என்னங்க வந்துச்சு...? இவர் பாட்டுக்கும் இருக்க வேண்டியதுதானே.... இவரும் சேர்ந்துக்கிட்டு என்னமோ தூபம் போடறாரு.... இவரு யாரு? நாங்க என்ன செஞ்சா இவருக்கு என்ன?'' கண்டக்டரின் எகத்தாளம் ஆனந்தனை கோபப்பட வைத் தது.

''அவரு யாருன்னா... அவரு வரி கட்டுறவரு.... அவரும் நானும் நீங்களும் கட்டுற வரிப்பணத்திலேதான் இந்த பஸ்ஸே ஓடிக்கிட்டிருக்கு? அப்புறம் அவரு கேக்காம வேறு யாரு கேப்பாங்க...?''

''அடேயப்பா...! எவ்ளோ பெரிய விஷ யத்தைக் கண்டு பிடிச்சிட்டிருக்காரு இவரு...!'' கண்டக்டர் இப்படிச் சொன் னதும் அவருடைய தோழர்கள் ஏதோ உலக மகா தமாஷைக் கேட்டுவிட்டதைப் போல் குபீரென்று சிரித்தார்கள்.

ஆனந்தன் உஷ்ணப்பட்டான். கண்கள் சிவக்க நாசி விடைத்துக் கொண்டது.

''இதப்பாரு மிஸ்டர்.... நான் சொல்றது உங்களுக்குக் கிண்டலா இருக்கா? உங்களை மாதிரி ஆளுங்க செய்யுற அக்கிர மத்தை எங்களை மாதிரி ஆளுங்கதான் கேக்க முடியும். கேக்கணும்... இல் லேன்னா கொஞ்ச நாள்லே பஸ்ஸோட ஷட்டர்ஸ் கிழிஞ்சு மூட முடியாம மழையி லேயும் வெய்யில்லேயும் தான் பயணிகள் உள்ளே உட்கார்ந்திருக்கணும். பஸ் ஓரத் திலே இருக்கிற கம்பிப் பட்டையெல்லாம் உடைஞ்சு காதே செவிடாப் போற மாதிரி 'டபடபான்னு' சத்தம் போடும்.... நாங்க தான் அதைச் சகிச்சுக்கிட்டு உட்கார்ந் திருக்கணும்....''

அவன் முடிப்பதற்குள்ளாகவே டிரை வர் இடைமறித்தார்.

''உன்னை எவன் அந்த மாதிரி பஸ் ஸிலே ஏறச் சொன்னான்? நாங்களா வெத்



''ஹலோ டாக்டர், வயிற்று வலி தாங்காம, என் மாமி யார், காலைலேருந்து காட்டுக் கத்தல் கத்திக்கிட்டிருக் காங்க...!''

''இதோ உடனே புறப்பட்டு வர்றேன் மேடம்...!''

''நீங்க எதுக்கு டாக்டர் அனாவசியமா? யார்கிட்டே யாவது பினாய்லிரி மட்டும் கொடுத்து அனுப்புங்க...!''



''தீபாவளி முடிஞ்சு ஒரு வாரமாகுது. இப்பப் போய் புடைவை எடுக்கப் போறேன்கிறியே...''

''இப்பப் போறது அடுத்த தீபாவளிக்கு...!''

- கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



இலை பாக்கு வச்சுக் கூப்பிட்டோம்?... இஷ்டப்பட்டுத்தானே வர்றே? அப்ப வாயை மூடிக்கிட்டு இருக்க வேண்டியது தான்....!''

''நீங்கள்லாம் மனுஷங்களே இல்லையா...'' வெறுத்துப் போன ஆனந்தன் இப்படிச் சொன்னதுதான் தாமதம். கண்டக்டர் உடனே கூப்பாடு போட்டார்.

''அப்படீன்னா.... எங்களை மாடுன்னா சொல்றே...?''

அவர்களது தோழர்கள் இன்னும் ஒரு படிமேலே போனார்கள்.

''என்ன திமிர் இருந்தா... நம்பளை மாடுன்னு சொல்லுவான்.. ஏண்டா.. எல்லாரும் பாத்துக்கிட்டிருக்கீங்க...''

கண்டக்டரின் தொழில்முறைத் தோழர்களில் ஒருவன் மேலே ஏறி ஆனந்தனின் சட்டையைப் பிடித்துக் கீழே இழுத்தான். அவனது புது மனைவி பயந்துபோய் அலறினாள்.

அவளது அலறல் யாருக்கும் காதில் விழவில்லை. கீழே இழுக்கப்பட்டவனைக் கண்டக்டரும் அவனது சக தொழிலாளிகளும் சகிக்க முடியாத வார்த்தைகளால் கொத்திப் பிடுங்கினர். ஆளுக்கான் மொத்தி எடுத்தனர்..

உடனே அந்த பஸ்ஸின் டிரைவர் தாக்குதல் கூட்டத்திலிருந்து விலகி, சர்வ முன் ஜாக்ரதையாக, அவசர அவசரமாக ''டைம் கீப்பர் டைம் ஆயிடுச்சுன்னு சத்தம் போடறாரு, சீக்கிரம் வா'' என்று கண்டக்டரை கூப்பாடு போட்டபடி பஸ்ஸை ஸ்டார்ட் செய்தார்.

பஸ் புறப்பட்டுவிட்டது. நிமிஷ நேரத்தில் தாக்குதல் கூட்டம் தடயம் தெரியாது கலைந்துபோனது.

தாக்கப்பட்ட ஆனந்தனோ கூளம்போல் தரையில் கிடந்தான். அவனைத் தூக்குவதற்கு இயலாமல் அவனது புது மனைவி அழுதபடியே சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள்.

புறப்பட்டுவிட்ட பஸ்ஸிலிருந்து ஆனந்தனின் பை, சூட்கேஸ் முதலியவை கண்டக்டரால் அவர்கள் அருகே வீசியெறியப்பட்டன.

ஏதோ காணக்கிடைக்காத அற்புதமான காட்சியைக் கண்டுவிட்டதைப் போல் பஸ்ஸில் உட்கார்ந்தபடியும், கீழே சுற்றிலும் கும்பலாய் நின்றபடியும், இமைக்க மறந்தவர்களாய் இதனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர் இந்தியத் திருநாட்டின் இணையற்ற குடிமக்கள்.

13

''**'ஹோ**ராப்' வைரக் கல்லைப் பற்றி உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமா?'' என்று நல்லதம்பியைக் கேட்டான் ரகுராமன்.

''இப்ப கொஞ்ச நாளா டி.வி.யிலே சொன்னாங்க. இந்த இடத்துல வெடி விபத்து நடந்ததிலேருந்து செய்தியிலே வருதே தம்பி!''

பேசிக் கொண்டே எல்லோரும் மேல் தளத்துக்கு வந்தனர். அங்கு காவலுக்கும் வருபவர்களுக்கு வழிகாட்டவும் சிலர் இருந்தனர். படிக்கட்டு முடிந்தவுடன் திரும்பிய இடத்தில் 'அபாயம்' என்று பலகை மாட்டியிருந்தது. தரை சில இடங்களில் பெயர்ந்து கிடந்தது. அந்த இடத்தைச் சுற்றி சிவப்பு நாடாவைக் கட்டி வைத்திருந்தனர். தூண்கள் இரண்டு விரிசல் விட்டுக் கிடந்தன. சுவரில் கட்டட வேலைப்பாடுகள் வெடி விபத்தில் அடிபட்டிருந்தன.

அங்கு உள்ளே நுழைவதற்கு வரிசையாக நிறுத்தப்பட்டனர். ஒவ்வொரு முறையும் இருபது பேர் மட்டும் உள்ளே போகலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ரகுராமனும், கூட வந்தவர்களும் அரை மணி நேரம் காக்க வேண்டியிருந்தது.

பூர்ணம்தான் நால்வரில் முன்னால் நடந்தாள்.

'ஹால் ஆப் ஜெம்ஸ்' இல் நுழைந்தவுடன் வலதுபுறத்தில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்த 423- காரட் எடையுள்ள நீல நிறக்கல் இருந்தது. அவ்வளவு பெரிய நீலக்கல்லைப் பார்த்தவுடன் பூர்ணத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. அதன் பிறகு அவளால் வேகமாக நடக்க முடியவில்லை. அதற்கு அடுத்து சுமார் 254 - காரட் எடையுள்ள வைரக்கல் இருந்தது; அடுத்து பிரேசில் நாட்டிலிருந்து வந்த 127-காரட் எடையுள்ள வெள்ளை வைரக்கல் பளபளத்தது. பச்சைப் பசேல் என்று கொலம்பியா நாட்டு 'எமரால்டு' பூர்ணத்தின் உள்ளத்தை அள்ளியது.

அறையின் மத்தியில் - நுழைவாயிலுக்கு நேர் எதிராக பத்திரமாக வைக்கப்பட்டிருந்ததுதான் 'ஹோப்' வைரம். கருநீல வண்ணம் என்று கருதப்படும் இது சுமார் 45-காரட் எடையுள்ளது. இதைச் சுற்றி இருப்பது பதினாறு வெள்ளை வைரக் கற்கள்; இதை மையமாக வைத்துச் செய்யப்பட்ட அட்டிகையில் மொத்தம் 45 வெள்ளை வைரங்கள்.

பூர்ணம் கூட 'ஹோப்' வைரத்தைப் பார்த்து விட்டு நகர்ந்து விட்டாள். நல்லதம்பி அதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். வைத்திய நாதன் திரும்பி நடந்து வந்து நல்லதம்பியின் தோளில் தட்டினார்.

''என்ன நல்லதம்பி... போகலாமா?'' என்றார்.

''மிஸ்டர் வைத்தி... நான் வாஷிங்டன் வந்ததுக்கு முக்கிய காரணமே 'ஹோப்' வைரம் பார்க்கத்தானே... அதைக் கண் குளிரப் பார்த்துட்டு வர்றேனே...''

ஆனால் அவருடைய ஆசை நிறைவேறவில்லை. அங்கே வந்த காவலர் ஒருவர் நல்லதம்பியை நகருமாறு பணித்தார். பதில் பேசாமல் அவரும் நடந்து மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

அந்த அறையில் இருந்த சரித்திரம் சொல்லும் மற்ற வைரக்கற்களையும், வைரம் பதித்த ஆரங்களையும் பார்த்து விட்டு, அடுத்த அறையில் இருந்த சீன நாட்டு 'ஜேடு' வேலைப்பாடுகளையும் பார்த்தபின் நால்வரும் கிளம்பினர்.

நிர்மலா வீட்டுக்கு அவர்கள் போய்ச் சேர்ந்த போது மணி ஏழடித்து பத்து நிமிடங்கள்.

கதவைத் திறந்து கொண்டே, ''வாங்க, வாங்க...'' என்று அழகிய சிரிப்புடன் நிர்மலா அவர்கள் எல்லோரையும் வரவேற்றாள்.

நிர்மலா கட்டியிருந்த 'ராஸ்பெர்ரி'

வாஷிங்டன் வைரம்

உரசன்

புடைவை சிவப்பும், 'பிங்க்' வண்ணமும் கலந்ததாய் இருந்தது. அதன் தலைப்பு கருநீல வண்ணத்தில் இருந்தது. புடைவைக்கு ஏற்ற மாதிரி அவள் காதணிகளைப் போட்டிருந்தாள். நெற்றியில் சிவப்பு வண்ணத்தில் சிறு பொட்டு. நிர்மலா புடைவை கட்டிக் கொண்டால் இவ்வளவு பொலிவாக இருப்பாள் என்பதை ரகுராமன் அறிய அன்று வரை வாய்ப்பு ஏற்படவில்லை. உள்ளே நுழைந்தவன் அவள் கவர்ச்சியிலேயே எண்ணத்தை நழுவ விட்டு நின்று கொண்டிருந்தான்.

''இதுதான் நிர்மலாவாடா ரகு?'' சிரித்துக் கொண்டே பூர்ணம் கேட்டதும் தான் ரகுராமன் இந்த பூமிக்கு இறங்கினான்.

''ஆமாம், மாமி...'' என்று அசட்டுச் சிரிப்புடன் சொல்லி விட்டு, எல்லோரையும் அறிமுகப்படுத்தி வைத்தான்.

''வாங்க... உட்காருங்க...'' நிர்மலா சோபாவைக் காட்டினாள்.

எல்லோருக்கும் குளிர்பானங்கள் கொடுத்தாள்.

''அப்பாடா...'' என்று ஜூஸ் குடித்து முடித்து விட்டுச் சமையலறைக்குப் போனாள் பூர்ணம்.

''உனக்கு எந்த ஊர் நிர்மலா? கூடப் பிறந்தவங்க இருக்காங்களா... இங்கே எத்தனை வருஷமாய் இருக்கே?'' என்று விசாரணைகளைத் தொடங்கினாள். ஜாதகம் கேட்காத குறைதான்.


பூர்ணத்துக்குப் பொறுமையாகப் பதில்களைச் சொல்லி வந்தாள் நிர்மலா.

சாப்பாடு தயாரானதும் மேசை மீது எல்லாவற்றையும் நிர்மலா எடுத்து வைத்தாள். தட்டில் தேவையான வகைகளைப் போட்டுக் கொண்டு சோபா, நாற்காலி என்று சௌகரியமாய் உட்கார்ந்து கொண்டார்கள்.

''அந்த 'ஹோப்' வைரத்தின் சுவாரசியமான கதையை ரகுத் தம்பி இன்னும் சொல்லலையே'' என்று ஆர்வத்துடன் கேட்டார் நல்லதம்பி.

14

பதினாறாம் நூற்றாண்டில் பிரெஞ்சு



தேச வியாபாரி ஜீன் பாப்டிஸ்டே டே வெனியர் என்பவர் ஒரு வைரக்கல்லை இந்தியாவில் வாங்கி, பிரான்ஸ் தேசத்துக்கு எடுத்துச் சென்றார். 13 வைரங்களுடன் இதையும் சேர்த்து 1669ல் டே வெனியர் பதினான்காம் லூயி அரசனுக்கு விற்றார். அப்போது அதன் எடை சுமார் 112 காரட்; அது அழகான ஊதா நிறமான வைரக்கல் என்று டே வெனியர் குறிப்பிட்டிருந்தார்.

பதினான்காம் லூயி அந்த வைரக் கல்லை வேறு மாதிரி அமைக்க எண்ணி, இதய வடிவில் சிறிய கல்லாக்கும் போது அதன் எடை 67 காரட்டாகக் குறைந்தது. அதன் நிறம் நீலமாக மாறியது போல் இருக்கவே அதை 'பிரெஞ்சு ப்ளு' என்றார்கள். பதினைந்தாம் லூயி அதை யும், ஒரு சிவப்புக் கல்லையும், மற்றும் பெரிய வெள்ளை வைரக் கல்லையும் சேர்த்து ஒரு பதக்கமாகச் செய்தான். பிரெஞ்சுப் புரட்சியின் போது, 1792ல் பதினாறாம் லூயியும், அவன் மனைவி மரி அந்துவானட்டும் சிறைப் பிடிக்கப்பட் டனர். நீல வைரம், சிவப்புக்கல், வெள்ளை வைரம் இவைகள் பொருத்தப் பட்ட பதக்கம் திருடப்பட்டு மர்மமாய் மறைந்தது.

1812ம் ஆண்டு லண்டன் வைர வியா பாரி டேனியல் எலயசன் என்பவரிடம் இருந்ததாய்க் குறிப்பு காணப்படுகிறது. ஆனால் அது 67-காரட் வைரக்கல்லாக இல்லை. இங்கிலாந்து அரசன் நான்காம் ஜார்ஜ் இதை வாங்கி ஒரு பதக்கத்தில் கட்டினான். அவன் 1830ல் இறந்த போது அவனுடைய கடன்களை அடைக்க விற்கப் பட்ட நகைகளில் இதுவும் ஒரு பகுதி.

அடுத்ததாக ஹென்ரி பிலிப் ஹோப் என்பவர் இதை வைத்திருந்ததாய் 1839ல் சரித்திரக் குறிப்புகளில் இருக்கிறது. எப்படி, யாரிடம் வாங்கினார் என்ற விவரம் தெரியவில்லை. அவர் 1840ல் இறந்த போது அவருடைய மருமகன் ஹென்ரி தாமஸ் ஹோப் வைரத்தின் அதிபதியானார். அவரிடமிருந்து அவர் பேரன் பிரான்ஸிஸ் ஹோப் பிரபுவிடம் போன போது, அவர் அதை 1902ல் கடன் தொல்லைக்காக விற்க வேண்டியதாயிற்று. இன்னும் நான்கு கைகள் மாறி, 1909 பியெர் கார்ட்டியர் கடையில் பாரிஸ் நகரத்துக்கு வந்தது. வாஷிங்டனிலிருந்து போன பணக் காரி எவலின் வால்ஷ் மெக்லீன் அந்த வைரத்தை 1912ம் ஆண்டு கார்ட்டியாரிட மிருந்து வாங்கினாள். சுமார் 35 ஆண்டுகள் அந்த அம்மாளுனிடய ஆரத்தின் நடுப் பதக்கமாய் இருந்தது. தனது இரண்டு குழந்தைகளை விபத்தில் பறிகொடுத்த போது அவள் 1947ம் ஆண்டு நியூயார்க் வைர வியாபாரி ஹேரி வின்ஸ்டனுக்கு சுமார் இருபது லட்சம் டாலர் விலைக்கு விற்று விட்டாள். பதினோரு ஆண்டுகள் கழித்து, பல இடங்களில் அதை மக்கள் பார்ப்பதற்காக ஏற்பாடு செய்தபின், ஹேரி வின்ஸ்டன் அதை 1958ல் 'ஸ்மித்ஸோனி யன்' நிறுவனத்துக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். இதுவரை ஆண்டுக்கு முப்பது லட்சம் பேர் இதனுடைய அழகைக் கண்டுகளித்திருக்கின்றனர்.

''என்ன தம்பி, ரொம்ப மர்மம் அது இதுன்னீங்க... இது சாதாரண கதையாயி டுச்சே'' என்றார் நல்லதம்பி.

''சுவையானதைக் கடைசியில் சொல் லலாம்னு இருந்தேன்'' என்ற ரகுராமன் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

இந்தியாவில் ஒரு கோவிலிலிருந்த சீதையின் சிலையில் இந்த வைரம் பதிக்கப் பட்டிருந்ததாம். வைரக்கல்லை கோவில் பூசாரி திருடி விட்டானாம். வைரத்தைத் திருடியதால் சீதாதேவியின் சாபமும், பழி யும் அந்த வைரத்தின் மீது விழுந்ததாம். சபிக்கப்பட்ட அந்த வைரம் எங்கு போனா லும் அதை வைத்திருப்பவரைப் பழி வாங்குகிறதாம். இது மூடநம்பிக்கையா? சற்று முன் நான் சொன்னதையெல்லாம் மறுபடி நினைவுபடுத்திப் பாருங்கள். இதை வைத்திருந்தவர் யாரும் சுகப்பட வில்லை அவதிப்படவே செய்தார்கள் என்பது புரியும்.''

''தம்பி மியூசியத்தின் இரண்டாம் மாடியில் ஏன் வெடி விபத்து நடந்தது? வைரக்கல் மீதுள்ள சாபம் தான் அந்த வெடி விபத்துக்குக் காரணம்னு நான் நினைக்கிறேன்'' என்றார், நல்லதம்பி.

''இல்லை, வெடி விபத்துக்குக் கார ணம் 'ஹோப்' வைரம் இல்லை. 'வைரம்' என்கிற டாக்டர் வைரமூர்த்திதான்' என்று ரகுராமன் நினைத்துக் கொண்டான்.

15

விடுமுறை நாளானாலும் கடுமை யாக உழைக்க வேண்டிய வேலையில் ராபர்ட் வார்னர் இருந்தது அந்த ஞாயிற்றுக் கிழமை இன்னொரு முறையும் நிச்சய மாயிற்று. எஃப்.பி.ஐ. கட்டடத்துக்கு முன் னால் வந்து நின்ற ராபர்ட் அதை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான். அவ்வளவு பெரிய வீதியில் இப்படிப்பட்ட அழகற்ற கட்டடம் துணிச்சலாகக் கட்டப்பட்டதே என்று வியந்தான்.

அங்கு வாரத்தில் ஐந்து நாட்களில் பொது மக்களுக்கு உள்ளே சுற்றிக் காட்டு கிறார்கள். ஆண்டுக்குச் சுமார் ஐந்து லட்சம் பேர் எஃப்.பி.ஐ. கட்டடத்தைப் பார்க்க வருகின்றார்கள். பொதுவாகப் பார்ப்போர் கூட்டம் சிறுவர், இளைஞர் கூட்டமாகத் தான் இருக்கும். அங்கு இருபதாயிரத் துக்கும் மேற்பட்டவர்கள் வேலை செய் கிறார்கள்.

எஃப்.பி.ஐ.யில் வேலை பார்க்கும் எட்டாயிரம் ஏஜெண்டுகளில் நூற்றெழுபது பேர் பெண்கள். ஏஜெண்டாக வேண்டு மென்றால் சட்டப்படிப்பில் பட்டம் இருந் தால் நல்லது; எப்படியும் பட்டப் படிப் பாவது படித்திருக்க வேண்டும். திரைப் படம், வானொலி, தொலைக்காட்சி போன்ற எதிலுமே ஏஜெண்டாக யாராவது வேடம் போடுவதற்கு முன்னால் எஃப்.பி.ஐ.யின் முன் உத்தரவு இல்லாமல் செய்வது சட்டத்துக்கு எதிரான செயல்!

நேராகத் தன் அறைக்குள் நுழைந்து காப்பியைக் கோப்பையில் ஊற்றிக் கொண்டு வேலைக்குத் தயாரானான், ராபர்ட். முதல் வேலையாக 'இண்டர் போல்' அதிகாரியிடமிருந்து ஏதாவது செய்தி வந்திருக்கிறதா என்று பார்த்தான். 'இண்டர்போல்' தலைமையகம் பாரிஸ் நக ரில் இருந்தது. எஃப்.பி.ஐக்கும் 'இண்டர் போலு'க்கும் கம்ப்யூட்டர் தொடர்பு இருந்தது. ஆனால் உடனுக்குடன் செய் திகள் வருவது மட்டும் இல்லை.

ஜேம்ஸ் பர்ட்டன் சொன்ன அடையா ளங்கள் உடைய இந்திய நாட்டவன் பற்றி விவரங்கள் ஏதாவது 'இண்டர்போல்' கொடுக்க முடியுமா என்று கேட்டுச் சில நாட்கள் ஆகி விட்டன. இதுவரை பதில் இல்லை.

ராபர்ட் தன்னுடைய இரண்டாம் வேலையைத் தொடங்கினான். இது நேரத்தை உறிஞ்சக்கூடிய வேலை. 'அந்த இந்திய நாட்டவனைப் பார்த்தார்களா என்று வாஷிங்டன், டி.சி.யில் இருக்கும் நூற்றுக்கணக்கான டாக்சி ஓட்டுபவர்களை ஏற்கெனவே பார்த்து, விசாரித்து ஒன்றும் பலன் கிடைக்கவில்லை.

இன்னும் ஒன்பது பேர் இன்று வரவழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களும் கையை விரித்தால் அடுத்து என்ன செய்வது என்பதை ராபர்ட் இப் போது நினைக்க விரும்பவில்லை.

தன்னறையை விட்டு மாடியில் ஒரு பெரிய அறைக்குப் போனான். அங்குதான் டாக்சி ஓட்டுபவர் ஒன்பது பேர் இருந் தார்கள். தன்னுடைய உதவியாட்கள் மூலம் ராபர்ட் அவர்களைத் திரட்டியிருந்தான். எஃப்.பி.ஐ.என்ற அட்டையைக் காட்டி னால் ஒத்துழைக்காத அமெரிக்கர்கள் அதிக மாக இருக்க மாட்டார்கள். ஒத்துழைக் காமலிருப்பதே ஒரு குற்றமாகி விடுமே!

அங்கு உட்கார்ந்திருந்த ஒவ்வொரு வரும் பேசினார்கள். அதில் ஆறாவதாக ஸாம் என்பவன் பேசும் போது ராபர்ட் உன்னிப்பாகக் கேட்டான். மற்ற எட்டுப் பேரையும் உடனே நன்றி கூறி அனுப்பி விட்டான். ஸாம், ராபர்ட்டுக்கு, தான் அந்த இந்திய ஆளை ஏர்போர்ட்டுக்கு அழைத் துப் போனதாயும், அந்த ஆள் ஸான் பிரான்ஸிஸ்கோ போனதாயும் சொன்னான். ஸாமின் விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் வாங்கிக் கொண்ட ராபர்ட், ஸாமின் கையைக் குலுக்கி நன்றி சொன் னான்.

''ஸாம், இன்று நீ சொல்லியிருக்கும் தகவல் அமெரிக்க நாட்டின் மதிப்பைக் காப்பாற்றலாம்'' என்று ராபர்ட் சொன் னான்.

ஸான் பிரான்ஸிஸ்கோ ஏஜண்டிடம் போனில் தொடர்பு கொண்டு பேசி முடித்தவுடன் ராபர்ட் உல்லாசமாகச் சீட்டி அடித்தான். ஞாயிற்றுக் கிழமையில் பாதி நேரம் இன்னும் இருக்கிறது. இப்போது புறப்பட்டாலும் காதலி மோனிகாவின் வீட்டுக்குப் போய் அவளை அழைத்துக் கொண்டு ஊர் சுத்தலாம். அந்த நினைப்பே இனித்தது.

அப்போது போன் மணி அடித்தது.

'இண்டர்போல் காலிங்' என்ற குரல் கேட்டது.

(தொடரும்)

❑ காந்திஜி இங்கிலாந்து சென்றிருந்த போது அவர் தோற்றத்தைப் பார்த்த ஒரு நிருபர், ''இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்க இந்தியர்களுக்கு உங்களைத் தவிர வேறு ஆளே கிடைக்கவில்லையா?'' என்று கேட்டார்.

அதற்குக் காந்திஜி சிரித்தவாறு, ''அப்படியெல்லாம் இல்லை. உங்களைச் சமாளிக்க நானே போதும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்'' என்று பதில் சொன்னார்!

நிருபர் முகத்தில் விட்டர் கணக்கில் வழிந்தது.

- ந. க. பரமசிவம்





பொன்
விழாப்
போட்டியில்
ரூ. 500
இரண்டாம்
பரிசு பெறும்
நாடகம்

க்யூ

பி.உதயக்குமார்

காட்சி - 1

(எல்லோரும் க்யூவில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஒருவன் ரேஷன் க்யூவில் நிற்பவன் போல் கையில் மண்ணெண்ணெய் டின், பை இத்யாதிகள் இருப்பதைப் போல ஒரு பாவனையுடன் நிற்கிறான். மற்றவர்கள் அனைவரும் க்யூ நகரவே இல்லையே என்ற நிதானமற்ற பதற்றத்துடன் இங்கும் அங்கும் பார்த்தவாறு நிற்கின்றனர்.

காலம் காலமாக க்யூவில் நின்று நின்று மக்களுக்கு எதனால் க்யூவில் நிற்கிறோம் என்ற காரணங்களும் மறந்து போகின்றன. எல்லோருமே ஒரே காரணத்திற்காக நிற்பது போலவும், அது என்ன காரணம் என்று தெரியாமல் நிற்பது போலவும் தோன்றுகிறது.

இந் நாடகத்தில் எவருக்குமே முகங்களில்லை. பெயர்களில்லை. இந் நாடகத்தைப் படிக்கும், பார்க்கும் ஒவ்வொருவர் சாயலையுமே இதன் கேரக்டர்கள் கொண்டிருக்கின்றன.)

நபர் 1 : ஒரு மணி நேரமா நிக்கறேன். க்யூ நகர்ற மாதிரியே தெரியலையே...

நபர் 2 : நான் ரெண்டு மணி நேரமா நிக்கறேன்... நின்ன இடத்திலேயே நின்னுக்கிட்டிருக்கேன்...

நபர் 3 : நீங்களாவது பரவா யில்ல... நான் கார்த்தால இருந்து ஒரே இடத்தில நின்னுக்கிட்டிருக் கேன்...

நபர் 1 : தாத்தா நீ எத்தினி நாளா நின்னுக்கிட்டிருக்கே...?

நபர் 4 : நானு.. தொண்ணூத்தியெட்டு வருஷமா நின்னுக்கிட்டிருக்கேன்...

(எல்லோரும் கேலியாகச் சிரிக்கின்றனர்.)



நபர் 2 : தொண்ணூத்தியெட்டு வருஷமா நின்னுக்கிட்டிருக்காராம்...

(அப்போது ஒருவன் வேகமாக வருகிறான். அவன் கையில் மண்ணெண்ணெய் டின் இருப்பது போன்ற ஒரு பாவனை.)

ஒருவன் : இது மண்ணெண்ணெய் க்யூ தானே...?

நபர் 1 : இது மண்ணெண்ணெய் க்யூ இல்லே.. பாமாயில் க்யூ.

நபர் 2 : பாமாயில் க்யூவாம். திருப்பதி லட்டு தர்றாங்க. அதான் நிக்கறோம்.

நபர் 3 : திருப்பதி லட்டு தர்றாங்களா... குட்டுதான் தருவாங்க. பசு மாட்டோட கன்னுல புர்ச்சித் தலைவர் தெரியறாராம்... அவரைப் பார்த்துட்டுப் போலான்னுதான் கொக்காலடியிலிருந்து வந்திருக்கேன்...

நபர் 4 : பசு மாட்டோட கன்லயா..... புர்ச்சித்தலைவரா... ஏன்யா எருமமாடு.. வெயில்ல சுத்தாதனு எத்தினிவாட்டி சொன்னேன்..? வெயில்ல சுத்தினா இப்படித்தான் ஸ்க்ரு கழண்டுக்கும்.. ஸார் இது பலான பலான படம்... நீங்க பார்த்தா டீஸன்ட்டான ஆளு மாதிரி தெரியறீங்க... மண்ணெண்ணெய் க்யூதானே வேணும்? அந்த தாத்தாகிட்டே கேளுங்க. சொல்லுவார்.

ஒருவன் : தாத்தா இது பாமாயில் க்யூவா, திருப்பதி லட்டு க்யூவா, புர்ச்சித் தலைவர் க்யூவா, இல்ல சினிமா க்யூவா?

தாத்தா : உனக்கு என்ன க்யூ வேணும்...?

ஒருவன் : எனக்கு மண்ணெண்ணெய் க்யூ வேணும்.

தாத்தா : இதான் மண்ணெண்ணெய் க்யூ.

ஒருவன் : இ தா ன் மண்ணெண்ணெய் க்யூவா? ஒவ்வொருத்தன் ஒவ்வொண்ணு சொல்றான்...

தாத்தா : அவனவன் ஆயிரம் சொல்லு வான். உனக்கென்ன? உனக்குத் தேவை மண்ணெண்ணெய்தானே...? க் யூ வி ல நில்லு. கிடைக்கும்.

(ஒருவன் ஆரம்பமும் முடிவும் தெரியாத அந்த க்யூவை பார்க்கிறான். பிறகு சோர்ந்து போய்த் தாத்தாவைப் பார்க் கிறான்.)

ஒருவன் : என்ன தாத்தா இந்த க்யூவிலயா நிக்கச் சொல்றீங்க? எங்க ஆரம்பிக்குது, எங்க முடியுதுன்னே தெரியலையே...?

தாத்தா : அதான் எனக்கும் தெரியலை. க்யூ வில முதல்ல நிக்க ஆரம்பிச்சப்ப நானும் உன்ன மாதிரிதான் க்யூவில நிக்கறதுக்குக் காரணங்கள் சொல்லிக்கிட்டேன். ஸ்கூல் அட்மிஷன், காலேஜ் அட்மிஷன், சினிமா, மண்ணெண்ணெய், பாமா யில்... இப்படி... ஆனா இப்பல்லாம் என்னை நானே ஏமாத்திக்கிறதில்லே. க்யூவில நிக்கறதுக்குக் காரணங்கள்லாம் தேவையில்லைங்கிற முடிவுக்கு வந்திட் டேன். ஏதோ நிக்கறோம்... அவ்வளவு தான்...

ஒருவன் : தாத்தா எனக்கு ஏற்கெனவே தலைவலி. வீட்டில அம்மா மண்ணெண் ணெய் வாங்கிட்டு வரச் சொன்னாங்க. முடியாதுன்னேன், கேக்கலை. சரின்னு ரேஷன் கார்டை எடுத்துக்கிட்டு இங்கே வந்தேன். சீக்கிரமா வாங்கிக் கொடுத் திட்டு நான் வரதராஜா காலேஜுக்குப் போகணும்.

தாத்தா : அங்கதான் படிக்கிறியா தம்பி?

ஒருவன் : இல்ல தாத்தா இனிமேதான் சேர ணும். நூத்துக்குத் தொண்ணூறு மார்க் வாங்கியிருக்கேன். மார்க் குறைச்சல்னு மெடிக்கல் காலேஜ்ல சீட் தரலை. மார்க் அதிகம்னு ஆர்ட்ஸ் காலேஜ்ல சீட் தரலை. இதான் கடைசி சான்ஸ். நான் இன்னிக்கு கரெக்டான டயத்திற்கு காலேஜ் இன்டர்வ்யூவுக்குப் போயே தீரணும்.

தாத்தா : இந்த க்யூ எப்போ நகர்ந்து, எப்போ மண்ணெண்ணெய் வாங்கி, நீ எப்போ காலேஜுக்குப் போறது? நீ பேசாம வீட்டுக்குப் போ தம்பி.

(ஒருவன் அதுதான் சரி என்பது போல் வீட்டுக்குப் போகக் கிளம்புகிறான். அப் போது தாத்தாவிற்கு முன்பு நிற்பவன், 'ஒருவ'னிடம் கேட்கிறான்.)

நபர் 1 : வரதராஜா காலேஜ்ல அட்மிஷன் வேணுமா?

('ஒருவன்' ஆ மெனத் தலையசைக் கிறான்.)

நபர் 1 : வாங்க நான் சேர்த்து விடறேன்.

(பல சந்து பொந்துகளின் ஊடே அழைத்துச் சென்று, முடிவில் ஒரு க்யூ விற்கு வந்து சேருகிறார்கள்.)

நபர் 1 : இந்த க்யூவில நில்லு. அட்மிஷன் கிடைக்கும்.

ஒருவன் : இது ரேஷன் க்யூ மாதிரியே இருக்கே?

நபர் 2 : ஏன்பா என் மூஞ்சியப் பார்த்தா ரேஷன் க்யூவில நிக்கிற மாதிரியா தெரி யுது...? 86 மார்க் வாங்கியிருக்கேன். பி.காம். சீட்டுக்காக நிக்கறேன்.

நபர் 3 : 87 மார்க் வாங்கியிருக்கேன். கெமிஸ்ட்ரி சீட்டுக்காக நிக்கறேன்.

நபர் 4 : 88 மார்க் வாங்கியிருக்கேன். ஃபிசிக்ஸ் சீட்டுக்காக நிக்கறேன்.

நபர் 5 : 89 மார்க் வாங்கியிருக்கேன். மாத்ஸ் சீட்டுக்காக நிக்கறேன்.

('ஒருவனு'ம் க்யூவில் நிற்க ஆரம்பிக் கிறான். ஓர் அறையில் இன்டர்வ்யூ நடந்து கொண்டிருக்கிறது.)

காட்சி - 2

பிரின்ஸிபால் : உன் பேரு?

நபர் 1 : ஏ. தணிகாசலம்.

பிரின்ஸி : எவ்வளவு தர்றே?

('அஞ்சாயிரம்' என்று ஐந்து விரல்களைக் காட்டுகிறான். பிரின்ஸிபால் கையை நீட்ட, கையில் திணிக்கிறான். அவற்றை எண்ணியவாறே...)

பிரின்ஸி : என்ன ஸீட்?

நபர் 1 : பி.காம்.

பிரின்ஸி : நாளைக்கே வந்து ஜாயின் பண்ணிடு. நெக்ஸ்ட்.

(அடுத்தவன் உள்ளே வருகிறான்)

பிரின்ஸி : உன் பேரு?

நபர் 2 : பி. தணிகாசலம்.

பிரின்ஸி : எவ்வளவு தர்றே?

(நான்கு விரல்களைக் காட்டுகிறான். பிரின்ஸிபால் கையை நீட்ட, கையில் திணிக்கிறான். அவற்றை எண்ணிய



மனைவி : போஸ்ட்மேனை ஏங்க இப்படி திட்டுறீங்க?

எழுத்தாளர் : பின்னே... திரும்பி வர்ற என் கதையைக் கொண்டு வந்து 'சார் வேஸ்ட்'ங்கிறான்!

- வேலூர் கோவி. செந்தில்

வாறே...)

பிரின்ஸி : என்ன ஸீட்?

நபர் 2 : பி.எஸ்.சி. கெமிஸ்ட்ரி.

பிரின்ஸி : போ. போ! நான் பார்த்துக்கறேன். நெக்ஸ்ட்?

(அடுத்தவன் உள்ளே வருகிறான்)

பிரின்ஸி : உன் பேரு?

ஒருவன் : எனக்கே தெரியாது.

பிரின்ஸி : என். கே. தெரியாது...? புதுமையான பேரா இருக்கே! எவ்வளவு தர்றே?

ஒருவன் : என்கிட்டே பத்து ரூபாதான் இருக்கு.

பிரின்ஸி : அதுக்கு மேல நயாபைசா இல்லியா?

ஒருவன் : சிகரெட் வாங்க எட்டணா இருக்கு.

பிரின்ஸி : சரி சரி! அந்த பத்து ரூபாயையும் அந்த எட்டணாவையும் இந்த கவர்ல போடு.

(அவன் அப்படியே செய்ய ஒரு அருவருப்பான பொருளைத் தூக்குவது போல் தூக்கித் தன் மேஜை டிராயரில் போட்டுக் கொள்கிறார்.)

பிரின்ஸி : என்ன ஸீட்?

ஒருவன் : பி. ஏ. இங்கிலீஷ். தமிழ் மீடியம்.

பிரின்ஸி : பி. ஏ. இங்கிலீஷ், தமிழ் மீடியமா? போயிக்கோ... நான் பார்த்துக்கறேன். நெக்ஸ்ட்.

(இப்படி... தொடர்ந்து கொண்டே போகிறது)

காட்சி - 3

(பரீட்சை ஹாலில் எல்லோரும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பி அடிக்கிறார்கள். பிட் அடிக்கிறார்கள்)

நபர் 1 : ஏய், நீ ஃபிசிக்ஸ். நான் கெமிஸ்ட்ரி. என்னைப் பார்த்துக் காப்பி அடிக்கிறாயே.

நபர் 2 : பேப்பரைப் பார்த்தா மார்க் போடறாங்க? நீ ஏன் கவலைப்படறே?

(ஒருவரைப் பார்த்து... ஒருவரைப் பார்த்து... ஒருவரைப் பார்த்து... ஒருவரைப் பார்த்து... ஒருவர் எழுதுகிறார்கள்.)

காட்சி - 4

(எல்லோரும் வேலைக்காக க்யூவில் நின்று கொண்டிருக்கின்றனர்.)

தலைவர் : என்ன படிச்சிருக்கே?

தாத்தா : நான் அந்தக் காலத்து எஸ். எஸ். எல். சி.

தலைவர் : டான்ஸ் ஆடத் தெரியுமா?

(தாத்தா தலையாட்டுகிறார்.)



"திரும்பத் திரும்ப கூப்பிடறீங்களே... எத்தனை தடவை சொல்றது 'ராங் நெம்பர்'னு?"

"அதான் 'ராங் நெம்பர்'னு தெரியுதில்லே... ஏன் எடுக்கிறீங்க...?"

- அ. தெய்வசிகாமணி

தலைவர் : எங்கே ஆடு பார்க்கலாம்.

(தாத்தா தை தை என்று ஆடுகிறார்.)

தலைவர் : சரி, உனக்கு ப்யூன் வேலை. நெக்ஸ்ட்.

(அடுத்தவர் உள்ளே வருகிறார்)

தலைவர் : என்ன படிச்சிருக்கே?

நபர் 1 : பி. ஏ. எகனாமிக்ஸ்.

தலைவர் : லஞ்சம் கொடுக்கல் வாங்கல் பழக்கம் உண்டா?

(தலையாட்டுகிறார்)

தலைவர் : எங்கே, கொடு பார்க்கலாம்.

(கொடுக்கிறார்)

தலைவர் : சரி உனக்கு கிளார்க் வேலை. நெக்ஸ்ட்.

(அடுத்தவர் உள்ளே வருகிறார்)

தலைவர் : என்ன படிச்சிருக்கே...?

நபர் 2 : டைப்ரைட்டிங் ஹையர், இங்கிலீஷ், தமிழ் ரெண்டுமே ஃபெயில்.

தலைவர் : டைப் அடிக்கத் தெரியுமா?

நபர் 2 : ஏதோ பார்த்து நிதானமாச் செய்வேங்க.

தலைவர் : தூங்கத் தெரியுமா?

நபர் 2 : ம்...

தலைவர் : தூங்கு

(தூங்க ஆரம்பித்துக் குறட்டை விட...)

தலைவர் : ஏய் ஏய் ஏய்... எந்திரி... உனக்கு டைப்பிஸ்ட் வேலை. நெக்ஸ்ட்.

(அடுத்தவர் உள்ளே வருகிறார்)

தலைவர் : என்ன படிச்சிருக்கே?

நபர் 3 : பி.யு.சி.

தலைவர் : தலையாட்டத் தெரியுமா?

(அவர் தலையாட்ட ஆரம்பித்து பொம்மலாட்ட பொம்மை மாதிரி ஆட)

தலைவர் : சரி உனக்கு மானேஜர் வேலை. நெக்ஸ்ட்.

(அடுத்தவர் உள்ளே வருகிறார்)

தலைவர் : என்ன படிச்சிருக்கே?

நபர் 4 : பி.ஏ.

தலைவர் : உனக்கு நடிக்கத் தெரியுமா?

(அவர் தலையாட்ட)

தலைவர் : நடி பார்க்கலாம்.

(நடித்துக் காட்ட)

தலைவர் : நீ என்னை விட நல்லா நடிக்கிறே...

(அவர் பெருமிதத்துடன் புன்னகை செய்ய...)

தலைவர்: அதனால என் பதவிக்கே ஆபத்து. உனக்கு வேலை இல்லே.. நெக்ஸ்ட்.

காட்சி - 5

(ஆஃபீசில் எல்லோரும் 'வேலை' செய்து கொண்டிருக்கின்றனர். பியூன் டான்ஸ் ஆட, டைப்பிஸ்ட் தூங்க, கிளார்க் லஞ்சம் வாங்க, வேலை 'ஜரு ராக' நடந்து கொண்டிருக்கிறது.

தலைவர் அவ் வழியாக வர, கிளார்க் கையை ஏந்தியவாறு...)

க்ளார்க் : ஐயா.. பிரமோஷன் ஏதாச்சும் இருந்தாப் போடுங்க ஐயா... நாலு வருஷம் ஆச்சு ஐயா வேலைல சேர்ந்து...

தலைவர் : பிரமோஷன்லாம் ஒண்ணும் இல்லே. போ போ...

கிளார்க் : பொண்டாட்டி தொந்தரவில உயிர் போகுது ஐயா. கொஞ்சுண்டு பிரமோஷன் போடுங்க ஐயா.

தலைவர் : அதெல்லாம் இல்லே. போ போ.

எல்லோரும் : ஐயா... ப்ரமோஷன் இருந்தாப் போடுங்க ஐயா.

தலைவர் : சரி சரி எல்லோரும் க்யூவில நில்லுங்க.

(எல்லோரும் க்யூவில் நிற்கிறார்கள்)

நபர் 1 : க்யூவில யார் முதல்ல வந்தாங்களோ அவங்களுக்குத்தான் மானேஜர் பதவி. நான்தான் முதல்ல வந்தேன்.

''உரிமைக்காகப் போராடி அதில் வெற்றியும் அடைஞ்சேன்!''

''அடடே எங்கே?''

''ஹோட்டல்ல! காசில்லாமல் காப்பி சாப்பிட்டதுக்கு மாவாட்ட முடியாது... மேஜைதான் துடைப்பேன்னு ஒரேடியாச் சாதிச்சுட்டேன்!''

- வேதபுரி எஸ். ரமேஷ்



நபர் 2 : நான்தான்...

நபர் 3 : நான்தான்...

நபர் 4 : யார் நல்லாத் தலையாட்டறாங்களோ அவங்களுக்குத்தான் மானேஜர் பதவி.

(எல்லோரும் தலையாட்ட ஆரம்பிக்கிறார்கள். பொம்மலாட்ட பொம்மை மாதிரி ஆட ஆரம்பிக்கிறார்கள்.)

நபர் 2 : யார் நல்லா எருமை மாடு மாதிரி கத்தறாங்களோ அவங்களுக்குத்தான் மானேஜர் பதவி.

(எல்லோரும் எருமை மாடு மாதிரி கத்துகிறார்கள். ஒருவன் ஆடு மாதிரி கத்த எல்லோரும் ஆடு மாதிரி கத்துகிறார்கள். ஒருவன் 'கொக்கரக்கோ' என்று கூவ எல்லோரும் கூவுகிறார்கள்)

தலைவர் : சைலன்ஸ், சைலன்ஸ்... யார் நல்லா அசடு வழியறாங்களோ... அவங்களுக்குத்தான் மானேஜர் பதவி.

(எல்லோரும் ஒட்டுமொத்தமாக அசடு வழிய, மிகச் சிறப்பாக அசடு வழியும் பியூன் தாத்தாவிற்கு மானேஜர் பதவி கிடைக்கிறது. எல்லோரும் தாத்தாவைத் தூக்கி வைத்துக் கொண்டு பாட்டுப் பாடி ஆடுகிறார்கள்)

காட்சி - 6

(ஒரு பள்ளியில் எல்.கே.ஜி. அட்மிஷனுக்கான இண்டர்வ்யூ நடந்து கொண்டிருக்கிறது.)

ஹெட்மாஸ்டர் : தலையைச் சுத்தி மூக்கைத் தொடு பார்க்கலாம்...

அப்பா : குழந்தைக்கு இன்னும் எட்டலை. நீங்கதான் கொஞ்சம் தயவு பண்ணனும்.

ஹெட்மாஸ்டர் : நான் குழந்தையைச் சொல்லலை. உங்களைத் தொடச் சொன்னேன்.

(அப்பா ஹெட்மாஸ்டரின் மூக்கைத் தொட...)

ஹெட்மாஸ்டர் : என் மூக்கை இல்ல சார்... உங்க மூக்கை.

(அப்பா குண்டாயிருப்பதால் எவ்வளவு முயற்சி செய்தும் முடியாமல் போகிறது)

ஹெட்மாஸ்டர் : நீங்க இராஜ¬வேட்னு சொன்னீங்க... ஆஃப்ட்ரால் உங்க மூக்கைத் தொட முடியலையே... சரி போனாப் போவுது... ஏபிசிடி சொல்லுங்க...

அப்பா : நானா... ஏ, பி, சி, டி...

ஹெட்மாஸ்டர் : ஏ பி சி டி முழுசாச் சொல்லுங்க.

அப்பா : முழுசாத்தானே சொன்னேன். ஏ பி சி டி.

ஹெட்மாஸ்டர் : முழுசாச் சொல்லுங்கோ.

"டாக்டர்! பல்ல போகும் போதெல்லாம் ஒரே தூக்கமா வருது டாக்டர்..."

"கொஞ்ச நேரம் அப்படியே சாய்ஞ்சி படுத்துக்க வேண்டியது தானே..."

"நான் படுத்துக்கிட்டா பல்லை யாரு டாக்டர் ஓட்டறது?"

– செங்குன்றம் ரமேஷ்ராம்



அப்பா : முழுசா?

ஹெட்மாஸ்டர் : அட, ஏபிசிடிக்கு அப்புறம் சொல்லுங்க, ஈ, எஃப், ஜி. எச்...

(ஹெட் மாஸ்டர் சொல்லச் சொல்ல அப்பாவும் கூடவே ஒருவழியாகச் சொல்லி முடிக்கிறார்)

ஹெட்மாஸ்டர் : என்னது.. குழந்தைக்குச் சொல்லித் தரதா இல்லை உங்களுக்குச் சொல்லித் தர்றதா...?

அப்பா : அதில்லை சார். படிச்சு முப்பது வருஷம் ஆச்சா... அதான் மறந்து போச்சு...

ஹெட்மாஸ்டர் : அதெப்படி சார் மறக்கும்? உங்களுக்கு.... சாரி, உங்க பையனுக்கு எப்படி எல்.கே.ஜி. சீட் தர்றது?

(அப்பா மினிஸ்டர் ரெகமண்டேஷனை நீட்டுகிறார்.)

ஹெட்மாஸ்டர் : சரி சரி... மினிஸ்டர் ரெகமண்டேஷன் வெச்சிருக்கறதால அஞ்சாயிரம் ரூபா டொனேஷன் கட்டிட்டுக் குழந்தையச் சேருங்கோ, போங்கோ.

காட்சி - 7

(வீட்டில் அம்மா சமைக்கிறாள். துணி துவைக்கிறாள். பாத்திரம் துலக்குகிறாள். அப்பா உட்கார்ந்து டி.வி. பார்த்துப் புத்தகங்கள் படித்துப் பொழுதுபோக்குகிறார்)

அப்பா : வீட்டைப் பார்த்துக்க. நான் போய் மண்ணெண்ணெய் வாங்கிண்டு வந்திடறேன்!

(கிளம்புகிறார்)

காட்சி - 8

ஒருவன் : இது மண்ணெண்ணெய் க்யூ தானே...?

நபர் 1 : இது பாமாயில் க்யூ...

நபர் 2 : பாமாயில் க்யூவாம்... திருப்பதி லட்டு தர்றாங்க. அதான் நிக்கறோம்.

நபர் 3 : திருப்பதி லட்டு தர்றாங்களா...? குட்டுதான் தருவாங்க. பசு மாட்டோட கன்னல புர்ச்சித் தலைவர் தெரியறாராம். அவரப் பார்த்துட்டுப் போலாம்னுதான் கொக்காலடியிலிருந்து வந்திருக்கேன்.

ஒருவன் : இதே இடம்... இதே க்யூ... இதே ஜனங்க... பத்து வருஷத்துக்கு முந்தி.. தாத்தா நீ கூட 98 வருஷமா நிக்கறேன்னு சொல்லலை...?

தாத்தா : நான் மட்டுமா நிக்கறேன்? நீயுந்தான் நிக்கறே. இந்த ஊரு உலகம் எல்லாமேதான் நிக்குது. விலகி விலகிப் போனாலும் மறுபடியும் மறுபடியும் இந்த க்யூவுக்குத்தானே நாம எல்லோரும் வந்து சேரணும்?

ஒருவன் : இந்த க்யூவ விட்டு விலகவே முடியாதா?

தாத்தா : நீயுந்தான் இந்த க்யூவ விட்டு விலகிப் போக முயற்சி பண்ணினே. முடிஞ்சுதா? காலேஜ் க்யூவுக்குப் போனே. அப்புறம் ஆஃபீஸ் க்யூ, அப்புறம் ப்ரமோஷன் க்யூ, அப்புறம் கல்யாண க்யூ, அப்புறம் குழந்தையோட ஸ்கூல் அட்மிஷன் க்யூ.. அப்புறம்? மறுபடியும் காலேஜ், ஆஃபீஸ், ப்ரமோஷன், கல்யாணம், குழந்தை... ரேஷன் க்யூ, சினிமா க்யூன்னு வேற வேற பேரு சொல்லிக் கூப்பிடறோமே தவிர எல்லா க்யூவும் ஒண்ணுதான். ஒரே க்யூவில ஒரே இடத்திலதான் நாம் எப்பவுமே நின்னுக்கிட்டிருக்கோம். க்யூ நகர்ற மாதிரி சில சமயங்கள்ல தோணும். அது சும்மா... ஒரு பிரமை..."

ஒருவன் : இந்த க்யூவ விட்டு விலகறதுக்கு வேற வழியே கிடையாதா? பார்வையாளர்களே..: நீங்களாவது சொல்லுங்க. இது என்ன க்யூ? இவங்கல்லாம் எதுக்கு நிக்கறாங்க? இந்த க்யூ நகரவே நகராதா? இந்த க்யூவ விட்டுத் தப்பிக்கவே முடியாதா?

அனைவரும் : இந்த க்யூவ விட்டுத் தப்பிக்கவே முடியாதா?

(எல்லோரும் அப்படியே உறைந்து போய் நிற்கிறார்கள்)

(திரை)

வாஸந்தி

2

"தத்தை தாஹா தித்தைத் தாஹா -

திதிதை திதிதை திதிதை திதிதை - "

ஜ"ர வேகத்தில் தாளக் கட்டை அடித்த அதே கதியுடன் டான்ஸ் டீச்சரின் முகமும் கண்களும் எதிரில் ஆடிக் கொண்டிருந்த மாணவிகளின் மேல் சுழன்றன. டீச்சரின் பார்வையிலிருந்து எதுவும் தப்பாது. சொல் கட்டின் ஏற்ற இறக்கத்திலிருந்தே அவருடைய அதிருப்தியும் திருப்தியும் தெரியும். கட்டையை அடிக்கும் வீச்சிலேயே மாணவிகள் புரிந்து கொள்ளலாம். "தாளம் நழுவுது. வேகம் வேகம் அசமஞ்சங்களா வேகம்!" வெகு அபூர்வமாகத்தான் சபாஷ் கிடைக்கும். அதுவும் ஏதோ சலுகை காட்டுவது போல.

இது இந்தியக் கஞ்சத்தனம் என்று மீரா புரிந்து கொண்டு வெகு நாட்கள் ஆகின்றன. டீச்சரின் திட்டுக்களும் அதட்டல்களுமே ஒரு வகையான பாராட்டுக்கள் என்று நினைக்குமளவுக்கு விவேகம் வந்து விட்டது.

கட்டை ஆவேசத்துடன் பேசிற்று.

"தை திதித்தை - தைதை திதித்தை -

தைதைதை திதித்தை - தாம்!"

"மாணவிகள் மூச்சு வாங்க நின்ற போது லலிதாங்கி தனது மை தீட்டிய விழிகளை விரித்து "மீரா!" என்றாள் உரத்த குரலில்.

"எஸ் மேம்?" என்றாள் மீரா கலவரத்துடன் - இடுப்பிலிருந்த கையைத் தூக்கி நெற்றியிலிருந்த வியர்வையைத் துடைப்பதா, வேண்டாமா என்று யோசனையுடன்.

"தை திதித்தை பண்ணும் போது கையை நல்லா வட்டமா வீசு! காத்து லேந்து எத்தையோ பிடுங்கற மாதிரி இருக்கு நீ செய்யறது!"

மீரா சிரித்தாள். பின்னால் நிற்கும் மாணவிகளும் சிரித்தார்கள்.

"சிரிக்காதீங்க!" என்றாள் லலிதாங்கி கடுப்புடன். "பொழுதுபோக்குக்காக யாராவது இங்க வந்தீங்கன்னா தயவு செய்து நின்னுக்கிடுங்க. சிரத்தையாக் கத்துக் கிட்டாத்தான் இந்தக் கலைக்கு நீங்க மரியாதை கொடுத்ததா அர்த்தம். தத்தைத் தாஹா எத்தனை பேர் சரியாப் பண்ணனீங்க? முழங்காலை மடிக்காம லாம்ப் போஸ்ட் மாதிரி நிக்கிறீங்க. பண்ணுங்க மறுபடி - தத்தைத் தா ஹா-!"

ஆவேசமாக லலிதாங்கி தொடங்க, மாணவிகள் பாதிப் பேர் ரோசத்துடன், பாதிப் பேர் அலுப்புடன் தொடர்ந்தார்கள். டான்ஸ் டீச்சரின் விமர்சனத்துக்கு உள்ளானது ஏதும் புதிதில்லையானாலும் மீராவுக்கு அவமானமாக இருந்தது. என்றாவது ஒரு சபாஷ் வாங்கி விட முடிந்தால் அது அவள் வாழ்வில் ஒரு பொன்னாள் என்று ரொமான்டிக்காக நினைக்கத் தோன்றிற்று.

இந்திய கலாசாரம் குழந்தைகளுக்குத் தெரிய வேண்டும் என்கிற அப்பாவின் பிடிவாதத்தில் நியூயார்க்கில் ஒரு பரத நாட்டியப் பள்ளியில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி செய்தாள். அங்கு கிடைத்த பயிற்சிக்கும் இங்கு கிடைப்பதற்கும் சம்பந்தமேயில்லை என்று தோன்றிற்று. அமெரிக்காவில் கற்றுக் கொடுத்த ஷாலினி அமெரிக்கனைப் போலவே பேசுவாள். அடிக்கடி 'க்ரேட்' 'ஃபைன்' 'குட்' என்ற வார்த்தைகள்தான் பிரயோகிப்பாள். அமெரிக்க மாணவிகளுக்கு அவளிடம் தேவதா விசுவாசம். பரதநாட்டியத்தைக் கரை கண்டு விட்டதான தன்னம்பிக்கையை மாணவிகளிடம் ஏற்படுத்துவதில் ஷாலினி சாமர்த்தியசாலி. ட்ரிம்மாக இருப்பாள். வருஷத்துக்கு ஒருமுறை இந்தியாவுக்குச் சென்று வருமளவுக்குச் சொந்த சம்பாத்தியம். திரும்பி வரும் போது புதிய ட்ரெஸ்ஸுகளும் நகைகளும் இருக்கும்.

சென்னைக்கு வந்ததும் அக்கம்பக்கத்தில் அம்மா விசாரித்து மீராவை லலிதாங்கியிடம் வந்து சேர்த்த போது, மீராவின் நெஞ்சு நிமிர்ந்தே இருந்தது. இரண்டு வருஷப் பயிற்சி உள்ளவள் என்று. அலா

காதலெனும் வானவில்

சென்ற வாரம்...

மீராவுக்குப் பதினேழு வயது. இரண்டு வருஷங்கள் முன்பு வரை அவளும், தம்பி மகேஷும் பெற்றோருடன் அமெரிக்காவில் வாழ்ந்தார்கள். திடீரென்று இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்து விட அப்பா ஏன் முடிவு செய்தார் என்று அவளுக்குத் தெரியாது. இந்தியச் சூழலில் இருந்த கட்டு திட்டங்கள் புரியாமல், அதனுடன் சமரசம் செய்து கொள்ள முடியாமல் அவளும் மகேஷும் தடுமாறிய போது, வாழ்க்கையில் மீண்டும் பிரகாசம் காட்டியவர்கள் கிராமத்திலிருந்து வந்த அத்தைப் பாட்டியும் தாத்தாவும். அந்த வயோதிகத்தில் அவர்களிடையே இருந்த பரஸ்பர நெருக்கம் மீராவுக்கு இந்தியாவில் ஏற்பட்ட ஆச்சரியங்களுள் ஒன்று. பள்ளியில் அவள்தான் மானிட்டர். சில தோழிகளின் அசட்டுத்தனங்களைப் பார்க்கும் போது அத்தைப் பாட்டியின் வயது தனக்கு ஆகி விட்டது போலத் தோன்றும். அன்று சனிக்கிழமை. அவள் வகுப்பில் படிக்கும் மீனாட்சி ஃபோன் செய்கிறாள், தான் ஒரு பையனுடன் விருந்துக்குப் போவதாக. 'உன் வீட்டுக்கு வருவதாக அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன். நீ குட்டை உடைக்கக் கூடாது' என்கிறாள்.

ரிப்பை ஆடிக் காண்பி, எந்த ஜதிஸ்வரம் தெரியும் என்றெல்லாம் லலிதாங்கி கேட்கவில்லை. உன் குரு யார் என்று கூடக் கேட்கவில்லை. 'உன் பழைய பயிற்சியைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆரம்பத்திலேந்து தொடங்கணும். தையா-தைலேந்து'' என்றாள் நிர்தாட்சண்யமாக.

தன்னுடைய அமெரிக்க இங்கிலீஷ் தான் லலிதாங்கியின் அலட்சியத்துக்குக் காரணம் என்று மீராவுக்கு அன்று தோன்றிற்று. ஆனால் நாளும் கிழமையும் முகூர்த்தமும் பார்த்துக் கண்ணை மூடிய நிலையில் கைகூப்பிப் பிரார்த்தித்து, பிறகு தையா-தைஹா- என்று லலிதாங்கி கம்பீரத்துடன் பாடத்தைத் துவங்கிய போது மீராவுக்கு உடம்பு சிலிர்த்துப் போயிற்று. தெய்வ சன்னிதானத்தில் நுழைந்தது போலிருந்தது. லலிதாங்கியை மீராவுக்கு அந்த க்ஷணமே பிடித்துப் போயிற்று.

பயிற்சி முடிந்தது ஒரு வழியாக. எல்லாரும் வரிசையாக வந்து லலிதாங்கியின் முன் நின்று நிலத்தைத் தொட்டு வணங்கினார்கள்.

வகுப்பு முடிந்த உற்சாகத்தில் பெண்கள் எல்லாரும் சளசளவென்று பேசியபடி சலங்கையை அவிழ்த்துச் செருப்புக்குள்



காலை நுழைத்தார்கள். சல்வாருக்கு மேல் பயிற்சிக்காகப் புடைவை அணிந்த பெரிய பெண்கள் அதைக் களைந்து உடுப்பை மாற்றிக் கொண்டு வந்தார்கள். மீராவின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் நந்தினி தயாராவதற்காக மீரா அங்கிருந்த படிக்கட்டில் அமர்ந்து காத்திருந்தாள்.

நந்தினி படு ஸ்லோ. தினமும் வகுப்பு முடிந்து கிளம்புவதற்குள் மீராவின் பொறுமை நழுவிப் போகும். அந்தக் காத்திருக்கும் நேரத்தில் படிக்கவென்றே புத்தகம் ஏதாவது கொண்டு வருவது வழக்கம். இன்று கிளம்பும் அவசரத்தில் மறந்து விட்டது. நந்தினி ஸ்லோ மட்டு மில்லை. படு பயந்தாங்கொள்ளி. நிஜமா கவே பயப்படுகிறாளா அல்லது அப்படி நடிக்கிறாளா என்று கூட சில சமயம் மீராவுக்குச் சந்தேகம் வரும். அவளுடைய அம்மா நிஜமாகப் பயப்படுபவள். மீரா வின் துணை கிடைத்த காரணத்தால்தான் நந்தினியால் வகுப்பில் சேர முடிந்தது என்று மீராவுக்குத் தெரியும். மீரா வகுப்புக்குச் செல்ல முடியாத அன்று நந்தினிக்கும் பாடம் போகும். நந்தினியின் அம்மாவின் பயம் ரொம்பவும் விசித்திர மானது என்று தோன்றும். ''ஏன் ஆன்ட்டி, அவளைத் தனியா அனுப்பக் கூடாது?'' என்ற கேள்விக்கு, ''எங்க வீட்டிலே அப்படியெல்லாம் அனுப்பிச்சு வழக்க மில்லே'' என்ற பதில்தான் விளக்கமாக வரும். அந்த பதில் மீராவை அதிகமாகக் குழப்பும். நந்தினிக்கு அவளுடைய வயது தான் என்றாலும் அவளை ரட்சிக்கும் பொறுப்பு தன்னுடையது என்கிற எண் ணம் அவளைக் கட்டுப்படுத்தி வருகிறது. நந்தினியின் நிதானமும் மாறவில்லை, அவளுடைய அம்மாவின் பெருமை கலந்த பயமும் போகவில்லை.

''கமலா, எங்கிட்ட நீ எதையும் ஒளிக்கக் கூடாது. நிஜத்தைச் சொல்லு'' என்ற லலிதாங்கியின் குரல் கேட்டு மீரா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவ ளுக்கு முதுகைக் காட்டியபடி சற்று எட்டி லலிதாங்கி நின்றிருந்தாள். அவள் எதிரில் சீனியர் வகுப்பில் இருக்கும் கமலா ராகவன் மௌனமாக நின்றிருந்தாள். பதில் ஏதாவது சொன்னாளா என்று தெரிய வில்லை.

''போன கிளாசுக்கு வராத போது எனக்குக் கவலையாப் போச்சு. அதுக்கு முந்தின கிளாசுக்கும் நீ வரல்லே. காரண மும் சொல்லலே. ஏன் கமலா, கிளாசுக்கு வரல்லேன்னு உங்கம்மாவை எதேச்சை யாக் கேட்டேன். நல்லா இருக்காளே, கிளாசுக்கு வரல்லியான்னு அதிர்ந்து போய்க் கேக்கறாங்க. கிளாசுக்குப் போறதா வீட்டிலே சொல்லிட்டு வேற எங்கேயோ போறே போலிருக்கு.''

மீரா தன்னையே யாரோ அந்தக் கேள்வி கேட்டது போல தலையைக் குனிந்து கொண்டாள், கமலாவின் முகத் தில் தோன்றக்கூடிய சங்கடத்தைப் பார்க்கத் தெம்பு இல்லாமல். அவளுடைய பதிலைக் கேட்பதில் லலிதாங்கிக்கும் ஆர்வமில்லை என்று தோன்றிற்று.

''நீ ரொம்ப நல்ல ஸ்டுடன்ட். உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. எனக்குப் பெருமையளிக்கிற மாதிரி வருவேன்னு நா நினைச்சுக்கிட்டிருக்கேன். உனக்கு நாட்டி யத்திலே 'இன்ட்ரெஸ்ட் போயிட்டுதுன்னா வர்றதை நிறுத்திக்கோ. அனாவசியமாப் பொய் சொல்லி என்னைச் சங்கடத்திலே மாட்டி வைக்காதே.''

அதற்கும் கமலா பதில் சொன்னதாகத் தெரியவில்லை. மீரா மெல்லத் தலை நிமிர்ந்த போது, லலிதாங்கி விருவிரு வென்று வாசலுக்குச் சென்று விட்டாள். கமலா சற்று நேரம் அவள் செல்வதை மௌனமாகப் பார்த்து விட்டு இடுப்பில் கட்டியிருந்த சேலைத் தலைப்பால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு நகர்ந்தாள்.

மீராவுக்குச் சட்டென்று மீனாட்சியின் நினைவு வந்தது. எத்தனை குண்டு தைரி யம் அவளுக்கு என்று இப்பொழுது கோபம் வந்தது. மீனாட்சி ஒரு லூஸ் என்று மீராவுக்கு எண்ணம். படிப்பு ஏறவில் லையா, அல்லது வீம்புக்காக படிப்பில் நாட்டமில்லாதவளாக இருக்கிறாளா என்று தெரியாது. அசட்டுப் பிசட்டென்று பெருமையடித்துக் கொள்ளும் வழக்கம் உண்டு. வெளுப்பாக இருப்பதால் தான் ரொம்ப அழகு என்ற எண்ணம் அவளுக்கு. தெருவில் செல்லும் இளைஞர்கள் எல்லாம் தன் மேல் காதல் கொண் டுள்ளதாகக் கற்பித்துக் கொள்வாள். அது தினம் தினம் வகுப்பில் ஒரு புதிய காதல் கதையாகப் பரிணமிக்கும். சரியான கிறுக்கு என்று மற்ற பெண்கள்பரிகசிப்பதைப் பற்றி அவளுக்கு அக்கறையில்லை. ''போர டிக்காதே மீனாட்சி'' என்று ஒருமுறை மீரா சொன்னதற்கு ''ஏன் உனக்குப் பொறா மையா இருக்கா?'' என்று கேட்ட புத்தி சாலிப் பெண்.

இன்றைக்கு என்ன தில்லுமுல்லு செய்யப் புறப்பட்டாள் என்று புரிய வில்லை. ''உன் வீட்டுக்குப் போறதா என் அம்மாகிட்ட சொல்லியிருக்கேன். என் காலை வாரி விடாதே.''

அந்த நினைப்பில் மறுபடி ஏற்பட்ட எரிச்சலில் மீரா, ''டாமிட்'' என்றாள்.


''என்ன ஆச்சு உனக்கு?'' என்று காலை யில் அம்மா கேட்ட அதே கேள்வியை

கான்ஸ்டபிள் : சார், சார், கேடி ஒருத்தன் மாட்டியிருக்கான் சார்...!

இன்ஸ்பெக்டர் : அப்படியா...? என்ன குற்றம் செஞ்சான்?

கான்ஸ்டபிள் : அதை இனிமேல் தான் சார் கண்டுபிடிக்கணும்...!

– கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



இப்பொழுது எதிரில் நின்ற நந்தினி கேட்டாள்.

''உனக்கு மீனாட்சியைத் தெரியுமோ?'' என்றாள் மீரா, மீனாட்சியை இன்னும் மனத்திலிருந்து ஒதுக்க முடியாமல்.

''எந்த மீனாட்சி? எப்பப் பார்த்தாலும் ஹிந்தி சினிமாப் பாட்டை முணுமுணுத்துக்கிட்டு இருப்பாளே அவளா, உன் செக்ஷன்லே இருக்கறவதானே?''

''ஆமாம்,'' என்று மீரா சிரித்தாள். ''பாட்டு மாத்திரம் இல்லே. அவளுடைய ஹீரோ கூட ஹிந்தி ஸ்டார்தான். ஆமீர் கான்! போட்டோவை எப்பவும் புத்தகத்துக்கு நடுவிலே வச்சிக்கிட்டிருப்பா!''

''தூ!'' என்று நந்தினி முகத்தைச் சுளித்தது மீராவுக்கு அதிக தமாஷாக இருந்தது.

''ரொம்பத் தெரியாது. அந்த மாதிரி இருக்கிற பெண்கள்கிட்டேந்து நா ஒதுங்கி இருந்துடறது. எனக்கு பயம்.''

மீரா சிரித்தாள்.

''என்ன பயம்?'' என்று நந்தினியைக் கிண்டினாள்.

''அவங்க சகவாசமெல்லாம் நல்ல சகவாசமில்லேன்னு எங்க அம்மா கண்டிக்கச் சொல்லுவாங்க. மீனாட்சியோட நா பழகறேன்னா எங்கம்மா என்னை ஸ்கூல்லேந்து எடுத்தாலும் எடுத்துடுவாங்க.''

''மீனாட்சியைப் பத்தி உங்கம்மாவுக்கு எப்படித் தெரியும்?''

''ஓ, அவங்க குடும்பம் பூராத் தெரியுமில்லே?''

மீரா யோசனையுடன் நடந்தாள். 'என்ன தெரியும்?' என்று மேற்கொண்டு கேட்பது அநாகரிகம் என்று தோன்றிற்று.

நந்தினி சுற்றுமுற்றும் பார்த்தபடி, ''அவங்க அம்மாவே ஒரு மாதிரின்னு சொல்வாங்க'' என்றாள் ரகசியக் குரலில்.

மீராவுக்குச் சங்கடமாகப் போயிற்று. மீனாட்சியைப் பற்றிப் பேச்சை ஆரம்பித்தது தன்னுடைய தவறு என்று ஓர் அவமான உணர்வு ஏற்பட்டது.

''ப்ளீஸ் இதைப் பத்தியெல்லாம் நாம பேசாம இருக்கிறது நல்லது. நமக்கென்ன அதைப் பத்தி?'' என்றாள் சட்டென்று.

''அது சரி, நமக்கென்ன வந்தது?'' என்றாள் நந்தினி, சாதுவான முகபாவத்தோடு. நீ கேட்டதாலே சொன்னேன்.''

மீனாட்சியின் அம்மாவைப் பற்றி நான் எங்கே விவரம் கேட்டேன் என்று திருப்பிக் கேட்க மீராவுக்கு அலுப்பாக இருந்தது.

இன்று காலை மீனாட்சி என்ன சொன்னாள் என்று அம்மாவிடம் சொல்ல முடியவில்லை. சொல்வதற்குள் வாசலில் யாரோ கூப்பிட அம்மா அதை கவனிக்கச் சென்று பிறகு மறந்து போனாள்.

நட்டநடுத் தெருவில் தங்களை மறந்த பேச்சில் நடக்கும் போது பின்னால் ஒலித்த ஹார்ன் ஒலியில் இருவரும் சட்டென்று ஒதுங்கினார்கள். டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்த லலிதாங்கி, ''என்ன பேச்சு அப்படி?'' என்றாள்.

''நீங்க காலை ஒடிச்சுக்கிட்டா நா எப்படி என் பிழைப்பை நடத்தறது?'' என்று சிரித்தாள். அவளை அப்படி ஓர் உல்லாசமான நிலையில் மீரா பார்த்ததில்லை. அவள் சிரிக்கும் போது, ரொம்பவும் அழகாகத் தோன்றினாள். பக்கத்தில் லேசாகத் தலை நரைத்த ஓர் ஆண் அமர்ந்திருந்தார். அவரும் அவர்களைப் பார்த்துச் சிரித்தார்.

கார் சென்றதும் நந்தினி ''யார் அந்த ஆள்?'' என்றாள்.

''யாருக்குத் தெரியும். மேம் உடைய பாய் ஃப்ரெண்டா இருக்கலாம்,'' என்று மீரா சிரித்தாள்.

''சிச்சி இந்த வயசிலா?'' என்ற நந்தினியின் பேச்சு மீராவுக்குத் தமாஷாக இருந்தது.

''ஏன் இருக்கக் கூடாது?''

''சீ!''

இந்த நந்தினியுடன் பேசி ஏதும் பிரயோஜனமில்லை என்று திடீரென்று மீராவுக்கு அலுப்பு ஏற்பட்டது. வீடும் வந்து விட்டது.

படியேறி உள்ளே சென்ற போது மீனாட்சியின் அம்மா வரவேற்பறையில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

(தொடரும்)

பொன்விழா ஆண்டு | பொன்நகைப் பரிசுத் திட்டம் - 6

பலன் தந்த பழமொழி

அவிட்டத்தில் பெண் பிறந்தால் தவிட்டுப் பானையெல்லாம் தங்கம்!

என் நண்பருக்குக் கால்நடைத் தீவனக் கடையில் வேலை. ஒருநாள் சந்தித்த போது தனக்கு இரண்டாவதாகவும் பெண் பிறந்திருப்பதாகவும் ''அவிட்டம் ஆகாது'' என்று குடும்பத்தினர் கூறுவதாகவும் சொன்னார். ''அவிட்ட நட்சத்திரம் மிக நல்லது'' என்று நான் ஆறுதல் கூறி, ''அவிட்டத்தில் பெண் பிறந்தால் தவிட்டுப் பானையெல்லாம் தங்கம்'' என்ற பழமொழியையும் உதிர்த்து வைத்தேன்! ஆஞ்சநேயரை தரிசித்து அமைதி பெறுமாறு சொன்னேன்.



நான்கு ஆண்டுகள் சென்றுதான் அவரை மீண்டும் பார்க்க முடிந்தது. ''ஸார் என்னைத் தெரிகிறதா?'' என்றார். வளமை அவரிடமும் அவர் மனைவி, குழந்தையிடமும் நன்றாகவே தெரிந்தது.

மேலும் விசாரிக்க அவர் கூறியது என்னை வியப்பில் ஆழ்த்தியது : தவிட்டு எண்ணெய் ஆலைகள்; ஒருவித கஎரக பிஸ்கட் தயாரிப்புத் தொழிலகம் ஆகியவற்றுக்குத் தவிடு சப்ளை தேவை என்று ராணிப்பேட்டை நண்பர் ஒருவர் மூலமாகக் கேள்விப்பட்டாராம். இவருக்குக் கால்நடைத் தீவனத்தில் இருந்த அனுபவம் கைகொடுக்க, சிறந்த ரக தவிடு சப்ளை செய்து நல்ல பெயரெடுத்தாராம். தவிடு மொத்த வியாபாரத்தில் கொழித்து, அசோக் நகர் வீட்டு வசதி வாரியத்தில் இரட்டை வீட்டில் ஒன்றும் வாங்கி விட்டாராம்!

''நீங்க சொன்ன பழமொழிதான் சார் என்னை ஊக்குவித்தது. அவசியம் வீட்டுக்கு வாங்க'' என்றார். ''ஆஞ்சனேயர் அருள்'' என்று கூறி விடைபெற்றேன்.

சென்னை - 4, எம். துரை.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு பெறுபவர் :

எம். துரை,
25, ராக்கியப்ப முதலி தெரு,
சென்னை -- 600 004.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை

சில ஆண்டுகளுக்கு முன்னர், என் தாய் கொடிய புற்றுநோய்க்கு ஆளான போது, என் தாயின் சிகிச்சைக்குத் தேவையான பணமில்லாமல் ரொம்பக் கஷ்டப்பட்ட நேரம். எங்களுக்கு மிக நெருங்கிய உறவினர் ஒருவர் வசதியான நிலையிலிருந்தார். ஆனால் எங்கள் இரு குடும்பங்களுக்குமிடையே பல ஆண்டுகளாகப் பகையும் மனக் கசப்பும் இருந்து வந்த காரணத்தால், பண உதவி கேட்டு அவர்

களை நாங்கள் அணுக இயலாத நிலை. அது மட்டுமின்றி, நமக்கு அநீதி இழைத்த குடும்பத்திடமே சென்று பண உதவி கேட்பதா என்ற தயக்கமும் எங்களைத் தடுத்து வந்தது. இறுதியில் ''குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'' என்ற தமிழ்ப் பழமொழியை நினைவுகூர்ந்து திறந்த மனத்துடன் அவர்களை அணுகினோம். ஆச்சரியப்படும் விதத்தில் அவர்களும் பல ஆண்டுப் பகையை அறவே மறந்து, எங்களுக்கு உதவத் தாராளமாக முன்வந்தனர். ஆனால் ''கைக்கெட்டியும் வாய்க்கெட்டாதது'' போல், என் தாய் காலமாகி விட்டார். மிகவும் நெகிழ்ந்து போன அந்த உறவினர், எங்கள் இரு குடும்பங்களுக்குமிடையே மீண்டும் பாசப் பிணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவுடன், அவர் மகனுக்கு என் தங்கையை மணமுடிக்க முன் வந்தார். நாங்களும் மகிழ்ச்சியுடன் சம்மதிக்க, என் சகோதரியின் திருமணம் இனிதே நடந்தேறியது.

இன்று அன்யோன்யமாக இருக்கும் எங்கள் இரு குடும்பங்களையும் இணைத்து வைத்த பெருமை, ''குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'' என்ற தமிழ் மூதுரையையே சேரும்.

சென்னை - 94, ஹரிப்ரியாகுமார்.

ஒவ்வொரு தானியத்திலும் உண்ணுபவன் பெயர்!

''தானே தானே பேலிக்கா ஹை கானே வாலே கா நாம்.'' இது பஞ்சாபில் வழங்கப்படும் ஒரு பழமொழி. இதன் அர்த்தம் ''தன்னை உண்ணப் போகிறவனுடைய பெயர் ஒவ்வொரு தானியத்திலும் எழுதப்பட்டிருக்கிறது.''

1971-ம் ஆண்டு போர் முடிந்து ஆவலுடன் மனைவியைக் காண ஊர் திரும்பிக் கொண்டிருந்தேன். பத்தான்கோட் இரயில் நிலையத்தில் ரிசர்வேஷன் பெட்டிகள் பாதி காலி. அப் பெட்டிப் பொறுப்பாளரான டி.டி.ஆர். ஒரு சர்தார்ஜி. அவரை அணுகி இடம் கேட்ட போது எனக்கு அவர் கை விரித்து விட்டார். ஆனால் அவர் ஊர் ஆட்களை மட்டும் பல பேரை ஏற்றிக் கொண்டார். பார்த்தேன். ''இங்கு உள்ள காலி யிடங்களில் ஏதாவது ஒன்றாவது எனக்கென்று ஆண்டவன் ஒதுக்கியிருப் பான்'' என்று அவர் காதுபடக் கூறியது மட்டுமல்லாமல், ''தானே தானே பேலிக்கா ஹை கானே வாலே கா நாம்'' என்ற அவர் ஊர்ப் பழமொழியையும் பக்கா பஞ்சாபியில் எடுத்து விட்டேன்.

ஒரு கறுப்பு 'மதராசி'யிடமிருந்து தன்னுடைய ''காவு'' (கிராமப்) பழமொழி அலட்சியமாக உதிர்ந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த அந்த சர்தார்ஜி ''நீங்களும் ஏறிக் கொள்ளுங்கள்'' என்றார்.

பிறகென்ன? பழமொழி தயவில் ஜாம் ஜாமென்று படுத்துக் கொண்டே பயணம் செய்தேன்!

சென்னை - 102,
எம். ஆர். எஸ். ஜோசப்.

ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்

அப்போது நான் எட்டாம் வகுப்பில் இருந்தேன். படிப்பில் ரொம்பவும் சுமார். ஒருநாள் எங்கள் சயன்ஸ் ஆசிரியர் என்னையும், வேறு சில மாணவர்களையும் முதல் நாள் பாடத்தில் ஒரு கேள்வி கேட்க, நாங்கள் 'திருதிரு'வென விழித்தோம். பின்னர் அதே கேள்வியை நன்கு படிப்பதாகக் கருதப்பட்ட ஒரு மாணவனையும் ஒரு மாணவியையும் கேட்டார்; அவர்களும் விடையிறுக்கவில்லை. அவர்களைக் காட்டி ''ஆடிக் காற்றில் அம்மிக் கல்லே பறக்கும் போது, எச்சில் இலைகளைப் பற்றி என்ன கேள்வி!'' என்றார். என்னை மிகவும் உறுத்தியது, ''எச்சில் இலை'' என்ற போது அவர் எங்களைக் காட்டியது தான்! நான் புழுங்கினேன்; துடித்தேன். அன்றே கறுவிக் கொண்டேன். ''நான் அம்மிக்கல் மட்டுமல்ல, மதுரை மீனாட்சி கோயிலின் கோபுரம்'' என்று காட்டத் துணிந்தேன்.

முழு மூச்சாக இறங்கினேன். அடுத்த தேர்வில் எனக்கு முதல் ராங்க். தொடர்ந்து உழைத்துப் பட்டப்படிப்பு முடித்து, மத்திய அரசாங்கத் தேர்வு எழுதி ஆபீஸராகிய நான், சவுக்கால் அடித்தது போல் என்னைச் சிலுப்பி விட்ட அந்தப் பழமொழியை எப்போதும் நினைவுகூர்கிறேன். அதுவன்றோ என்னைப் புது மனிதனாக்கியது!

சென்னை - 41, டி. ரங்கநாதன்.

● எல். மாறன், மேல்பட்டி.

? ஒரிஸ்ஸா முதல்வர் பட் நாயக்கை கைநீட்டி அடித்த வேலையில்லாப் பட்டதாரி இளைஞனின் நீரச் செயல் குறித்து?

! அந்த நீரச் செயலின் மதிப்பு ரூ 250!

● எம். சந்திரசேகர், திருச்சி.

? வேத ஆகம கல்லூரியை வேண்டாம் என்கிறாரே கலைஞர்?

! வரவேற்கிறாரே, வீரமணி!

● இரா. குமார், புதுச்சேரி.

? இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியைத் தடுக்கும் நோக்கில் பம்பாய் கிரிக்கெட் ஸ்டேடியத்தை விஷமிகள் நாசப் படுத்தியது குறித்து?

! அதைச் சரிப்படுத்துவதில் சிரமம் இல்லை என்று பம்பாய் கிரிக்கெட் போர்டு அதிகாரி தெரிவித்துள்ளார். ஆனால் சேதம் ஏற்பட்டிருப்பதுமைதானத் துக்கு மட்டுமல்ல; லட்சோப லட்சம் உள் ளங்கள் ரணப்பட்டுப் போயிருக்கின்றன. பாகிஸ்தான் டூரும் ரத்தாகி விட்டது மேலும் சோகமே.

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? கவிஞர் கண்ணதாசன் மணிமண்டப அடிக்கல்லில் இருந்த கருணாநிதியின் பெயர் அகற்றப்பட்டு விட்டதாமே?

! சகிப்புத் தன்மையை - இருக்கிறது என் றால் - இங்கேயல்லவா காட்டி இருக்க வேண்டும்!

● தஞ்சைத்தரணியன், முத்துப்பேட்டை.

? கல்கியின் கார்ட்டூன் குறித்து கலைஞர் வருத்தப்பட்டுள்ளாரே?

! பதவியில் இருந்தால் கோபப்படு வார்கள்; பதவியில் இல்லாத போது வருத்தப்படு வார்கள். நியாயத்தை மட்டும் உணர்ந்து ஏற்க மாட்டார்கள்.

● ஸி. சுபாஷ் சந்திரபோஸ், செட்டிகுளம்.

? சார்ஜா கோப்பை கிரிக்கெட் எப்படி?

! ஆரம்பத்தில் சக்கைப் போடு; போகப் போக பிசுபிசுத்தது. அதிலும் சோகம் என்ன வெனில், பாகிஸ்தான் இறுதி ரவுண்டில் இடம் பிடிக்குமா என்ற நிலையில் ஆடப் பட்ட மேட்சின் போது, போதிய வெளிச் சம் இல்லாததால் ஆட்டத்தை நிறுத்தி விட அம்பயர்கள் தயாராயிருந்தனர். நம் ஆட்டக்காரர்களோ, ரூல்ஸ் தெரியாததால் தொடர்ந்து ஆடுவதாகக் கூறி, தோல்வி யைத் தழுவினர். அம்பயர்கள் தந்த வாய்ப்பை ஏற்றிருந்தால் 40வது ஓவர் நிலை வைத்து வெற்றி தோல்வி நிர்ண யிக்கப்பட்டிருக்கும். பாகிஸ்தான் இறுதிச் சுற்றுக்கு வந்தே இராது! ஆடத் தெரிந்தால் போதாது; ரூல்ஸ் தெரிய வேண்டும்!

● பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை.

? யார் தலை அழகு?

! மாலி வரைந்தளித்த விகடன் தலை; பின்னர் கோபுலு மெருகேற்றிய அதே தலை.

● மீ. தமிழ் ஷாஜஹான், கம்பம்.

? பிரதமரின் தமிழக விஜயம் மூலம் ஜெய லலிதாவுக்கும் நரசிம்மராவுக்கும் இடையில் இருந்த உரசல் மறைந்து விட்டதா?

! முன்பிருந்த 'கீச் கீச்' தொல்லைக்கு (பாம்) ஆயில் போட்டாகி விட்டது.

● எஸ். கே. ராமசாமி, சென்னம்பட்டி.

? 'ஜெயலலிதா ஆட்சியில் ஊழல் என்ற பேச்சுக்கே இடமில்லை' என்று செங்கோட் டையன் கூறுகிறாரே?

! வேறு மாதிரி சொன்னால் அவருக்கு மந்திரி சபையில் இடம் என்ற பேச்சுக்கே




☛ நீரச் செயலுக்கு ரூ 250



☛ ராபின் ஹுட்!





☛ பரதநாட்டியம் ஆடினால்

இடமில்லை!

● து. சிவா, முசிறி.

? குஷ்பு, கௌதமி, கனகா - இரட்டை ஜடை பின்னல் யாருக்கு அழகு?

! யாருக்கு அழகோ இல்லையோ, இரட்டைப் பின்னல் போடுகிறவர்களுக்குத் தலைவலி அதிகம் வரும் என்று படித்தது நினைவிருக்கிறது.

● ஏ. நிஷான்ஹலீம், திட்டச்சேரி.

? 'என்னை எதிர்க்க யாருக்கு தைரியம் இருக்கிறது? நான் பீஹாரின் ராபின் ஹுட்' என்று லாலு பிரசாத் யாதவ் கூறுகிறாரே?

! ராபின் ஹுட் கதையை அவர் நன்றாகப் படித்தால் - சரியாகப் புரிந்து கொண்டால் - ஒன்று, இப்படி பேச மாட்டார்; அல்லது, கொள்ளையருடன் குலாவிக் கொண்டிருக்க மாட்டார்; தமது போக்கை மாற்றிக் கொள்வார்.

● ஆர். ஜேஸ்மின் ரமேஷ், கம்பம்.

? நரகாசுரன் நல்லவனாகப் பிறந்திருந்தால்?

! மனோகருக்கு ஒரு ஹீரோ வில்லன் கிடைத்திருக்க மாட்டான்; ஒரு டி.வி. ஸீரியல் உருவாகியிராது; ஒரு வழக்குப் போட வாய்ப்பு இருந்திருக்காது; மனோகருக்கு ஆதரவாக ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிராது; ஹிந்து மதக் கோட்பாடு பற்றி நீதிபதியிடமிருந்து ஒரு விரிவுரை பிறந்திருக்காது.

● சி. ரஜினி அருள், மணக்காடு.

? சூப்பர் ஸ்டார் ரஜினி பரதநாட்டியம் ஆடினால் எப்படி இருக்கும்?

! ரஜினி என்ன செய்தாலும் அவர் ரசிகர்கள் ஏற்றுக் கொண்டு விடுவார்கள் என்ற கணிப்பு நா. ஒ. ந. படத்தில் அடிபட்டு விட்டதே!

● இ. சுரேஷ்பாபு, பட்டுக்கோட்டை.

? சமீபத்தில் மனத்தை நெருடிய நிகழ்ச்சி?

! ஒன்றல்ல, இரண்டு. நெருடும் பத்தினருக்கு பணம் தரப்பட்டதாக பி. ஸி. ஸி. ஐ. வங்கியைச் சேர்ந்த ஒருவர் சாட்சி கூறியிருப்பது. இது பொய் என்று நிரூபிக்கப்படுவதற்காகவாவது வி. பி. சிங்கின் விசாரணை யோசனை ஏற்கப்பட வேண்டும். மற்றொன்று, போஃபர்ஸ் ஊழலை அம்பலப்படுத்துவதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வந்த அதிகாரி மாதவன் மாற்றப்பட்டிருப்பது. இது பெரிய அநியாயம் என்றும், இதுவரை உண்மைகளைக் கண்டு பிடிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள், செலவழிக்கப்பட்ட பணம் எல்லாம் வீண் விரயம் என்றாகி விடும் என்றும் மோகன்தாஸ் குறிப்பிட்டிருப்பதை அரசு அலட்சியப்படுத்தும்; ஆனால் மக்களேனும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

☛ உரசல் மறைந்தது



☛ இடமில்லை!





☛ எதிர்க்கிறாரே?



☛ வரவேற்கிறாரே?

● இரத்தின மாணிக்கவாசகம், திருப்பத்தூர்.

? சென்னையில் பஸ் ஊழியர் மாணவர் இடையே ஏற்பட்ட தகராறு காவல் துறையின் தடியடியில் முடிந்தது பற்றி...?

! இதுகுறித்து கருத்துக்கள் வெளியிடப்பட வேண்டாம் என்றுதானோ என்னவோ, நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு விட்டார் முதல்வர். என்றாலும் பொதுவாக நோக்குமிடத்தில் இவையெல்லாம் தவிர்க்கப்படக் கூடியதே. மாணவரும் பஸ் ஊழியரும்தான் சின்னதைப் பெரிசுபடுத்துகிறார்கள் என்றால் இதில் தலையிடும் போலீஸார், சமாதானப்படுத்தி நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்குப் பதில், தாங்களும் அமைதி இழந்து பிரச்னையை வளர்த்து விட்டு விடுகிறார்கள், பல சந்தர்ப்பங்களில்.

● ஜி. வெங்கு, சிதம்பரம் ❑

? விஞ்ஞானத்தில் நன்மை அதிகமா? தீமை அதிகமா?

! பம்பாய் அணு ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் பி. கே. ஐயங்கார் போன்றவர்கள், ''பூகம்பம் வந்தால் பாதுகாப்புக்காக அணுமின் நிலையத்தில் போய் மக்கள் தங்கலாம்'' என்று பேசும் போது தீமை தான் அதிகம். ''சமீபத்திய பூகம்பம் அந்த வட்டாரத்தில் அணுமின் நிலையம் இருப்பது ஆபத்து என்பதை உணர்த்தவில்லையா?'' என்ற நிருபர் கேள்விக்குத் தான் மேற்படி பதில் அளித்திருக்கிறார் அய்யங்கார்!

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஜி. வெங்கு,
5, வேணுகோபால் பிள்ளை தெரு,
சிதம்பரம் - 608 001

சிவாஜி கொடுத்த சஸ்பென்ஸ்!

ஏ. எம். ராஜாவின் நேரடியான கேள்விக்கு நான் வெளிப்படையாகவே பதில் சொன்னேன் : ''இந்தப் பாட்டைப் பொறுத்தமட்டில், ராஜா, நீங்கதான் பாடப் போறீங்க ' என்பதுதான் அந்தப் பதில்.

காரணம், இது ராஜாவுக்குத் தன்மானப் பிரச்னை. அது எனக்குப் புரிந்தது. தன் மானத்துக்கு நான் முதலிடம் தருகிறவன் என்பதுதான் உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமே. அதனால் அந்தப் பாட்டைப் பிறகு ராஜாவுடன் சேர்ந்து பாடியவர் சுசீலாதான்!

நான் டைரக்டர் ஆனது போலவே, தயாரிப்பாளர் ஆன கதையும் சுவாரஸ்யமானது. திரைக்கதை - வசனகர்த்தா என்று ஏற்கெனவே அங்கீகாரம் பெற்றிருந்தவன் நான். எனது நண்பர்கள் கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜன். மூவருக்குமே உள்ளூர தயாரிப்பாளர் ஆகும் ஆசை இருந்திருக்கிறது. ஆனால் மூவரில் யார் அந்த யோசனையை வெளிப்படையாகச் சொன்னது என்பது நினைவில்லை. அந்தத் துணிச்சலான கேள்வி பிறந்தது மட்டும் உண்மை : ''நாம் மூவரும் சேர்ந்து ஒரு படம் எடுத்தால் என்ன?''

கேள்வி பிறந்து விட்டதேயொழிய மூவருமே சட்டென்று பதில் சொல்லவில்லை. சினிமா எடுப்பது என்றால் சும்மாவா? மூவருமே அந்தக் கேள்வியால் அதிர்ச்சி அடைந்து மௌனமானோம்.

நான் மெல்ல சுதாரித்துக் கொண்டு, ''கதை வசனத்துக்கு நானாச்சு'' என்றேன்.

''அது சரி, யாரை நடிக்க வைப்பது? டைரக்ஷன், மியூசிக் எல்லாம் யார்?''

''பணத்துக்கு எங்கே போவது?''

''ஏதோ ஒருவேளை சாப்பாடு நிம்மதியா நடக்குது; அதுக்கும் ஆபத்து வரணுமா?''

இப்படியெல்லாம் வேடிக்கையாகவும் சீரியஸாகவும் பலவாறு விவாதித்தோம். இறுதியில் எடுத்த முடிவு : ''எப்படியாவது முயற்சி செய்து ஒரு சினிமா தயாரித்து விடுவது!'' மறுநாள் முதல், மூவருக்கும் சினிமா தயாரிப்பு பற்றிய சிந்தனைதான்.

டைரக்டர் ஸ்ரீதர்

அமரதீபம் கதையை நான் கூற, அது பார்ட்னர்களுக்கு மிகவும் பிடித்துப் போனது. 'சரி, யாரை நடிக்க வைப்பது?' பெரிய அளவில் செய்ய வேண்டும் என்று மூவருக்குமே எண்ணம்.

''ஹீரோவாக சிவாஜியைப் போடலாம்'' என்றேன்.

''ஹீரோயின்கள் இருவரில் ஒருவர் பத்மினி; மற்றொருவர் சாவித்திரி'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

'நடிக்க ஒப்புக் கொள்வார்களா?' என்பது பற்றி நாங்கள் சிந்தித்துக் கூடப் பார்க்கவில்லை! ஆர்வத்துடன் திட்டங்களைப் போட்டோம்!

''படத்துக்கு டைரக்டராகப் பிரகாஷ் ராவையும் மியூஸிக் டைரக்டராக சலபதி ராவையும் போடலாம்'' என்றேன்.

இருவருமே தெலுங்கில் பிரபலம். அவர்கள் திறமை என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது. அவர்களைத் தமிழ்த் திரை உலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பது என் ஆசை!

'ஆசை இருக்கு தாசில் பண்ண' என்ற பழமொழி எனக்கு மறக்கவில்லை. இருந்தாலும் எண்ண ஓட்டங்களைத் தடுக்கவும் முடியவில்லை.

டப்பிங் படங்களுக்கு வசனம் எழுதுவது அத்தனை கௌரவமான விஷயமாகக் கருதப்படாத காலகட்டம் அது. என்றாலும் முத்திரை பதித்த வசனகர்த்தாவாக இருந்த நான், ஒரு தெலுங்குப் படத்துக்கு டப்பிங் வசனம் எழுத ஒப்புக் கொண்டேன் என்றால், அதற்கு முக்கிய காரணம் பிரகாஷ் ராவ் டைரக்ஷனில் நான் மதிப்பு வைத்



☛ சிவாஜி சஸ்பென்ஸ் கொடுத்தார்!

திருந்ததுதான். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பிரகாஷ்ராவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்திருந்தது. அந்த நட்பைப் பயன்படுத்தி, அமரதீபம் கதையைக் கூறி, அதைப் படமெடுக்க நாங்கள் தீர்மானித்திருப்பதாகவும், படத்தை டைரக்ட் செய்யும்படியும் பிரகாஷ்ராவைக் கேட்டுக் கொள்ள அவரும் உடனே சம்மதித்தார். தமிழில் கிடைக்கும் முதல் வாய்ப்பு என்பதால் அவருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

இசையமைப்பாளர் சலபதி ராவின் ஸ்பெஷாலிடியே அவருடைய தெலுங்கு கிராமியப் பாடல் மெட்டுக்கள்தாம். சளைக்காமல் டியூன்களை மாற்றி மாற்றிப் போட்டுக் காட்டுவார். இரண்டு டியூன்களை இணைத்துப் புதிய மெட்டு அமைப்பார்! அமரதீபம் படத்துக்கு ஜனரஞ்சகமான மெட்டு ஒன்று போட்டுத் தருமாறு அவரைக் கேட்ட போது சம்மதித்தார். டியூனைக் கேட்டவுடனேயே 'ஹிட் ஆகும்' என்று எனக்குத் தோன்றி விட்டது.

இந்த டியூனுக்குப் பாட்டு எழுத தஞ்சை ராமையாதாஸ்தான் சரியான நபர் என்று எனக்குத் தோன்றியது. அவர் உடல் நலம் சரியில்லாமல் படுத்திருந்தார். 'வீட்டுக்கு வரலாமா?' என்ற போது 'சரி' என்றார்.

தபலா, ஹார்மோனியம் சகிதம் நானும் சலபதிராவும் போனோம். ராமையாதாஸ் ஒரு தடவை டியூனைக் கேட்டார். ஒரு வினாடி யோசித்தார்.

''நம்பினா நம்புங்க
நம்பாட்டி போங்க!''

என்று முதல் அடியை அவர் கூறவும் எனக்குத் 'திக்'கென்றிருந்தது. படமே எடுக்கப்படுமா என்பதில் நம்பிக்கை இல்லாமல் இருந்து வந்த கால கட்டமாயிற்றே!

''என்னங்க இது? எங்களோட முதல் படம் ஆச்சே! இதில போய் எடுத்த எடுப்பில், 'நம்பினா நம்புங்க; நம்பாட்டிப் போங்க'ன்னு பாட்டுப் போட்டா விநியோகஸ்தர்கள் என்ன நினைப்பாங்க? அபசகுனம், செண்டிமெண்ட் என்றெல்லாம் பார்த்தாலும் சரியாப் படலையே. ஏதாவது ஜாலியா பாட்டுப் போடுங்களேன்!'' என்றேன்.

தஞ்சை ராமையாதாஸ், நான் சொன்னதையே 'சட்'டென்று பிடித்துக் கொண்டார்!

''ஜாலிலோ ஜிம்கானா!
டோலிலோ கும்கானா!''


என்று பாட்டமைத்தார்!

எனக்கு திகைப்பு ஒரு பக்கம்; சிரிப்பு ஒரு பக்கம். 'ஒரு வார்த்தைக்குக் கூட அர்த்தமில்லாமல் ஒரு பாட்டா?' ஆனாலும் ஓர் உள்ளுணர்வு, ''ஏற்றுக் கொள்'' என்றது. பாட்டு 'ஹிட்' ஆயிற்று!

பாட்டு ஹிட் ஆனது பின்னால் நடந்தது. ஆனால் படப்பிடிப்பு எப்படி நடந்தது? பணம் எங்கிருந்து கிடைத்தது? அதைச் சொல்ல வேண்டுமல்லவா?

''ஐயாயிரம் ரூபாய் என்னால் புரட்டி விட முடியும்'' என்றேன். மூவரில் நான்தான் கொஞ்சம் கூடுதலாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தவன் என்றால், மற்ற இரு

☛ பிரகாஷ்ராவ்: தமிழுக்கு அறிமுகம்



☛ சலபதிராவ்: கிராமியப் பாடல் ஸ்பெஷல்!



☛ தஞ்சை ராமையாதாஸ்: ''நம்பினா நம்புங்க!''



வரும் எவ்வளவு திரட்டி விட முடியும்? படம் எடுக்க ஐந்தும் பத்தும் போதுமா?

எனக்கு ஒரு ஐடியா உதித்தது. 'எதிர் பாராதது' படம் எடுக்கப்பட்ட போது, சிவாஜி, பத்மினி இருவருடனும் பழகி இருக்கிறேன். நான் நன்றாகக் கதை - வசனம் எழுதியிருப்பதாக அவர்களுக்கு அபிப்பிராயம் உண்டு. அதனால் என்னிடம் அன்பு. என் எழுத்திடம் மரியாதை. ஆக, ''இப்படி செய்து பார்த்தால் என்ன?'' என் ஐடியாவை பார்ட்னர்களிடம் கூற, அவர் களும் சம்மதித்தனர். ''கல்லை எறி; மாங் காய் விழுந்தால் சரி. கல், யார் தலையிலும் விழப் போவதில்லையே!''

நான் நேரே சிவாஜியிடம் போனேன். ''வா, தம்பி'' என்றார்.

அமரதீபம் கதையைச் சொன்னேன். ''கதை பிரமாதம்'' என்று தட்டிக் கொடுத் தார்.

''அண்ணே! இதைப் படமாய் எடுக்கப் போறோம். நீங்கதான் ஹீரோ'' என்றேன்.

''சரி'' என்றார்.

ரேட் பற்றி அவர் ஏதும் வாய் திறக்கு முன் நான் முந்திக் கொண்டேன் :

''அண்ணே! எங்க கைல இப்பப் பணம் இல்லே. அதனால் அட்வான்ஸ் கூடக் கொடுக்க முடியாத நிலை. தயவு செய்து உங்க பெயரைப் போட்டு விளம் பரம் கொடுக்க அனுமதி கொடுங்க. விளம் பரத்தைப் பார்த்த உடன் பைனான்ஷிய ருங்க நிச்சயம் பணம் கொடுக்க முன்வரு வாங்க. அப்ப உங்களுக்கு அட்வான்ஸ் கொடுத்திடறோம்.''

சிவாஜி உடனே பதில் சொல்ல வில்லை. யோசிக்க ஆரம்பித்தார்.

அந்த சஸ்பென்ஸை நான் கஷ்டப் பட்டுத் தாங்கிக் கொண்டேன். நீங்களும் தான் ஒரு வாரம் தாங்கிக் கொள்ளுங் களேன்!

மே. வங்கம் ஒரு முன்னுதாரணம்!

வங்காளிகளுக்குத் தங்கள் மொழி யின் மேல் அலாதிப் பற்று உண்டு. தங்கள் பண்பாடு பற்றிக் கர்வமும் உண்டு. ஆனால் அதே சமயத்தில் அவர்கள் பிற மொழிக்காரர்களின் சிறப்புகளைப் பாராட்டத் தயங்குவதில்லை.

கணித மேதை சீனிவாச ராமானுஜத் துக்கும் மேற்கு வங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இருந்தாலும் அவரது நூற்றாண்டு விழாவையொட்டி அவரது துணைவியாருக்குப் பென்ஷன் அளித் துள்ளது மேற்கு வங்க அரசு.

அரசியல் செல்வாக்கற்ற பிறமொழி, பிறநாட்டுக் கலைஞர்களை, அறிஞர் களைக் கௌரவப்படுத்துவதிலும் முன் னணியில் இருக்கிறது மேற்கு வங்கம். இவ்வாறு பாராட்டப்பட்டிருப்பவர்கள் - பாரதி, ஷேக்ஸ்பியர், சார்லி சாப்ளின் முதலியோர்.

மேற்கு வங்க மாத்யமிக் ஸ்கூல் போர்டு நடத்தும் மாத்யமிக் தேர்வில் இந்திய அரசியல் சட்டத்தில் அங்கீ கரிக்கப்பட்டுள்ள மொழிகளுடன் சாந் தால், நேப்பாளி மொழிகளும் முதல் மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. இம் மொழிகளைப் பள்ளி களில் கற்க வசதியில்லாவிட்டால் மாண வர்கள் சொந்த முறையில் படித்து அந்த மொழித் தேர்வு எழுதலாம். மேலும் மாத்யமிக் தேர்வில் மொழி தவிர மற்ற தேர்வுகளை வங்காளி, இந்தி, உருது, ஒரியா, நேப்பாளி, ஆங்கிலம் இந்த ஆறு மொழிகளில் எந்த மொழியிலும் எழுத லாம். இந்தியாவின் வேறெந்த மாநி லத்திலும் இத்தகைய வசதி இருப்ப தாகத் தெரியவில்லை.

- எஸ். கே. எம்.

சின்னச் சின்ன உண்மைகள்



● அமெரிக்காவில் சராசரியாய் ஒரு நிமிடத்துக்குப் பன்னிரண்டு கார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

● ஆமைகளுக்குப் பல்லே கிடையாது.

● பாரிஸ் நகரின் மியூசியத்தில் இருக் கும் 'மோனாலிசா' ஓவியத்தின் இன்றைய மதிப்பு : பத்து கோடி டாலர்கள்.

● உலகில் உள்ள மொத்த நாடுகளின் எண்ணிக்கை 212.

● உலகிலேயே மிக அதிகமாய்ச் சினிமா தயாரிக்கும் நாடு இந்தியா.

● எந்த ஒரு சூரிய கிரகணமும் ஏழு நிமிடம் 58 விநாடிகளுக்கு மேல் நீடிக்காது.

● 1896-ல் ஏதென்சில் நடந்த ஒலிம்பிக்ஸில் மொத்தம் ஒன்பது நாடுகளே பங்கேற்றன.

● ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளைப் பெற்றெடுப்பது அறுபது லட்சத்தில் ஒரு பெண்ணுக்குத்தான் சாத்தியம்.

● தக்காளியை, ஆரம்ப காலத்தில் 'காதல் ஆப்பிள்' என்றே அழைத்தார்கள்.

● அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான



ஜார்ஜ் வாஷிங்டன் மல்யுத்தத்திலும், நீளம் தாண்டுதலிலும் சாம்பியன்.

● ஒரு பென்சிலினால் 35 மைல் நீளக் கோடு வரையலாம்.

● உலகில் இடது கைப் பழக்கம் உடையவர்கள் சுமார் 300 மில்லியன் பேர் இருக்கிறார்கள்.

● காண்டாமிருகத்தின் கர்ப்ப காலம் 560 நாட்கள்.

● கண்ணை மூடிக் கொள்ளாமல் தும்முவது சாத்தியமில்லை.

● ஆங்கில மொழியில் மிக அதிகமாய் உபயோகிக்கப்படும் எழுத்து E. மிகக் குறைவாய் உபயோகிக்கப்படுவது Q.

● மூன்று 25 வாட் பல்புகள் சேர்ந்தால் கூட ஒரு 75 வாட் பல்பின் வெளிச்சத்துக்கு ஈடாகாது.

● கராத்தே என்பதற்கு 'வெறும் கை' என்று பொருள்.

● To insure promptness என்பதன் சுருக்கம்தான் 'டிப்'.

● இத்தாலியில் 13 அதிருஷ்டமான நெம்பராய் கருதப்படுகிறது.

● நெப்போலியனுக்குப் பூனைகளைக் கண்டால் பயம்.

● ஒரே இரவில் 300 அடி நீளத்துக்கு வளை தோண்டப் பெருச்சாளியால் முடியும்.

● உலகில் காளான் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முன்னணி வகிப்பது தைவான்.

● மழை நீரில் வைட்டமின் B12 இருக்கிறது.

● ஓவியர்கள் பயன்படுத்தும் 'இந்தியன் இங்க்' கண்டுபிடிக்கப்பட்டதென்னவோ சைனாவில்தான்.

● ஒட்டகத்தின் முதுகெலும்பு எந்த வளைவுமின்றி, நேரானதுதான்.

● பாஃரைன், குவைத் நாடுகளில் வருமான வரி கிடையாது.

- "501 Facinating facts" என்ற புத்தகத்திலிருந்து

தொகுப்பு : கௌதம் ராம்

(வெளியீடு : புஸ்தக் மகால், தில்லி - 6)

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி, நவம்பர் 16, 1941

ஜவாஹர் பிறந்த தினம்

நவம்பர் 14ஆ பண்டித ஜவாஹர் லால்ஜியின் பிறந்த தினம். இதற்கு முன் எத்தனையோ பிறந்த தினங்களை ஜவாஹர்லால்ஜி பிரிட்டிஷ் சிறைக்குள் கொண்டாடியிருக்கிறார்; பொது ஜனங்களோ தங்கள் இருதய அரண்மனையில் அந்தச் சுபதினத்தைக் கொண்டாடியிருக்கிறார்கள். இவ்வருஷத்து நவம்பர் 14ஐ ஜவாஹர்லால்ஜியின் பிறந்த தினமாகக் கொண்டாடுவதோடு, பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதிர்ஷ்டம் பிறந்த தினமாகவும் கொண்டாட வேண்டுமென்பது அநேகருடைய விருப்பம். இந்த விருப்பம் நிறைவேறியிருந்தால் இதற்குள் ஜவாஹர்லால்ஜி விடுதலையாகியிருப்பார்.



சக்தி கொடுங்கள்!

இந்தியாவில் 40 கோடிப் பேர் இருக்கிறார்கள்; ஆள் பலம் சம்பந்தப்பட்ட வரையில் இங்கே குறைவேயில்லை. ஆகவே, உலக நன்மையை முன்னிட்டு யுத்தத்தை இந்தியாவின் பக்கம் இழுத்துக் கொண்டுதான் ஆக வேண்டுமென்றால் அந்தத் தியாகத்துக்கு நாம் தயாராயிருக்கிறோம். ஆனால் ''அப்படிப்பட்ட கோர யுத்தத்தைச் சமாளிப்பதற்கு வேண்டிய சக்தியைக் கொடுங்கள்'' என்று மட்டும் கேட்கிறோம்.

அந்த சக்தி என்ன சக்தி? எங்கே இருக்கிறது? அது துப்பாக்கியிலுமில்லை, குண்டிலுமில்லை, பீரங்கி- டாங்கியிலுமில்லை. மக்கள் மனத்தில் உண்டாகும் உற்சாகந்தான் அந்த சக்தி. ''நம்முடைய சுதந்திரத்தைக் காக்க நாம் போராடுகிறோம்'' என்ற ஆவேசந்தான் அந்த சக்தி. படை பலம், ஆயுத பலம் எல்லாம் அதிலிருந்து ஏற்படுகிறது.

- தலையங்கத்தின் ஒரு பகுதி


யோகியும் ஞானியும் ஆனவர்



இன்பத்தையும் துன்பத்தையும், நண்பனையும் விரோதியையும் ஒரே நோக்குடன் பார்க்கிறவர்களை யோகிகள் என்றும் ஞானிகள் என்றும் சொல்வது நமது பாரத நாட்டின் மரபு. இந்தக் கொள்கையின்படி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் யோகியும் ஞானியுமாகிறார். தமிழ் நாடு, தமிழ்க் கவிதை, தமிழ் இசை - இவைகளுக்காகவே டி. கே. சி. உயிர் வாழ்கிறார். அரசியலில் பற்று அதிகம் இல்லாதவர்; ஆனாலும் ராஜாஜியின் உற்ற நண்பர். ''இலக்கியத்திலும் கவிதையிலும் டி. கே. சி. என்ன சொல்கிறாரோ, அதுதான் முடிவான வார்த்தை'' என்பது ராஜாஜியின் முடிவு.

- அட்டைப்பட விளக்கம்

பரீட்சார்த்த பாராசூட்



''அடுத்த வருஷத்திலிருந்து இந்தியாவிலேயே பாரசூட் உற்பத்தி செய்யப் படுமென்று தெரிகிறது. இந்திய சர்க்கார் யோசனைப்படி பரீட்சார்த்தமான வேலைகள் நடந்து வருகின்றன.''

- தினசரி

பரீட்சார்த்தமாகத் தயாரிக்கப்படும் பாரசூட்டுகளை வைத்துக் கொண்டு பரீட்சார்த்தமாக யார் இறங்கிப் பார்ப்பார்கள் என்று கேட்கப்படுகிறது.

- ஆகாச வெடி

மேலும் பல 'சாமா'க்கள்

''தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை 'சாமா'க்கள் இருக்கிறார்களோ?'' என்று சென்ற இதழ் உபயகுசலோபரியில் எழுதியிருந்ததல்லவா? ''இதோ நான் ஒருவன் இருக்கிறேன்'' என்று காரைக்குடியிலிருந்து ஒரு ''மணி'' முன் வந்து தேவகோட்டை மகாநாட்டில் அவர் எழுதிய படங்கள் பலவற்றை நமக்கு அனுப்பியிருக்கிறார். சிறு பிள்ளை; முறையாகச் சித்திரம் பயின்றதில்லை. ஆயினும் எவ்வளவு நன்றாக எழுத வந்திருக்கிறது.



● ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் முன் ஜாக்கிரதையாகத் தாம் சொல்ல விரும்பியதை எழுதிக் கொண்டு வந்து படிக்கிறார். பத்திரிகைகளில் தவறான ரிப்போர்ட் வரக் கூடாதென்பதில் அவருக்கு அவ்வளவு கவலை.

தஞ்சாவூர் நாணு


அன்று ஸ்ரீ தியாகப்பிரம்ம மகோத்ஸவத்தில் தஞ்சாவூர் ஸ்ரீ லக்ஷ்மிநாராயண பாகவதரின் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்த போது, அவருக்குப் புதிதாக நாமகரணம் செய்ய வேண்டுமென்ற ஆசை எனக்கு அபாரமாய் உண்டாகி விட்டது. ''தஞ்சாவூர் நாணு'' ''தஞ்சாவூர் நாணு'' என்று வாய்க்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டேன். ஏனென்றால், இவருடைய பாட்டை இனிமேல் அடிக்கடி கேட்க வேண்டி வரலாம். பாட்டைக் கேட்டால் அதைப் பற்றிப் பேசாமலிருக்க முடியுமா? பேசவுந்தான் வேண்டும். அப்படிப் பேசும் போது, ''தஞ்சாவூர் பிரம்மஸ்ரீ லக்ஷ்மிநாராயண பாகவதர்'' என்று முழ நீளம் யார் சொல்லிக் கொண்டிருப்பது? மேலும் இந்தப் பெரிய பெயரைக் கேட்டவுடனே வயது முதிர்ந்து தலை நரைத்துத் தொந்தி பெருத்த பிரம்மாண்டமான உருவம் கண் முன்னால் வந்து நிற்கிறது. உண்மையில் பார்த்தாலோ, பாடகர் சிறு பிள்ளை. ''பிள்ளையாண்டான் பரவாயில்லை; சக்கைப் போடு போடுகிறான்!'' என்று சகஜமாய்ச் சொல்லக்கூடிய பிராயம். ''தஞ்சாவூர் லக்ஷ்மி நாராயண பாகவதரின் சங்கீதக் கச்சேரி நன்றாயிருந்தது'' என்பது எப்படியிருக்கிறது? ''தஞ்சாவூர் நாணு கொன்னுட்டான்!'' என்றால் எப்படியிருக்கிறது?



- ஆடல் பாடல் - கர்நாடகம்

தயவு செய்து சிரியுங்கள்!


முனிஸிபல் சேர்மென் கம்பீரமாக எழுந்து நின்று பின்வருமாறு பேசினார் : ''இதுகாறும் நாம் நமது பைத்தியங்களை வெளியூர் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வந்தோம். அதனால் நமக்கு அதிகம் செலவாகி வந்தது. இவ் வருஷம் நமக்கு ஓர் அனுகூலம் ஏற்பட்டு விட்டது. நாம் நமக்கென்றே ஒரு ஆஸ்பத்திரி கட்டிக் கொண்டு விட்டோம்.''



- கே. சிவம்

புளியமரத்தடியில்...

டாக்டர் ராஜன் வெயில் வேளைக்குப் புளிய மரத் தடியை விரும்பினார். நல்ல வெயில் நேரத்தில், அதாவது, மத்தியானம் இரண்டு, மூன்று மணிக்கு, அவர் புளிய மரத்தடியில் ஒரு ஈஸி சேரில் உட்கார்ந்து மிகவும் கவனத்துடன் எழுதிக் கொண்டிருப்பார்.



அவ்வளவு கவனமாக அவர் எழுதிக் கொண்டிருந்தது தமிழ் வைத்திய புஸ்தகம் என்று அறிந்தேன். எனவே, யாரேனும் தங்களுடைய முழங்கால் சில்லை முறித்துக் கொள்ள விரும்பினால், அல்லது கழுத்துப் பட்டை எலும்பை முறித்துக் கொள்ள ஆசைப்பட்டால் - தயவு செய்து டாக்டர் ராஜன் அவர்களின் புத்தகம் வெளிவரும் வரையில் காத்திருப்பது நல்லது. இம் மாதிரி விபத்துக்களில் உடனே செய்ய வேண்டியது என்ன, அப்புறம் செய்ய வேண்டியது என்ன என்பதெல்லாம் டாக்டர் ராஜனின் வரப் போகும் புத்தகத்தில் மிகத் தெளிவாகக் காணலாம்.

- மூன்று மாதம் கடுங்காவல் - ரா.கி.

டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...



இளம் எழுத்தாளர்களுக்கு...

பிரபல எழுத்தாளர்கள் பல சந்தர்ப்பங்களில் சொன்ன டிப்ஸின் தொகுப்பு :

1. ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. அதற்கு இசைந்த மாதிரி எழுதி அனுப்புங்கள்.

2. எழுதப் போகும் விஷயம் சுவாரஸ்யமானதா என்று யோசியுங்கள். சப்ஜெக்டைத் தேர்ந்தெடுக்க நிறைய நேரம் செலவிடுங்கள்.

3. பல ஆண்டுகளுக்கு முன் வேறு பத்திரிகையில் வந்ததை 'யாருக்குத் தெரியப் போகிறது?' என்று எண்ணி எழுதாதீர்கள். மூலத்தைக் குறிப்பிட்டு விட்டால் தவறில்லை.

4. இது அவசரயுகம். சரளமான, சுவாரசியமான நடையில் சுருக்கமாக எழுதுங்கள்.

5. உங்கள் பொன் குஞ்சை நீங்களே கொஞ்சாதீர்கள். ரசனை உள்ள நண்பர்களின் விமர்சனங்கள் பற்றிச் சிந்தியுங்கள்.

6. ஓரளவு தேர்ச்சி பெறும் வரை எழுதியதை உடனே அனுப்பாதீர்கள். இரண்டு நாள் கழித்துப் படியுங்கள். திருத்தங்கள் எழுத்துக்கு மெருகூட்டும்.

7. தேவையற்ற வாக்கியங்களை, சொற்களை வெட்டி எறியுங்கள்.

8. புளித்துப் போன சொற்றொடர்களை உபயோகிக்காதீர்கள். புதிய பிரயோகங்கள் கவனத்தைக் கவரும் கற்பனையுடன் அமைந்தால் நிமிர்ந்து உட்காரச் செய்யும்.

- அ. ஷண்முகசுந்தரம், சென்னை - 64.

மின் விசிறி வாங்கும் போது...

1. அங்கீகாரம் பெற்ற டீலரிடம் வாங்கவும்.

2. வீட்டினருகே ரிப்பேர் செய்ய வசதி உள்ளதா எனப் பார்க்கவும்.

3. வீட்டிலுள்ள விஷமக்காரக் குழந்தைகளை மனத்தில் கொண்டு மின் விசிறியின் வகையைத் தீர்மானிக்கவும்.



4. எலக்ட்ரோ ஸ்டாடிக் முறையில் வண்ணம் தீட்டப்பட்டதா என்று பார்க்கவும். அது துரு உண்டாவதைத் தடுக்கும்.

5. சமையலறையில் எக்ஸாஸ்ட் மின் விசிறி இருந்தால் கண் எரிச்சலும் நச்சுக் காற்றைச் சுவாசிப்பதும் தடுக்கப்படும்.

6. ஒரே அறையில் கூரை விசிறியும், எக்ஸாஸ்ட் விசிறியும் இருந்தால், எக்ஸாஸ்ட் விசிறி கூரை விசிறியை விட அதிக உயரத்தில் இருத்தல் அவசியம்.

7. நான்கு ப்ளேடுகள் கொண்ட மின் விசிறிகளால் காற்றின் வேகம் அதிகமாவதில்லை.

8. ஒரு மணி நேரத்தில் கீழ்கண்டவற்றால் செலவாகும் மின்சாரம் :

4 ட்யூட் லைட்கள் - 40 - 45 வாட்


1 மின்விசிறி - 68 - 80 வாட்

1 ஃப்ரிஜ் - 180 வாட்

- உத்ரா பாலகிருஷ்ணன்,
சென்னை - 41.

பாதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka



ஜண்டு பாம்

ஜலதோஷம், தலைவலி மற்றும் நோவுகளை நொடியில் நீக்குகிறது.

காலை முதல் மாலை வரை ஓயாத ஒழியாத வேலை. கூடவே ஜலதோஷத்தின் தொல்லையும் சேர்ந்து விட்டால் சங்கடந்தான் எனவேதான் ஜண்டு பாம். ஜலதோஷம் மட்டும் இன்றி தலைவலி. முதுகுவலி. இடுப்பு வலி. உடல்வலி மற்றும் சுளுக்கு வலிகளிலிருந்தும் குணம் அளிக்கிறது.

மற்ற பாம்களோடு ஒப்பிடும்போது ஜண்டுபாம் கூடுதல் வீரியம் கொண்டது. நிறமற்றது. எனவே கறை படியுமோ என்ற பயமில்லை. பிசுபிசுப்பற்றது. அதனால் வீட்டிலோ, வெளியிலோ உபயோகிக்கலாம். நறுமணமும் கொண்டது. கொஞ்சமாக உபயோகித்தாலே போதும். அதனால் சிக்கனமானது. மிருதுவான சருமத்திற்கும் இதமானது. ஆகவேதான் தாய்மார்கள் தங்கள் குடும்பத்தினருக்கு ஜண்டுபாமையே தடவ விரும்புகிறார்கள்.

சீசாவின் மேல் இருக்கும் சிவப்பு சீலைப் பார்த்து வாங்குங்கள்.

5, 10 மற்றும் 30 கிராம்களில் கிடைக்கிறது.



ஜண்டு பாம் வலிகளை நீக்கும் பாம்